மா.கு.ந.(ம)ம.கு.ந.எண்.எப்1/3392/2008

ஆணையாளர் அவர்களின் 18.05.2009 நாளிட்ட குறிப்பு

## 28.05.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண் :79/2009 பொருள் எண். 1

### வயது முதிர்வு ஓய்வு

டாக்டர் திருமதி.கே.திவ்யசுந்தரி,, என்பவர் சென்னை மாநகராட்சியில் மருத்துவ அலுவலராக 14.11.1975 அன்று மகப்பேறு நலப்பிரிவில் பணியமர்த்தப்பட்டார் இவருடைய பிறந்த தேதி 16.05.51, வயது முதிர்வு ஓய்வு பெற வேண்டிய நாள்.31.05.09.

இவரது பணி விவரங்கள் பின்வருமாறு.

| பணியமர்த்தப்பட்ட மற்றும் பதவி உயர்வு பெற்ற விவரம் | பணி உறுதியாக்கம் (ம) பணிவரன்முறை நாள் | தகுதிகாண் பருவம் முடிக்கப்பட்ட நாள் |
|---|---|---|
| 1) மருத்துவ அலுவலர், நாள்.14.11.1975 | 14.11.75<br>அ.ஆ.387/சு(ம) கு.ந.து. நாள்.11.03.80 | 13.01.78<br>அ.ஆ.387/சு(ம) கு.ந.து. நாள்.11.03.80<br>ஆணையரது செயல்முறை ஆணைஎண்.HD.CWS.SN PC.No.B1/C1/42720/75 நாள்.18.05.80 |
| 2) மண்டல அலுவலர் நாள்.16.12.04 | 16.12.04<br>அ.ஆ.(ம) எண்.225 ந.நி.(ம கு.நீ.வ. (மாந3) துறை,நாள்.20.06.06<br>மன்றத்தீர்மான எண்.396/06 நாள்.31.08.06 | -- |
| 3) மாவட்ட குடும்ப நல மருத்துவ அலுவலர் நாள்.18.09.07 | 18.09.07<br>அ.ஆ.(ம) எண்.836 ந.நி.(ம)கு.நீ.வ. (மாந3) துறை,நாள்.16.08.08<br>ஆணையரது செ.மு.ஆணை எண்.மா.கு.ந.எப்4/4429/08 நாள்.29.01.09. | -- |
| 4) துணை திட்ட ஒருங்கிணைப்பாளர் நாள்.17.11.08 | அரசுக்கு பிரேரணை அனுப்பப்பட்டுள்ளது. மா.கு.ந.எண்.எப்4/2026/08 நாள்.11.02.09 | -- |

டாக்டர் திருமதி.கே.திவ்யசுந்தரி, துணை திட்ட ஒருங்கிணைப்பாளர் என்பவர் மீது நாளது தேதி வரையில் விழிப்பு குழுமத்தில் விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என்று விழிப்புத்துறையின் 05.05.09 நாளிட்ட குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் நாளது தேதி வரையில் இவர் சென்னை மாநகராட்சியில் நிதி சார்ந்த இழப்பீடு ஏதும் ஏற்படுத்தவில்லை. தனியர்மீது எவ்வித ஒழுங்கு நடவடிக்கையும் நிலுவையில் இல்லை. நீண்ட கால முன்பணம் ஏதும் பிடித்தம் செய்யவேண்டியது இல்லை, தனியர் மீது தனிப்பட்ட முறையிலோ, கூட்டு பொறுப்பிலோ பொறுப்பாக்கி நிதி இழப்பீடு குறித்த தணிக்கை பத்திகள் நிலுவையில் இல்லை. இவரது நியமனம், ஊதியம் (ம) விடுப்பு குறித்து தணிக்கை தடை ஏதும் இல்லை. இவரின் சம்பள சான்றின்படி எவ்வித பிடித்தங்களும் செய்ய வேண்டியதில்லை. சென்னை மாநகராட்சி குடியிருப்பு ஏதும் ஒதுக்கி தரப்படவில்லை என்றும் நிதி இழப்பீடு குறித்த தணிக்கை பத்திகள் நிலுவையில் இல்லை என சான்றளிக்கப்படுகிறது. சென்னை மாநகராட்சியில் இவருடைய பதவி 1பி நிலை அலுவலர் என்பதால் இவரை பணியிலிருந்து ஓய்வு பெற மன்றத்தின் அனுமதி பெறவேண்டும்.

**மா.கு.ந.(ம)ம.கு.ந.எண்.எப்1/3392/2008**

எனவே, டாக்டர் திருமதி.கே.திவ்யசுந்தரி, துணை திட்ட ஒருங்கிணைப்பாளர், மாவட்ட குடும்ப நலத்துறை என்பவரை நிதி சம்பந்தப்பட்ட தணிக்கை தடைகளால் மாநகராட்சிக்கு நிதி இழப்பீடு மற்றும் நீண்ட கால முன்பணம் பெற்று தீர்வு செய்யப்படாமை ஆகிய காரணங்களால் நிதி இழப்பீடு நிலுவையில் இருப்பது ஆகியவைகள் பின்னர் தெரியவரின் அவைகளுக்கு தனியரை பொறுப்பாக்கி அத்தொகைகளை இவரது ஒய்வூதிய பயன்களிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைகளுக்குட்பட்டு இவரை **31.05.2009** அன்று பிற்பகல் வயது முதிர்வு ஓய்வில் செல்ல நியமனக்குழு மூலம் மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:மா.கு.ந.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**மா.கு.ந.(ம)ம.கு.ந.எண்.எப்1/1645/2009**
**ஆணையாளர் அவர்களின் 18.05.2009 நாளிட்ட குறிப்பு**

**28.05.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :80/2009 பொருள் எண். 2

**வயது முதிர்வு ஓய்வு**

டாக்டர் திருமதி. எம்.அகமத் ஜான் பேகம், என்பவர் சென்னை மாநகராட்சியில் மருத்துவ அலுவலராக 17.12.1984 அன்று மகப்பேறு நலப்பிரிவில் பணியமர்ந்தார். இவருடைய பிறந்த தேதி 01.06.51, வயது முதிர்வு ஓய்வு பெற வேண்டிய நாள்.31.05.09.

இவரது பணி விவரங்கள் பின்வருமாறு.

| பணியமர்த்தப்பட்ட பதவி (ம) பதவி | பணி உறுதியாக்கம் (ம) பணிவரன்முறைப்படுத்தப்பட்ட தேதி | தகுதிகாண் பருவம் முடிக்கப்பட்ட தேதி |
|---|---|---|
| மருத்துவ அலுவலர், நாள்.17.12.1984 | 17.12.84<br>அ.ஆ.806/சு(ம) கு.ந.து. நாள்.30.05.91<br>சிறப்பு அதிகாரி மன்றத் தீர்மானம் எண்.1444/92, நாள்.06.08.92 ஆணையரது செ.மு.ஆணை எண்.மா.கு.ந. எண்.எப்4/2913/83, நாள்.03.09.92 | 17.12.86<br>அ.ஆ.806/சு(ம) கு.ந.து. நாள்.30.05.91<br>சிறப்பு அதிகாரி மன்றத் தீர்மானம் எண்.1444/92, நாள்.06.08.92<br>ஆணையரது செ.மு.ஆணை எண்.மா.கு.ந. எண்.எப்4/2913/83, நாள்.03.09.92 |

டாக்டர் திருமதி.எம்.அகமத் ஜான் பேகம், மருத்துவ அலுவலர் என்பவர் மீது நாளது தேதி வரையில் விழிப்பு குழுமத்தில் விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என்று விழிப்புத்துறையின் 08.05.09 நாளிட்ட குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் நாளது தேதி வரையில் இவர் சென்னை மாநகராட்சியில் நிதி சார்ந்த இழப்பீடு ஏதும் ஏற்படுத்தவில்லை. தனியர் மீது எவ்வித ஒழுங்கு நடவடிக்கையும் நிலுவையில் இல்லை. நீண்ட கால முன்பணம் ஏதும் பிடித்தம் செய்யவேண்டியது இல்லை, இவர் மீது தனிப்பட்ட முறையிலோ, கூட்டு பொறுப்பிலோ பொறுப்பாக்கி நிதி இழப்பீடு குறித்த தணிக்கை பத்திகள் நிலுவையில் இல்லை. இவரது நியமனம் ஊதியம் (ம) விடுப்பு குறித்து தணிக்கை தடை ஏதும் இல்லை. தனியரின் சம்பள சான்றின்படி எவ்வித பிடித்தங்களும் செய்ய வேண்டியதில்லை. சென்னை மாநகராட்சி குடியிருப்பு ஏதும் ஒதுக்கி தரப்படவில்லை என்றும் நிதி இழப்பீடு குறித்த தணிக்கை பத்திகள் நிலுவையில் இல்லை என சான்றளிக்கப்படுகிறது. சென்னை மாநகராட்சியில் இவருடைய பதவி 2 ஆம் நிலை ஆகும். எனவே இவரை பணியிலிருந்து ஓய்வு பெற மன்றத்தின் அனுமதி பெறவேண்டும்.

எனவே, டாக்டர் திருமதி.எம்.அகமத் ஜான் பேகம், மருத்துவ அலுவலர், மாவட்ட குடும்ப நலத்துறை என்பவரை நிதி சம்பந்தப்பட்ட தணிக்கை தடைகளால் மாநகராட்சிக்கு நிதி இழப்பீடு மற்றும் நீண்ட கால முன்பணம் பெற்று தீர்வு செய்யப்படாமை ஆகிய காரணங்களால் நிதி இழப்பீடு நிலுவையில் இருப்பது ஆகியவைகள் பின்னர் தெரியவரின் அவைகளுக்கு தனியரை பொறுப்பாக்கி அத்தொகைகளை அவரது ஒய்வூதிய பயன்களிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைகளுக்குட்பட்டு அவரை 31.05.2009 அன்று பிற்பகல் முதல் வயது முதிர்வு ஓய்வில் செல்ல நியமனக்குழு மூலம் மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:மா.கு.ந.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ—18. மன்றச் செயலாளர்

**ம.க.கு.ந.க.எண்.அ2/2307/2009**
**ஆணையாளர் அவர்களின் 18.05.2009 நாளிட்ட குறிப்பு**

**28.05.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :81/2009 பொருள் எண். 3

**வயது முதிர்வு ஓய்வு**

திரு.வீ. தட்சணாமூர்த்தி, தலைமை கணக்கு அலுவலர் அவர்கள் 30.06.2009 அன்று பிற்பகல் வயது முதிர்வின் காரணமாக பணியிலிருந்து ஓய்வு பெறவுள்ளார்.

இது குறித்து சமர்ப்பிப்பது யாதெனில் தனியர் வகித்து வரும் தலைமை கணக்கு அலுவலர் பதவியானது வகுப்பு–1Aன் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளது. எனவே, அன்னாரை பணியிலிருந்து ஓய்வு பெற அனுமதிக்க மன்றத்தின் ஒப்புதல் பெற்று அரசின் ஆணை பெறப்பட வேண்டும்.

தனியர் சென்னை மாநகராட்சியில் இளநிலை உதவியாளராக (LDC)23.10.1973 அன்று பணியில் சேர்ந்தார். அப்பதவியில் 23.10.1975 அன்று தகுதிகாண் பருவம் முடித்தவராக அறிவிக்கப்பட்டுள்ளார். பின்னர் உதவியாளர், பிரிவு மேலாளர், கண்காணிப்பாளர், ஆகிய பதவிகளில் பதவி உயர்வு பெற்று பணியாற்றியுள்ளார். அப்பதவிகளில் முறையே பணிவரன்முறைப்படுத்தப்பட்டு பணிப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

அதன் பின்னர், அன்னார் 14.01.2003 பிற்பகல் முதல் உதவி கணக்கு அலுவலர் பதவியில் பதவி உயர்வு பெற்று அரசாணை (ப) எண்.525, ந.நி.ம.கு.வ. துறை நாள்.29.12.2006ன்படி அரசின் உறுதியாக்கம் செய்யப்பட்டதை தொடர்ந்து 14.01.2003 பிற்பகல் முதல் உதவி கணக்கு அலுவலர் பதவியில் பணிவரன்முறைப்படுத்தப்பட்டுள்ளது.

தற்போது அரசாணை (ப) எண்.72, ந.நி.ம.கு.வ.(மாந.3) துறை நாள்.24.02.2009ன்படி தனியர் தலைமை கணக்கு அலுவலராக பணி நியமனம் செய்யப்பட்டதை தொடர்ந்து சென்னை மாநகராட்சி ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை பொ.து.ந.க.எண்.ஈ1/20152/07 நாள்.27.02.2009ன்படி 02.03.2009 பிற்பகல் முதல் தலைமை கணக்கு அலுவலர் பதவியில் சேர்ந்து தொடர்ந்து பணியாற்றி வருகிறார்.

தனியர் மீது இதுநாள் வரை மத்திய கணக்கு குழுமத்தில் துறை ரீதியாக ஒழுங்கு நடவடிக்கை, விசாரணை மற்றும் தண்டனை ஏதும் நிலுவையில் இல்லை என்றும் மத்திய கணக்கு குழுமத்தால் இது நாள் வரை பெறப்பட்ட 2005–06 தணிக்கை அறிக்கை மற்றும் தணிக்கை சீட்டுகளின்படி அன்னாரை தனிப்பட்ட முறையில் பொறுப்பாக்கும் தணிக்கை தடைகள் நிலுவையில் ஏதும்இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னை மாநகராட்சி, கல்வித்துறையில் கண்காணிப்பாளராக பணிபுரிந்த காலத்தில் அன்னார் மீது இதுவரையில் கிடைக்கப்பெற்ற தணிக்கை அறிக்கைகளில் அன்னாரை பொறுப்பாக்கும் விதமாக எந்த ஒரு தணிக்கை தடைகளோ மற்றும் ஒழுங்கு நடவடிக்கைகளோ நிலுவையில் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், விழிப்பு அலுவலர், கூட்டுறவு சங்கம் மற்றும் பொதுத்துறையிலிருந்து அறிக்கை பெறப்படவேண்டும்.

எனவே, திரு. வீ.தட்சணாமூர்த்தி, தலைமை கணக்கு அலுவலர், அவர்களை வழக்கமான நிபந்தனைகளுக்குட்பட்டு 30.06.2009 அன்று பிற்பகல் முதல் வயது முதிர்வு ஓய்வு பெற அனுமதிக்க அரசிற்கு செயற்குறிப்பு அனுப்ப நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:ம.க.கு.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**மா.கு.ந.(ம)ம.கு.ந.எண்.எப்1/4894/2008**
**ஆணையாளர் அவர்களின் 12.02.2009 நாளிட்ட குறிப்பு**

**28.05.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :82/2009 பொருள் எண்.4

**வயது முதிர்வு ஓய்வு பின்னேற்பு அனுமதி**

டாக்டர் திருமதி.எஸ்.ராஜேஸ்வரி, அவர்கள் சென்னை மாநகராட்சியில் மருத்துவ அலுவலராக 18.02.1985 அன்று மகப்பேறு நலப்பிரிவில் பணியமர்ந்தார். இவருடைய பிறந்த தேதி 03.01.1951 வயது முதிர்வு ஓய்வு நாள். 31.01.2009.

இவர் கீழ்கண்டுள்ளபடி பணியில் சேர்ந்து பணிவரன்முறை (ம) தகுதிகாண் பருவம் முடித்துள்ளார்.

| பணியில் சேர்ந்த நாள் | பணி உறுதியாக்கம் (ம) பணிவரன்முறை நாள் | தகுதிகாண் பருவம் முடிக்கப்பட்ட நாள். |
|---|---|---|
| மருத்துவ அலுவலர், நாள்.18.02.1985 | 19.02.1985 மன்றத்தீர்மான எண்.1251/92, நாள்.17.07.1992 | 19.02.1987 முற்பகல் அ.ஆ.1279 சு.கு.ந.து. நாள்.29.07.1992 மன்றத்தீர்மான எண்.1251/92, நாள்.17.07.1992 ஆணையரது செயல்முறை ஆணை எண். மா.கு.ந.(ம)ம.கு.ந.எண்.எண்.4/ 3759/89, நாள்.29.07.1992 |

தனியர் மீது விழிப்பு குழுமத்தில் விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என்று விழிப்புத்துறையின் 31.12.2008 நாளிட்ட குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் இவர் சென்னை மாநகராட்சியில் நிதி சார்ந்த இழப்பீடு ஏதும் ஏற்படுத்தவில்லை. தனியர் மீது எவ்வித ஒழுங்கு நடவடிக்கையும் நிலுவையில் இல்லை. நீண்ட கால முன்பணம் ஏதும் பிடித்தம் செய்யவேண்டியது இல்லை, அன்னார் மீது தனிப்பட்ட முறையிலோ, கூட்டு பொறுப்பிலோ பொறுப்பாக்கி நிதி இழப்பீடு குறித்த தணிக்கை பத்திகள் நிலுவையில் இல்லை. இவரது நியமனம் ஊதியம்(ம) விடுப்பு குறித்து தணிக்கை தடை ஏதும் இல்லை. அன்னாரது சம்பள சான்றின்படி எவ்வித பிடித்தங்களும் செய்ய வேண்டியதில்லை. சென்னை மாநகராட்சி குடியிருப்பு ஏதும் ஒதுக்கி தரப்படவில்லை என்றும் நிதி இழப்பீடு குறித்த தணிக்கை பத்திகள் நிலுவையில் இல்லை என சான்றளிக்கப்படுகிறது. மேலும், வீடு கட்ட பெற்றுள்ள முன்பணம் ரூ.3,75,000/–த்தில் மாத ஊதியத்தில் பிடித்தம் செய்த பகுதி தொகையை தவிர முழு தொகையும் செலுத்தப்படாத காரணத்தால் சென்னை மாநகராட்சிக்கு செலுத்த வேண்டிய தொகையை கணக்கிட்டு தனியருக்கு அனுமதிக்கப்படும் பணிக்கொடை தொகையில் பிடித்தம் செய்து கொள்ளப்படும்.

காலதாமதத்தினை தவிர்க்கும் பொருட்டு மன்றத்தின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டு 31.01.2009 அன்று பிற்பகல் முதல் டாக்டர் திருமதி.எஸ்.ராஜேஸ்வரி, மருத்துவ அலுவலர், மாவட்ட குடும்ப நலத்துறை அவர்கள் வயது முதிர்வு காரணமாக பணியிலிருந்து ஓய்வு பெற 30.01.2009 தேதியிட்டு ஆணை வழங்கப்பட்டது.

எனவே, டாக்டர் திருமதி.எஸ்.ராஜேஸ்வரி, மருத்துவ அலுவலர், மாவட்ட குடும்ப நலத்துறை, அவர்களை மன்றத்தின் பின்னேற்புக்குட்பட்டு 31.01.2009 அன்று பிற்பகல் முதல் வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதி வழங்கியதற்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி நியமனக்குழு மூலமாக வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

‘‘இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது’’
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:மா.கு.ந.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

மா.அ5.ந.க.எண்எச்1/3062/08
ஆணையாளர் அவர்களின் 09.03.2009 நாளிட்ட குறிப்பு

**28.05.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :83/2009 பொருள் எண். 5

**வயது முதிர்வு ஓய்வு பின்னேற்பு அனுமதி**

சென்னை மாநகராட்சி சுகாதாரத்துறை மண்டலம்–5ல் மருத்துவ அலுவலராக பணிபுரிந்த டாக்டர் மாலதி ஜெசிந்தா ஜெயக்குமார், என்பவர் கடந்த 31.10.2008 அன்று வயது முதிர்வு அடிப்படையில் மன்றத்தின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டு ஓய்வு பெற்றார்.

இவர் சென்னை மாநகராட்சியில் உதவி மருத்துவ அலுவலராக 31.05.1979 அன்று பணி நியமனம் செய்யப்பட்டு பின்னர் மருத்துவ அலுவலராக 15.09.1982 முதல் பணிபுரிந்துள்ளார். இவர் 31.10.2008 வரை 29 ஆண்டுகள் வரை பணிமுடித்துள்ளார். இவர் மீது துறை சம்பந்தமான நடவடிக்கை மற்றும் விசாரணை ஏதுவும் நிலுவையில்லை.

தனியர் மீது நீண்ட காலமுன்பண நிலுவை தொகைகள் எதுவும் நிலுவையில்லை. இவர் சென்னை மாநகராட்சி குடியிருப்பில் தங்கவில்லை. இவர் சென்னை மாநகராட்சி அலுவலர் கூட்டுறவு சங்கத்திற்கு கடன் நிலுவை தொகை எதுமில்லை. மேலும் இவர் மீது தணிக்கை தடைகள் உள்ளனவா என்பது குறித்து விவரங்கள் முழுமையாக பெறப்படவில்லை. இருப்பினும் இவருக்கு வழங்கப்படும் பணிக்கொடை தொகையில் 25 விழுக்காடு பிடித்தம் செய்யப்பட்டு தணிக்கை தடைகள் எதுவும் இல்லை என சான்றிதழ் பெற்ற பின்னர் பிடித்தம் செய்யப்படவுள்ள பணிக்கொடை தொகை திரும்ப வழங்கலாம்.

டாக்டர் மாலதி ஜெசிந்தா ஜெயக்குமார், மருத்துவ அலுவலர், மண்டலம்–5, என்பவர் காலதாமத்தினை தவிர்க்கும் பொருட்டு மன்றத்தின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டு 31.10.2008 அன்று பிற்பகல் முதல் வயது முதிர்வு அடிப்படையில் ஓய்வு பெற அனுமதி வழங்கியமைக்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி நியமனக்குழு மூலமாக வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

‘‘இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது’’
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:ம.அ.5.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**ம.அ5.ந.க.எண்எச்1/2025/2006**

**ஆணையாளர் அவர்களின் 24.03.2009 நாளிட்ட குறிப்பு**

**28.05.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :84/2009 பொருள் எண்.6

**வயது முதிர்வு ஓய்வு பின்னேற்பு அனுமதி**

டாக்டர்.ஜி.உமாராணி, மருத்துவ அலுவலர், மண்டலம்–5, என்பவர் கடந்த 28.02.2007 அன்று வயது முதிர்வு அடிப்படையில் ஓய்வில் செல்ல தகுதி அடைந்தார்.

தனியர் சென்னை மாநகராட்சியில் 01.06.1979 அன்று உதவி அறுவை மருத்துவர் பணியில் சேர்ந்து பணி வரன்முறைப்படுத்தப்பட்டு 13.09.1981 முதல் தகுதிகாண் பருவம் முடித்தவராக அறிவிக்கப்பட்டு 15.09.1982 முதல் சுகாதாரத்துறை மருந்தக பணியமைப்பின் கீழ் மருத்துவ அலுவலராக நியமிக்கப்பட்டுள்ளார். இவரது தாய்மொழி தமிழ் ஆகும்.

இவர் சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான குடியிருப்பில் வசிக்கவில்லை. மாநகராட்சிக்கு நிலத்தை குத்தகை எதுவும் எடுக்கவில்லை. இவர் மீது துறை சார்ந்த ஒழுங்கு நடவடிக்கை / விசாரணை எதுவும் நிலுவையில்லை.

தனியர் மீது நீண்ட காலமுன்பண பாக்கித் தொகைகள் எதுவும் நிலுவையில்லை. சென்னை மாநகராட்சி அலுவலர் கூட்டுறவு சங்கத்தில் இவர் மீது கடன் தொகை எதுவும் நிலுவையில்லை. இவர் மீது நிதி இழப்பீட்டிற்கான தணிக்கை தடைகள் ஏதேனும் இருப்பது பின்னர் தெரியவரின் அதனை இவரது பணிக்கொடை தொகையில் பிடித்தம் செய்யப்படும்.

டாக்டர்.ஜி.உமாராணி, மருத்துவ அலுவலர், மண்டலம்–5, என்பரை காலதாமத்தினை தவிர்க்கும் பொருட்டு 28.02.2007 அன்று பிற்பகல் முதல் நிதி சம்பந்தப்பட்ட தணிக்கை தடைகளால் சென்னை மாநகராட்சிக்கு நிதி இழப்பீடு இருப்பது மற்றும் நீண்ட கால முன்பணம் சரி செய்யப்படாமல் நிலுவையில் இருப்பது பின்னர் தெரியவரின், அவைகளுக்கு இவரை பொறுப்பாக்கி அத்தொகையினை இவரது ஓய்வூதிய பயன்களிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்ளுக்குட்பட்டும் மற்றும் மன்றத்தின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டும் வயதுமுதிர்வு ஓய்வுபெற 27.02.2007 தேதியிட்டு ஆணை வழங்கப்பட்டதற்கும் மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

“இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:ம.அ.5.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

மா.கு.ந. (ம) ம.கு.ந.எண்.எப்4/3206/2008
ஆணையாளர் அவர்களின் 28.02.2009 நாளிட்ட குறிப்பு

28.05.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண் :85/2009 பொருள் எண்.7

தன்விருப்ப ஓய்வு பின்னேற்பு அனுமதி

டாக்டர் திருமதி.சுதாசாமுவேல், மருத்துவ அலுவலர், கல்யாணி நலவாழ்வு மையம், மீர்சாகிப்பேட்டை மண்டலம், அவர்கள் தன் குடும்ப சூழ்நிலை காரணமாக தன்விருப்ப பணி ஓய்வு வேண்டி, வணக்கத்திற்குரிய மேயர் அவர்களுக்கு தனது வேண்டுகோளை சமர்ப்பித்துள்ளார்.

தனியர் 30.01.1989ல் சென்னை மாநகராட்சி மாவட்ட குடும்ப நலத்துறையில் மருத்துவ அலுவலராக பணியில் சேர்ந்துள்ளார். இவரது பணியை அரசாணை 679 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (மாந3) நாள்.28.11.2000 மற்றும் சென்னை மாநகராட்சி ஆணையரது செயல்முறை ஆணை எண்.எப்4/4913/91, நாள்.19.12.2000 (மற்றும்)27.07.2001 முறையே 30.01.1989 முதல் பணிவரன்முறைப்படுத்தியும் 09.02.1991 முதல் தகுதிகாண்பருவம் முடித்தவராகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. தனியருக்கு தற்போது வயது 53 ஆண்டுகள் பூர்த்தியடைந்துள்ளது. இவரை 11.02.2009 அன்று பிற்பகல் பணியிலிருந்து விடுவித்ததால் 20 ஆண்டுகள் பணி நிறைவு செய்துள்ளார்.

அடிப்படை விதி 56(3)(a)ன்படி ஒருவர் தன்விருப்ப ஓய்வு பெறுகிறார் எனில் உரியவர் 50 வயது பூர்த்தி செய்திருக்க வேண்டும் (அ) 20 ஆண்டுகள் பணிநிறைவு செய்திருக்க வேண்டும்.

அடிப்படை விதியின்படி தனியர் தன்விருப்ப ஓய்வு பெற தகுதியுடையவராகிறார்.

1. இவர் மீது எவ்வித ஒழுங்கு நடவடிக்கையும் துறையில் நிலுவையில் இல்லை.
2. இவர் மீது சென்னை மாநகராட்சி சம்பந்தமான நீதி மன்ற வழக்குகள் நிலுவையில் இல்லை.
3. இவர் மீது சென்னை மாநகராட்சி விழிப்பு குழுமத்திலோ மாநில விழிப்பு குழுமத்திலோ எவ்வித ஒழுங்கு நடவடிக்கையும் இல்லை.
4. இவர் சென்னை மாநகராட்சிக்கு செலுத்த வேண்டிய கடன் தொகை ஏதுமில்லை. இவர் சென்னை மாநகராட்சி அலுவலர் கூட்டுறவு சங்கத்தில் உறுப்பினர் இல்லை.
5. இவர் மீது சென்னை மாநகராட்சியில் எவ்வித ஒப்பந்தமும் நிலுவையில்லை இல்லை.

தனியர் நீண்ட கால/ குறுகிய கால முன்பணம் ஏதும் நிலுவையில் இல்லை. தனியர் மீது தனியான தணிக்கை தடை ஏதும் இல்லை என்று சமர்ப்பிக்கப்படுகிறது. இவருக்கு சென்னை மாநகராட்சி குடியிருப்பு ஏதும் ஒதுக்கப்படவில்லை. மேலும், தனியரின் பணிப்பதிவேட்டின் முன் தணிக்கை செய்து அதற்குரிய அறிக்கையும் சம்பள சான்றிதழும் கோப்பில் இணைக்கப்பட்டுள்ளது.

மேலும், தனியரின் பதவி வகுப்பு 2ன் கீழ் வருவதால் தனியரின் கோரிக்கையினை ஏற்க மன்றத்தின் அனுமதி பெறவேண்டும். ஆனால் தனியரை 11.2.2009 பிற்பகல் முதல் பணியிலிருந்து விடுவிக்க போதிய கால அவகாசம் இல்லாததால் அவசியம் மற்றும் அவசரம் கருத்தில் கொண்டு மன்றத்தின் பின்னேற்பு அனுமதியினை எதிர்நோக்கி தனியரின் தன்விருப்ப ஓய்வு கோரிக்கை ஏற்று 11.02.2009 பிற்பகல் முதல் பணியிலிருந்து விடுவிக்கப்பட்டார்.

எனவே, டாக்டர் திருமதி சுதாசாமுவேல், மருத்துவ அலுவலர் கல்யாணி நலவாழ்வு மையம் மீர்சாகிப்பேட்டை மண்டலம், மாவட்ட குடும்ப நலத்துறை, என்பவரை நிதி சம்பந்தப்பட்ட தணிக்கை தடைகளால் சென்னை மாநகராட்சிக்கு நிதி இழப்பீடு இருப்பது மற்றும் நீண்ட கால முன்பணம் சரிசெய்யாமல் இருப்பது பின்னர் தெரியவரின் அவைகளுக்கு இவரை பொறுப்பாக்கி, இவரது ஓய்வூதிய பயன்களில் இருந்து பிடித்தம் செய்யப்படும் என்கிற நிபந்தனைகளுக்குட்பட்டும், இவரால் சென்னை மாநகராட்சிக்கு வேறு எந்த விதத்திலாவது பணி சம்மந்தமான நிலுவை தொகை இருப்பின் பணிக்கொடையிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைகளுக்கு உட்பட்டும் மன்றத்தின் பின்னேற்பிற்குட்பட்டும் 11.02.2009 அன்று பிற்பகல் தன்விருப்ப ஓய்வில் செல்லஅனுமதி வழங்கியதற்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி நியமனக்குழு மூலமாக வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

“இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:மா.கு.ந.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**பொ.து.ந.க.எண்.பி10/8856/09**
**ஆணையாளர் அவர்களின் 05.05.2009 நாளிட்ட குறிப்பு**

**28.05.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :86/2009 பொருள் எண்.8

**ஓய்வூதியம்**

திரு.எம்.ரகுபதி, மேற்பார்வை பொறியாளர், இயந்திர பொறியியல் துறை அவர்கள் பணியிலிருந்து 28.02.2009 முதல் வயது முதிர்வு ஓய்வு பெற்றார். தனியர் 33 வருடங்கள் 10 மாதங்கள் 10 நாட்கள் (அ) 66 அரை ஆண்டுகள் தகுதிப்பணி புரிந்தமையால், துணை இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கைத்துறை, நி.மு.எண்.283/எ4/2009, நாள்.20.02.2009 சான்றின்படி 01.03.2009 முதல் வயது முதிர்வு ஓய்வூதியமாக மாதம் ரூ.10,669/— இறப்பு மற்றும் ஓய்வுகாலப் பணிக்கொடையாக ரூ.3,50,000/—மற்றும் ஓய்வூதியத்திலிருந்து ரூ.3,556/— தொகுத்துப் பெறவும், அவ்வாறு தொகுத்துப் பெறும் மதிப்பீட்டுத் தொகை ரூ.4,46,350/— பெறவும் தகுதியுடையவராகிறார்.

ஓய்வூதியரின் காலத்திற்குபின் அன்னாரது வாரிசுதாரர் மனைவி திருமதி.ஆர்.சுந்தரி, அவர்கள் உயர்த்தப்பட்ட குடும்ப ஓய்வூதியமாக மாதம் ரூ.10,669/—19.02.2016 வரையிலும், சாதாரண குடும்ப ஓய்வூதியம் 20.02.2016 முதல் ரூ.6,402/— பெறவும் தகுதியுடையவராகிறார்.

மேற்கண்ட ஓய்வூதியப் பயன்கள் வழங்குதல் சம்பந்தமாக துணை இயக்குநர், உள்ளாட்சி நிதி தணிக்கைத்துறை, அவர்களின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

இவர் சென்னை மாநகராட்சி வகுப்பு—1(பி) அலுவலரானதால் மன்றத்தின் அனுமதி பெறப்பட்ட பின்னரே மேற்கண்ட ஓய்வூதியப் பயன்கள் வழங்கப்பட வேண்டும்.

ஆகையால், திரு.எம்.ரகுபதி, மேற்பார்வை பொறியாளர், இயந்திர பொறியியல் துறை, அவர்களுக்கு 01.03.2009 முதல் ஓய்வூதியமாக மாதம் ரூ.10,669/— இறப்பு மற்றும் ஓய்வுகாலப் பணிக்கொடையாக ரூ.3,50,000/—ல் தணிக்கைத்தடையின் காரணமாக 25 விழுக்காடு தொகையான ரூ.87,500/— பிடித்தம் செய்து மீத தொகையான ரூ.2,62,500/— வழங்கவும், தனியரின் மீதுள்ள தணிக்கைத்தடைகளை நிவர்த்தி செய்தபின்பு பணிக்கொடையில் பிடித்தம் செய்யப்பட்ட 25 விழுக்காடு தொகையை விடுவிக்கவும், மற்றும் ஓய்வூதியத்திலிருந்து ரூ.3,566/— (ரூபாய் மூவாயிரத்து ஐநூற்று ஐம்பத்தி ஆறு மட்டும்) தொகுத்ததுப் பெறவும், அவ்வாறு தொகுத்துப் பெறும் மதிப்பீட்டுத் தொகை ரூ.4,46,350/— (ரூபாய் நான்கு லட்சத்து நாற்பத்தி ஆறாயிரத்து முன்னூற்று ஐம்பது மட்டும்) வழங்கவும், தொகுத்துப் பெறுவதால் அவரது ஓய்வூதியம் ரூ.10,669/—லிருந்து ரூ.7,113/—ஆக குறைத்து வழங்கவும் ஓய்வூதியரின் காலத்திற்குபின் அன்னாரது மனைவி திருமதி.ஆர். சுந்தரி, அவர்கள் உயர்த்தப்பட்ட குடும்ப ஓய்வூதியமாக மாதம் ரூ.10,669/— 19.02.2016 வரையிலும், சாதாரண குடும்ப ஓய்வூதியம் 20.02.2016 முதல் ரூ.6,402/— வழங்கவும், நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ—18. மன்றச் செயலாளர்

**பொ.து.ந.க.எண்.பி4/8988/09**

**ஆணையாளர் அவர்களின் 15.04.2009 நாளிட்ட குறிப்பு**

**28.05.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :87/2009 பொருள் எண். 9

**ஒய்வூதியம்**

திரு.நம்மாள்வார், தலைமை கணக்கு அலுவலர், மத்திய கணக்கு துறை, அவர்கள் கடந்த 31.12.2007 பிற்பகல் முதல் வயது முதிர்வு காரணமாக ஓய்வு பெற்றார். தனியருக்கு ஏற்கனவே ஓய்வூதியம் மற்றும் இதர பயன்கள் வழங்கப்பட்டது.

உள்ளாட்சி நிதி தணிக்கைத்துறையின் கடித எண்.நி.மு.எண்.0615/எ4/2009, நாள்.23.03.2009 நாளிட்ட குறிப்பில் திருத்திய ஓய்வூதிய பயன்களின் விவரம் பின்வருமாறு

வயது முதிர்வு திருத்திய ஓய்வூதியம் ரூ.8232/– 01.01.2008 முதல் ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட ஓய்வூதியம் தொகை ரூ.7650/–ஐ நேர் செய்து மீதம் வழங்கவும், தொகுப்புத் தொகை ரூ.3,44,427/–ஐ ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட தொகை ரூ.3,20,076/–ஐ நேர் செய்து மீதம் தொகை ரூ.24351/– வழங்கவும், ஓய்வூதியரின் காலத்திற்குப்பின் அன்னாரது மனைவி திருமதி.எம்.ஜீவரத்தினம், என்பவருக்கு குடும்ப ஓய்வூதியம் ரூ.8232/– (27.12.2014 முடிய) ரூ.4939/– (28.12.2014 முதல்) வழங்கவும் அனுமதிக்கப்பட்டுள்ளது.

அன்னார் சென்னை மாநகராட்சி பணியில் வகுப்பு–1ஏ அலுவலர் என்பதால் மாமன்றத்தின் ஒப்புதல் பெறப்பட்ட பின்பு ஓய்வூதியப்பயன்கள் வழங்கப்பட வேண்டும்.

எனவே, 23.03.2009 நாளிட்ட தணிக்கைச்சான்றின்படி தனியருக்கு திருத்திய ஓய்வூதியப்பயன்கள் வழங்க நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**பொ.து.ந.க.எண்.பி4/8985/09**
**ஆணையாளர் அவர்களின் 08.04.2009 நாளிட்ட குறிப்பு**

**28.05.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :88/2009 பொருள் எண்.10

**ஓய்வூதியம்**

திருமதி.ச.ஜெயகுமாரி, தலைமை கணக்கு அலுவலர், மத்திய கணக்கு குழுமம், அவர்கள் கடந்த 29.02.2008 பிற்பகல் முதல் வயது முதிர்வு காரணமாக ஓய்வு பெற்றார். தனியருக்கு ஏற்கனவே ஓய்வூதியம் மற்றும் இதர பயன்கள் வழங்கப்பட்டது.

உள்ளாட்சி நிதி தணிக்கைத்துறையின் கடித எண்.நி.மு.எண்.0616/எ4/2009, நாள்.23.03.2009 நாளிட்ட குறிப்பில் தனியருக்கு அனுமதிக்கப்பட்ட திருத்திய ஓய்வூதிய பயன்களின் விவரம் பின்வருமாறு :–

வயது முதிர்வு திருத்திய ஓய்வூதியம் ரூ.8232/– 01.03.2008 முதல் ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட ஓய்வூதியம் தொகை ரூ.7650/–ஐ நேர் செய்து மீதம் வழங்கவும், தொகுப்புத் தொகை ரூ.3,44,427/–ஐ ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட தொகை ரூ.3,20,076/–ஐ நேர் செய்து மீதம் தொகை ரூ.24351/– வழங்கவும், ஓய்வூதியரின் காலத்திற்குப்பின் அன்னாரது கணவர் திரு.எம்.சி. லஷ்மணன், என்பவருக்கு குடும்ப ஓய்வூதியம் ரூ.8232/– (09.02.2015 முடிய) ரூ.4929/– (10.02.2015 முதல்) வழங்கவும் அனுமதிக்கப்பட்டுள்ளது.

அன்னார் சென்னை மாநகராட்சி பணியில் வகுப்பு–1ஏ அலுவலர் என்பதால் மாமன்றத்தின் ஒப்புதல் பெறப்பட்ட பின்பு ஓய்வூதியப்பயன்கள் வழங்கப்பட வேண்டும்.

எனவே, 23.03.2009 நாளிட்ட தணிக்கைச்சான்றின்படி தனியருக்கு மேற்கண்ட திருத்திய ஓய்வூதியப்பயன்கள் வழங்க நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**பொ.து.ந.க.எண்.பி4/23474/07**

**ஆணையாளர் அவர்களின் 11.04.2009 நாளிட்ட குறிப்பு**

**28.05.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :89/2009 பொருள் எண். 11

**ஒய்வூதியம்**

சென்னை மாநகராட்சி வருவாய் துறையில் கூடுதல் வருவாய் அலுவலராக பணிபுரிந்து 30.06.2006 பிற்பகல் அன்று ஓய்வு பெற்ற திரு.மீரான்கனி, அவர்களுக்கு 26.06.2006 நாளிட்ட இவ்வலுவலக செயல்முறை ஆணையில் ஓய்வூதியப் பயன்கள் வழங்கப்பட்டது.

உள்ளாட்சி நிதி தணிக்கை 06.11.2006 நாளிட்ட சான்றின் படி தனியருக்கு திருத்தப்பட்ட ஒய்வூதியப் பயன்கள் வழங்க அனுமதிக்கப்பட்ட தணிக்கை சான்றில் குறிப்பிட்டுள்ள குறைகளை நிவர்த்தி செய்ய வருவாய் துறைக்கு கோப்பு அனுப்பப்பட்டது. வருவாய்த்துறை மூலம் மீள தணிக்கைக்கு உட்படுத்தப்பட்டதில், 08.10.2007 நாளிட்ட தணிக்கை சான்றின்படி தனியருக்கு கீழ்கண்ட ஓய்வூதிய பயன்கள் வழங்க அனுமதிக்கப்பட்டதனை தொடர்ந்து, திருத்திய ஒய்வூதியப்பயன்கள் வழங்க மன்றத்தீர்மான எண். 685/2007, நாள். 29.12.2007, மன்றத்தின் ஆணை பெறப்பட்டது.

இதன் தொடர்பாக சமர்ப்பிக்கப்படுவதாவது, மேற்கண்ட மன்றத்தீர்மானத்தில் ஓய்வூதியப் பயன்கள் தணிக்கைச் சான்றின்படி, ஏற்கனவே வழங்கப்பட்டதாக தவறுதலாக குறிப்பிடப்பட்டு மன்றத்தின் அனுமதி பெறப்பட்டுள்ளது.

எனவே, கீழ்கண்ட இனங்களுக்கு நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

1. மன்றத்தீர்மான எண். 685/2007, நாள். 29.12.2007, பெறப்பட்ட மன்றத்தீர்மானத்தினை திரும்ப பெற மன்றத்தின் அனுமதி வேண்டியும்,
2. 30.06.2006 பிற்பகல் ஓய்வு பெற்ற திரு.மீரான்கனி, கூடுதல் வருவாய் அவர்களுக்கு 01.07.2006 முதல் ஓய்வு ஊதியம் ரூ.10,407/— ஏற்கனவே வழங்கப்பட்ட ஓய்வூதியம் ரூ.6,919/— லிருந்து அதிகரித்து வழங்கவும், தொகுப்பு தொகை ரூ.4,35,429/—ல் ஏற்கனவே வழங்கப்பட்ட தொகை ரூ.2,89,450/—ஐ நேர்செய்து மீதம் ரூ.1,45,979/—ஐ வழங்கவும், குடும்ப ஓய்வூதியம் அன்னாரின் மனைவி திருமதி. பானுபேகம், அவர்களுக்கு 12.06.2013 முடிய ரூ.10,407/— அதன் பின்னர் ரூ.6,244/— 13.06.2013 முதல் வழங்க நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:பொ.து.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ—18. மன்றச் செயலாளர்

**பொ.து.ந.க.எண்.பி4/1196/09**

**ஆணையாளர் அவர்களின் 23.04.2009 நாளிட்ட குறிப்பு**

**28.05.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :90/2009 பொருள் எண்.12

**ஓய்வூதியம்**

திரு.என்.பெருமாள், உதவி வருவாய் அலுவலர், வருவாய் துறை, அவர்கள் கடந்த 30.06.1996 பிற்பகல் முதல் வயது முதிர்வு காரணமாக ஓய்வு பெற்றார். தனியருக்கு ஏற்கனவே ஓய்வூதியம் மற்றும் இதர பயன்கள் வழங்கப்பட்டது.

உள்ளாட்சி நிதி தணிக்கைத்துறையின் கடித எண்.நி.மு.எண்.232/எ4/2009, நாள்.12.02.2009 நாளிட்ட குறிப்பில் தனியருக்கு அனுமதிக்கப்பட்ட திருத்திய ஓய்வூதிய பயன்களின் விவரம் பின்வருமாறு

வயது முதிர்வு திருத்திய ஓய்வூதியம் ரூ.4825/– 01.07.1996 முதல் ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட ஓய்வூதியம் தொகை ரூ.4391 + தனிஊதியம் 213/–ஐ நேர் செய்து மீதம் வழங்கவும், தொகுப்புத் தொகை ரூ.2,01,837/–ஐ ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட தொகை ரூ.1,83,636/–ஐ நேர் செய்து மீதம் தொகை ரூ.18,201/– வழங்கவும், ஓய்வூதியரின் காலத்திற்குப்பின் குடும்ப ஓய்வூதியம் மாற்றமில்லை எனவும் அனுமதிக்கப்பட்டுள்ளது.

அன்னார் சென்னை மாநகராட்சி பணியில் இரண்டாம் வகுப்பு அலுவலர் என்பதால் மாமன்றத்தின் ஒப்புதல் பெறப்பட்ட பின்பு ஓய்வூதியப்பயன்கள் வழங்கப்பட வேண்டும்.

எனவே, 12.02.2009 நாளிட்ட தணிக்கைச்சான்றின்படி தனியருக்கு மேற்கண்ட திருத்திய ஓய்வூதியப்பயன்கள் வழங்க நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**பொ.து.ந.க.எண்.பி4/8797/09**
**ஆணையாளர் அவர்களின் 23.04.2009 நாளிட்ட குறிப்பு**

**28.05.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :91/2009 பொருள் எண். 13

**ஓய்வூதியம்**

திரு.பி.வி.பச்சையப்பன், உதவி வருவாய் அலுவலர், வருவாய் துறை, அவர்கள் கடந்த 31.10.2003 பிற்பகல் முதல் வயது முதிர்வு காரணமாக ஓய்வு பெற்றார். தனியருக்கு ஏற்கனவே ஓய்வூதியம் மற்றும் இதர பயன்கள் வழங்கப்பட்டது.

உள்ளாட்சி நிதி தணிக்கைத்துறையின் கடித எண்.நி.மு.எண்.3666/எ3/2008, நாள்.03.02.2008 நாளிட்ட குறிப்பில் தனியருக்கு அனுமதிக்கப்பட்ட திருத்திய ஓய்வூதிய பயன்களின் விவரம் பின்வருமாறு

வயது முதிர்வு திருத்திய ஓய்வூதியம் ரூ.4963/– 01.11.2003 முதல் ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட ஓய்வூதியம் தொகை ரூ.4880/–ஐ நேர் செய்து மீதம் வழங்கவும், தொகுப்புத் தொகை ரூ.2,07,611/–ஐ ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட தொகை ரூ.2,04,096/–ஐ நேர் செய்து மீதம் தொகையான ரூ.3515/– வழங்கவும், ஓய்வூதியரின் காலத்திற்குப்பின் அன்னாரது மனைவி திருமதி.பி.சகுந்தலா, என்பவருக்கு குடும்ப ஓய்வூதியம் ரூ.4963/– 08.10.2010 முடிய ரூ.2978/– 09.10.2010 முதல் வழங்கவும் அனுமதிக்கப்பட்டுள்ளது.

அன்னார் சென்னை மாநகராட்சி பணியில் இரண்டாம் வகுப்பு அலுவலர் என்பதால் மாமன்றத்தின் ஒப்புதல் பெறப்பட்ட பின்பு ஓய்வூதியப்பயன்கள் வழங்கப்பட வேண்டும்.

எனவே, 03.02.2009 நாளிட்ட தணிக்கைச்சான்றின்படி தனியருக்கு மேற்கண்ட திருத்திய ஓய்வூதியப்பயன்கள் வழங்க நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

ம.அ2.ந.க.எண்சி3/6778/2008

ஆணையாளர் அவர்களின் 02.02.2009 நாளிட்ட குறிப்பு

**28.05.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :92/2009 பொருள் எண். 14

## தேர்வு நிலை வழங்க அனுமதி

டாக்டர்.ந.கண்ணன், மருத்துவ அலுவலர், நலத்துறை, மண்டலம்–2, அவர்கள் சென்னை மாநகராட்சியில் 17.12.1997 முற்பகல் அன்று பணியில் சேர்ந்து தொடர்ந்து பத்து ஆண்டுகள் பணி முடித்துள்ளபடியால் 17.12.2007 அன்று உள்ள ஊதியம் ரூ.10750+225 தனிஊதியம் 8000–275–13500ல் இருந்து தேர்வு நிலை ஊதிய விகிதமான ரூ.9100–275–14050ஐ 17.12.2007 நாள் முதல் வழங்கிடப்பட வேண்டும்.

19.09.2008 நாளிட்ட கணக்கு அலுவலர்–2, அவர்கள் மேற்படி மருத்துவ அலுவலருக்கு தேர்வுநிலை ஊதிய விகிதமான ரூ.9100–275–14050ஐ 17.12.2007 நாள் முதல் வழங்கிடவும் அடிப்படை ஊதியம் ரூ.11025+225 சிறப்பு ஊதியம் என நிர்ணயம் செய்திடப்பட வேண்டும் என தெரிவித்தும் தனியர் வகுப்பு–2ன் கீழ் வருவதால் மன்றத் தீர்மானம் பெற்றப் பின்னர் உரிய செயல்முறை ஆணை வழங்கப்பட வேண்டும். எனவும் கருத்துரு அளித்துள்ளார்கள்.

தனியர் தமிழ்நாடு தேர்வாணையத்தால் நடத்தப்படும் துறை வழி தேர்வான மருத்துவ அலுவலர்களுக்கான கணக்கு தேர்வு – தேர்ச்சி செய்து அதற்குரிய பதிவுகள் பணிப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

தனியரின் பணி அரசின் உறுதி ஆக்க ஆணையின் தொடர்ச்சியாக 23.12.2001 அன்று பணிவரன்முறைபடுத்தி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேலும் தனியருக்கு மன்ற தீர்மான எண்.410/2004, நாள்.04.11.2004ன்படி 17.12.1999 அன்று தகுதிகாண் பருவம் முடித்தவராக அறிவிக்கப்பட்டுள்ளார்.

அன்னார் மீது துறை வழி ஒழுங்கு நடவடிக்கைகள் ஏதும் நிலுவையில் இல்லை மற்றும் மேற்படி 10 ஆண்டு காலத்தில் பணி முறிவு ஏதும் இல்லை, சம்பளமில்லா விடுப்பு எதுவும் வழங்கிடப்படவில்லை எனவும் தெரிவித்துக்கொள்ளப்படுகின்றது.

எனவே, டாக்டர். ந. கண்ணன், மருத்துவ அலுவலர், நலத்துறை, மண்டலம்–2, அவர்களுக்கு 10 ஆண்டுகள் பணி முடித்தமைக்காக தேர்வுநிலை ஊதிய விகிதமான ரூ.9100–275–14050ன் அடிப்படை ஊதியம் ரூ.11025+225 சிறப்பு ஊதியம் என 17.12.2007 நாள் முதல் வழங்கிட நியமனக்குழு மூலமாக மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:ம.அ.2.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(சு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**ம.அ6.ந.க.எண்.சுது/எச்1/200/2009**
**ஆணையாளர் அவர்களின் 08.04.2009 நாளிட்ட குறிப்பு**

**28.05.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :93/2009 பொருள் எண்.15

**சிறப்பு நிலை வழங்க அனுமதி**

மருத்துவர் திருமதி. ஷெனாஜ் அக்தர், மருத்துவ அலுவலர் என்பவர் சென்னை மாநகராட்சி ஆணையாளர் அவர்களின் செயல்முறை ஆணை பொ.து.ந.க.எண்.சி1/3465/88, நாள்.23.08.1988ன்படி மருத்துவ அலுவலராக 09.09.1988 முதல் சென்னை மாநகராட்சிப் பணியில் சேர்ந்தார்.

இதன்தொடர்பாக தெரிவிக்கப்படுவது என்னவெனில், அன்னாரது பணி ஆணையாளர் அவர்களின் செயல்முறை ஆணை சு.து.ந.க.எண்.சி1/3465/98, நாள்.12.11.1998ன்படி உறுதியாக்கம் செய்யப்பட்டும் 09.09.1990 முதல் அன்னார் தகுதிகாண் பருவம் முடித்தவராக அங்கீகரிக்கப்பட்டும் ஆணை வழங்கப்பட்டுள்ளது. தனியர் மருத்துவ அலுவலர் பதவியில் பத்தாண்டுக் கால பணி முடித்தமைக்கு 09.09.1998 முதல் மருத்துவ அலுவலர் பதவியில் தேர்வுநிலை அனுமதிக்கப்பட்டுள்ளது.

தனியர் மருத்துவ அலுவலர் பதவியில் இருபதாண்டு கால பணியை முடித்துள்ளமைக்கு மருத்துவ அலுவலர் பதவியில் சிறப்பு நிலை அனுமதிக்கப்பட வேண்டும். இவர் 20 ஆண்டு கால பணி முடித்த விவரம் பின்வருமாறு தெரிவிக்கப்படுகிறது.

| வ. எண் | மருத்துவ அலுவலரின் பெயர் | முதன் முதலில் நியமன நாள் | தகுதி காண் பருவம் பூர்த்தி அடைந்த நாள் | சம்பளம் இல்லா விடுப்பு துய்த்த விவரம் | பத்தாண்டு பணியை முடித்த நாள் |
|---|---|---|---|---|---|
| | திருமதி. ஷெனாஜ் அக்தர், மருத்துவ அலுவலர் | 09.09.1988 | 09.09.1990 | ஏதும் இல்லை | 08.09.1998 |

| முந்தைய ஆண்டுகளில் தண்டனை வழங்கப்பட்ட விவரம் | தண்டனை முடிவுற்றதா | தேர்வு நிலை வழங்கப்பட்ட நாள் | சிறப்பு நிலை வழங்கப்பட வேண்டிய நாள் |
|---|---|---|---|
| ஏதுமில்லை | --- | 09.09.1998 | 09.09.2008 |

கணக்கு அலுவலர்/ மண்டலம்–6, அவர்களின் 19.03.2009 நாளிட்ட குறிப்புரையில், தனியருக்கு 09.09.2008 முதல் சிறப்பு நிலை அனுமதித்து அவரது ஊதியத்தை மருத்துவ அலுவலர் பதவியின் சிறப்பு நிலை ஊதிய விகிதமான ரூ.10000–325–15200ல் 09.09.2008 முதல் ரூ.12600 + 75 தனி ஊதியமாக நிர்ணயம் செய்யலாம் என தெரிவித்துள்ளார்.

தனியர் அவர்கள் இருபதாண்டு பணிக்காலத்தில் ஊதியமில்லா விடுப்பு ஏதும் துய்க்கவில்லை. மேலும் தனியர் மீது ஒழுங்கு நடவடிக்கை ஏதும் தொடரப்படவில்லையென்றும், தண்டனை ஏதும் நிலுவையில் இல்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது. அன்னாருக்கு சிறப்பு நிலை காலமுறை ஊதியம் வழங்குவதால் மருத்துவ அலுவலர் பதவியில் கூடுதலாக பணியிடங்கள் ஏதும் ஏற்படுத்தப்படவில்லை.

மருத்துவ அலுவலர் பதவி சென்னை மாநகராட்சி பணியமைப்பில் வகுப்பு–2ன் கீழ் வருகின்றது. இப்பதவி வகிப்பவர்களுக்கு சிறப்பு நிலை அனுமதிக்க மன்றம் அரசாணை (நிலை) எண்.1381, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை, நாள்.03.09.1982ன்படி அதிகாரம் பெற்றுள்ளது.

எனவே, மருத்துவர். திருமதி.ஷெனாஜ் அக்தர், மருத்துவ அலுவலர், சுகாதாரத்துறை, மண்டலம்.6, அவர்களுக்கு 09.09.2008 முதல் மருத்துவ அலுவலர் பதவியில் சிறப்பு நிலை அனுமதித்து, அவரது ஊதியத்தை மருத்துவ அலுவலர் பதவியின் சிறப்பு நிலை விகிதமான ரூ.10000–325–15200ல் 09.09.2008 முதல் ரூ.12600+75 தனி ஊதியமாக நிர்ணயிக்க மன்றத்தின் அனுமதி நியமனக்குழு மூலமாக வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:ம.அ.6.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**ம.அ.6.ந.க.எண்.எச்1/2197/2008**

**ஆணையாளர் அவர்களின் 02.03.2009 நாளிட்ட குறிப்பு**

**28.05.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :94/2009 பொருள் எண்.16

**தேர்வு நிலை மற்றும் சிறப்பு நிலை வழங்க அனுமதி**

திரு.ஐ.வேலுச்சாமி, மருத்துவ அலுவலர் அவர்கள் தான் சென்னை மாநகராட்சியில் 31.10.1979 முதல் மருத்துவ அலுவலகராக பணிபுரிந்து வந்ததாகவும், தான் 31.07.2006 அன்று முதல் வயது முதிர்வு ஒய்வு பெற்றார் எனவும், தனக்கு இதுவரை மருத்துவ அலுவலர் பதவியில் தேர்வுநிலை மற்றும் சிறப்பு நிலையில் ஊதியம் நிர்ணயம் செய்யப்படவில்லை என்றும், தற்போது தனக்கு மருத்துவ அலுவலர் பதவியில் தேர்வு நிலை மற்றும் சிறப்பு நிலையில் ஊதியம் நிர்ணயம் செய்து தருமாறு வேண்டி விண்ணப்பித்துள்ளார்.

இதன் சம்பந்தமாக தெரிவிப்பது யாதெனில், திரு.ஐ.வேலுச்சாமி அவர்கள், மண்டலம்–6 சுகாதாரத் துறையில் மருத்து அலுவலராக பணிபுரிந்து வந்து 31.07.2006 அன்று வயது முதிர்வு ஒய்வு பெற்றுள்ளார். அன்னாரின் பணிப்பதிவேட்டினை பரிசீலனை செய்ததில் அன்னார் சென்னை மாநகராட்சியில் 31.10.1979 அன்று பிற்பகல் முதல் மருத்துவ அலுவலராக பணியில் சேர்ந்துள்ளார். அன்னாரது பணி அரசாணை எண்.318, சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை, நாள்.27.02.1980ன்படி உறுதியாக்கம் செய்யப்பட்டுள்ளது. அன்னாருக்கு மருத்துவ அலுவலர் பதவியில் தேர்வு நிலை மற்றும் சிறப்பு நிலையில் ஊதியம் நிர்ணயம் செய்யப்படவில்லை என தெரியவருகிறது.

ஆய்வாளர், தணிக்கை பிரிவு மண்டலம்–6 அவர்களின் 03.12.2008 நாளிட்ட குறிப்புரையில், சென்னை மாநகராட்சி, சுகாதார அலுவலர் அவர்களின் செயல்முறை ஆணை, சு.து.ந.க.எண்.சி/15670/88, நாள்.29.06.1988ன்படி, டாக்டர். திரு.ஐ. வேலுச்சாமி மருத்துவ அலுவலர் அவர்கள் பட்டயப்படிப்பு (DPH) பயில 29.06.1988 முதல் சென்னை மாநகராட்சியிலிருந்து விடுவிக்கப்பட்டு, பட்டயப்படிப்பு முடிந்து மீண்டும் 04.04.1990 முதல் சென்னை மாநகராட்சியில் பணியில் சேர்ந்து பணிபுரிந்து வருகிறார் எனவும், தனியருக்கு பட்டயப்படிப்பு சென்ற காலம் 29.06.1988 முதல் 04.04.1990 வரை சம்பளமில்லா விடுப்பாகவும் பாவிக்கப்பட்டுள்ளது எனவும், எனவே, தற்போது அரசாணை எண்.31, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.24.02.2005ன்படி , டாக்டர் திரு.ஐ.வேலுச்சாமி, மருத்துவ அலுவலர் அவர்களுக்கு பட்டயப்படிப்பு பயில சென்ற காலம் 29.06.1998 முதல் 04.04.1990 வரை பணிக்காலமாக கருதப்படலாம் என்றும், வழக்கமாக வழங்கப்பட வேண்டிய ஊதிய உயர்வுகள் வழங்கப்படலாம் என்றும், தேர்வு நிலை மற்றும் சிறப்பு நிலைக்கும் எடுத்துக்கொள்ளலாம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

மருத்துவர் திரு.ஐ.வேலுச்சாமி, மருத்துவ அலுவலர், சுகாதாரத்துறை, மண்டலம்–6, 31.07.2006 அன்று வயது முதிர்வு ஒய்வு பெற்றவர், மருத்துவ அலுவலர் பதவியில் பத்தாண்டு காலம் மற்றும் இருபதாண்டு கால பணியை முடித்துள்ளமைக்கு மருத்துவ அலுவலர் பதவியில் தேர்வு நிலை மற்றும் சிறப்பு நிலை அனுமதிக்கப்பட வேண்டும். இவர் 10 ஆண்டுகள் மற்றும் 20 ஆண்டு கால பணி முடித்த விவரம் பின்வருமாறு தெரிவிக்கப்படுகிறது.

| வ.எண். | மருத்துவ அலுவலரின் பெயர் | முதன் முதலில் நியமனமான நாள் | தகுதிகாண் பருவம் பூர்த்தியான நாள் | சம்பளமில்லா விடுப்பு துய்த்த விவரம் |
|---|---|---|---|---|
| 01. | மருத்துவர் திரு.ஐ.வேலுச்சாமி | 31.10.1979 | 31.10.1981 | ஏதுமில்லை |

| 10 ஆண்டுகால பணி முடித்த நாள் | 20 ஆண்டுகால பணி முடித்த நாள் | முந்தைய ஆண்டுகளில் வழங்கப்பட்ட தண்டனை விவரம் | தேர்வு நிலை வழங்கப்பட்ட வேண்டி நாள் | சிறப்பு நிலை வழங்கப்பட வேண்டிய நாள் |
|---|---|---|---|---|
| 30.10.1989 | 30.10.1999 | கண்டனம் வழங்கி உத்தரவிடப்பட்டுள்ளது | 31.10.1989 | 31.10.1999 |

ஒய்வு பெற்ற மருத்துவ அலுவலர் திரு.ஐ.வேலுச்சாமி அவர்கள் 31.10.1989 அன்று சாதாரண நிலையில் மருத்துவ அலுவலர் பதவியின் ஊதிய விகிதமான ரூ.2200–75–2800–100–4000 என்ற ஊதிய ஏற்ற முறையில் ரூ.2425/– அடிப்படை ஊதியமாக பெற்றுவந்தார். அன்னாருக்கு 31.10.1989 அன்று தேர்வு நிலையில் மருத்துவ அலுவலர் பதவியின் ஊதிய விகிதமான ரூ.2500–75–2800–100–4200 என்ற ஊதிய ஏற்ற முறையில் ரூ.2500/– அடிப்படை ஊதியம் வழங்க வேண்டியுள்ளது.

<u>ம.அ.6.ந.க.எண்.எச்1/2197/2008</u>

ஓய்வு பெற்ற மருத்துவ அலுவலர் திரு.ஐ.வேலுச்சாமி அவர்கள் 31.10.1999 அன்று தேர்வு நிலையில் மருத்துவ அலுவலர் பதவியின் ஊதிய விகிதமான ரூ.9100–275–14050 என்ற ஊதிய ஏற்ற முறையில் ரூ.10750/– அடிப்படை ஊதியமாக பெற தகுதியுடையவறாகிறார். அன்னாருக்கு 31.10.1999 அன்று சிறப்பு நிலையில் மருத்துவ அலுவலர் பதவியின் ஊதிய விகிதமான ரூ.10000–325–15200 என்ற ஊதிய ஏற்ற முறையில் ரூ.10975 + 50 தனி ஊதியம் அடிப்படை ஊதியம் வழங்க வேண்டியுள்ளது.

திரு.ஐ.வேலுச்சாமி, மருத்துவ அலுவலர், சுகாதாரத் துறை, மண்டலம்–6, 31.07.2006 அன்று வயது முதிர்வு ஓய்வு பெற்றவர்க்கு, மேற்கண்டவாறு 31.10.1989 அன்று தேர்வு நிலையில் அடிப்படை ஊதியம் ரூ.2500/–ம் மற்றும் 31.10.1999 அன்று சிறப்பு நிலையில் அடிப்படை ஊதியம் ரூ.10975 + 50 தனி ஊதியம் நிர்ணயம் செய்யலாம் என ஆய்வாளர், தணிக்கை பிரிவு மண்டலம்–6 அவர்களால் 03.12.2008 அன்று குறிப்புரை வழங்கப்பட்டுள்ளது.

கணக்கு அலுவலர் / மண்டலம்–6 அவர்களின் 09.01.2009 நாளிட்ட குறிப்புரையில், திரு.ஐ.வேலுச்சாமி, மருத்துவ அலுவலர், சுகாதாரத்துறை, மண்டலம்–6, 31.07.2006 அன்று வயது முதிர்வு ஓய்வு பெற்றவர்க்கு, மருத்துவ அலுவலர் பதவியில் தொடர்ந்து 10 ஆண்டுகள் பணிமுடித்தமைக்கு, தேர்வு நிலை ஊதிய விகிதமான ரூ.2500–75–2800–100–4200 என்ற ஊதிய ஏற்ற முறையில் 31.10.1989 முதல் அடிப்படை ஊதியம் ரூ.2500/– ஊதியம் நிர்ணயம் செய்யலாம் எனவும், மருத்துவ அலுவலர் பதவியில் தொடர்ந்து 20 ஆண்டுகள் பணிமுடித்தமைக்கு, சிறப்பு நிலை ஊதிய விகிதமான ரூ.10000–325–15200 என்ற ஊதிய ஏற்ற முறையில் 31.10.1999 முதல் அடிப்படை ஊதியம் ரூ.10975+50 தனி ஊதியம் நிர்ணயம் செய்யலாம் எனவும் குறிப்புரை வழங்கப்பட்டுள்ளது.

மருத்துவ அலுவலர் பதவி சென்னை மாநகராட்சி பணியமைப்பில் வகுப்பு–2ன் கீழ் வருகின்றது. இப்பதவி வகிப்பவர்களுக்கு தேர்வு நிலை அனுமதிக்க மன்றம் அரசாணை (நிலை) எண்.1381, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை, நாள்.03.09.1992ன்படி அதிகாரம் பெற்றுள்ளது.

எனவே, திரு.ஐ.வேலுச்சாமி, மருத்துவ அலுவலர், சுகாதாரத்துறை, மண்டலம்–6, 31.07.2006 அன்று வயது முதிர்வு ஓய்வு பெற்றவர்க்கு, மருத்துவ அலுவலர் பதவியில் தொடர்ந்து 10 ஆண்டுகள் பணிமுடித்தமைக்கு, தேர்வு நிலை ஊதிய விகிதமான ரூ.2500–75–2800–100–4200 என்ற ஊதிய ஏற்ற முறையில் 31.10.1989 முதல் அடிப்படை ஊதியம் ரூ.2500/– ஊதியம் நிர்ணயம் செய்யவும் மற்றும் மருத்துவ அலுவலர் பதவியில் தொடர்ந்து 20 ஆண்டுகள் பணிமுடித்தமைக்கு சிறப்பு நிலை ஊதிய விகிதமான ரூ.10000–325–15200 என்ற ஊதிய ஏற்ற முறையில் 31.10.1999 முதல் அடிப்படை ஊதியம் ரூ.10975 + 50 தனி ஊதியம் நிர்ணயம் செய்யவும் இதற்கான பணப்பயனை 24.2.2005 முதல் வழங்கவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டி நியமனக்குழு மூலமாக சமர்ப்பிக்கப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:ம.அ.6.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

சு.து.ந.க.எண்சி4/6426/2008

ஆணையாளர் அவர்களின் 21.02.2009 நாளிட்ட குறிப்பு

28.05.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண் :95/2009 பொருள் எண். 17

ஊக்க ஊதிய உயர்வு வழங்க அனுமதி

டாக்டர் பி. பஞ்சக்சரம் செல்வராஜன், மருத்துவ அலுவலர், அவர்கள் 30 ஆண்டுகள் மருத்துவ அலுவலர் பதவியில் பணி முடித்தமையால் ஊக்க ஊதிய உயர்வு நிலைக்கு செல்ல அனுமதி வேண்டியுள்ளார்.

தனியர் 17.07.2008 அன்று மருத்துவ அலுவலர், பதவியில் 30 ஆண்டுகள் பணி முடித்துள்ளார். இவருக்கு சென்னை மாநகராட்சி ஆணையாளர் அவர்களது செயல்முறை ஆணை சு.து.ந.க.எண்.சி1/4453/2005 நாள். 29.08.2005ன்படி அரசின் உறுதியாக்க ஆணை வெளியிடப்பட்டதையடுத்து பணிவரன்முறைப்படுத்தப்பட்டுள்ளது. இதனால் 18.07.2008 அன்று ஊக்க ஊதிய உயர்வு நிலை செல்ல தகுதி பெற்றுள்ளார்.

21.11.2008 நாளிட்ட கணக்கு (சுகாதாரம்) அவர்களின் குறிப்பில் தனியர் 18.07.2008 முதல் 10000–325–15200 என்ற ஊக்க ஊதிய விகிதத்தில் அடிப்படை ஊதியம் 14225+100பி.பி என நிர்ணயம் செய்யும் பொருட்டு மன்றத்தின் அனுமதி பெற வேண்டும் எனவும் கருத்துரைக்கப்பட்டுள்ளது.

இம்மருத்துவ அலுவலர் மீது துறை சார்ந்த, விழிப்புக்குழு சார்ந்த, குற்றச்சாட்டுகள் (ம) விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை. தண்டனை ஏதும் இல்லை. பணிக்காலத்தில் ஊதியமில்லாவிடுப்பு ஏதும் துய்க்கவில்லை.

போனஸ் ஊதிய உயர்வு வழங்க பணி விவரம் கணக்கீட்டுத்தாள் துறைத் தலைவரால் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது இம்மருத்துவ அலுவலருக்கு ஊக்க ஊதிய உயர்வு நிலை வழங்குவதால் ஒப்பளிப்பு செய்யப்பட்ட பணியிடம் கூடவோ, குறையவோ நேரிடாது. இப்பதவி சென்னை மாநகராட்சி பிரிவு–2ன் கீழ் வருகிறது. எனவே, மன்றத்தின் அனுமதி பெற்று ஊக்க ஊதிய உயர்வு வழங்கப்பட வேண்டும்.

டாக்டர் பி. பஞ்சக்சரம் செல்வராஜன், மருத்துவ அலுவலர், அவர்கள் 17.07.2008 பிற்பகல் அன்று 30 ஆண்டுகள் பணிமுடித்தமையால் 18.07.2008 அன்று தனியர் பெற்று வரும் அடிப்படை ஊதியத்துடன் ஒரு ஊக்க ஊதிய உயர்வு அளித்து ரூ.10000–325–15200 என்ற ஊதிய விகிதத்தில் ரூ.14225+100 தனி ஊதியம் என்ற விகிதத்தில் ஊதிய நிர்ணயம் செய்ய நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:சு.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(து.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**சு.து.ந.க.எண்.சி1/5094/2007**
**ஆணையாளர் அவர்களின் 24.03.2009 நாளிட்ட குறிப்பு**

**28.05.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :96/2009 பொருள் எண். 18

**பணிவரன்முறைப்படுத்த அனுமதி**

மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திலிருந்து வரப்பெற்ற பட்டியலில் இடம் பெற்ற டாக்டர்.வி.கண்ணதாசன், என்பவரை தற்காலிகமாக அரசின் உறுதியாக்கத்திற்குட்பட்ட ரூ.6500–250–11100 என்ற ஊதிய விகிதத்தில் உதவி கால்நடை மருத்துவராக பணிநியமனம் செய்ய மன்றத் தீர்மான எண்.710/2007 நாள். 29.12.2007ஐ தொடர்ந்து இவ்வலுவலக செயல்முறை ஆணை சு.து.ந.க.எண்.சி1/5094/2007, நாள். 18.01.2008ன்படி 06.07.2008 முதல் பணி நியமனம் செய்யப்பட்டதற்கு, 23.12.2008 நாளிட்ட அரசாணை எண்.536, ந.நி.ம.கு.வ.துறை, நாள்.23.12.2008ல் அரசு உறுதியாக்கம் வழங்கியுள்ளது.

இதனைத் தொடர்ந்து மேற்படி மருத்துவரது பணியினை இவர் பணியில் சேர்ந்த நாளான 06.07.2008 முதல் உதவி கால்நடை மருத்துவர் பதவியில் வரன்முறை செய்ய நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:சு.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**<u>சு.து.(ம) ந.க.எண்.எம்1/3683/2007</u>**
**<u>ஆணையாளர் அவர்களின் 04.05.2009 நாளிட்ட குறிப்பு</u>**

**<u>28.05.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்</u>**

தீர்மான எண் :97/2009 பொருள் எண். 19

**<u>பணிவரன்முறைப்படுத்துதல்</u>**

மன்றத் தீர்மான எண்.454/2007 நாள்.31.08.2007ல் சுகாதாரத்துறை மலேரியா பிரிவில் முதுநிலை பூச்சியியலருக்கான தெரிவு பட்டியலுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டதை தொடர்ந்து இவ்வலுவலக 20.09.2008 தேதியிட்ட செயல்முறை ஆணையின் படி திரு.வி. பாலகிருஷ்ணன், பூச்சியியல் உதவியாளருக்கு முதுநிலை பூச்சியியலராக அரசின் உறுதியாக்கத்திற்குட்பட்டு பதவி உயர்வு வழங்கப்பட்டது.

அரசு ஆணை (ப) 89 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந.3) துறை நாள்.06.03.2009ன்படி சென்னை மாநகராட்சி சுகாதாரத்துறை மலேரியா பிரிவில் பூச்சியியல் உதவியாளர் திரு.வி. பாலகிருஷ்ணன், அவர்களுக்கு ரூ.8000–275–13500 என்ற காலமுறை ஊதிய விகிதத்தில் இதர படிகளுடன் முதுநிலை பூச்சியியலராக பதவி உயர்வு வழங்கப்பட்டதற்கு இவர் பணியில் சேர்ந்த நாளான 24.09.2008 முற்பகலிலிருந்து அரசு உறுதியாக்கம் வழங்கி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

அரசாணையினை தொடர்ந்து திரு.வி. பாலகிருஷ்ணன், முதுநிலை பூச்சியியலர், பதவியில் சேர்ந்த நாளான 24.09.2008 முற்பகல் முதல் பணிவரன்முறைப்படுத்த மன்றத்தின் அனுமதி நியமனக்குழு மூலமாக வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:சு.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**இ.பொ.து.ந.க.எண்.எம்4/7531/2005**
**ஆணையாளர் அவர்களின் 28.04.2009 நாளிட்ட குறிப்பு**

**28.05.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :98/2009 பொருள் எண்.20

**பணிவரன்முறைப்படுத்துதல்**

திரு.கே.முனிரத்னம், அவர்கள் 19.12.1972 முதல் லஸ்கராக பணியில் சேர்ந்து 30.1.1979ல் இயந்திர பழுதாளராக பதவி உயர்வு பெற்று, கீழ்நிலை பதவியிலிருந்து பதவி உயர்வில் இளநிலை உதவியாளராக 5.3.1979ல் பதவி உயர்வு பெற்றுள்ளார். பின்னர் 5.9.1980 அன்று உதவி பண்டக காப்பாளராக பதவி உயர்வு பெற்று 12.9.1986ல் பண்டக காப்பாளராக பதவி உயர்வு பெற்று 30.6.2006 அன்று வயது முதிர்வு ஓய்வு பெற்றுள்ளார். தனியர் வகித்த பதவிகளின் விவரம் வருமாறு:

| வகித்த பதவி | | பணியில் சேர்ந்த நாள் |
|---|---|---|
| தபால் லஸ்கர் | – | 18.12.1972 |
| இயந்தி பழுதாளர் | – | 30.1.1979 |
| இளநிலை உதவியாளர் | – | 5.3.1979 |
| உதவி பண்டக காப்பாளர் | – | 5.9.1980 |
| பண்டக காப்பாளர் | – | 12.9.1986 |

சென்னை மாநகராட்சியில் கீழ்நிலை பதவியிலிருந்து இளநிலை உதவியாளராக பதவி உயர்வு பெற்ற 108 பணியாளர்களுக்கு அரசாணை எண். 283, ந.நி(ம) கு.வ.துறை நாள் 17.3.1988ல் அரசாணை வெளியிடப்பட்ட நாள் முதல்(17.03.1988) பணியிணை வரன்முறைப்படுத்த வேண்டும் என ஆணையிடப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் 5.3.1979 முதல் 4.9.1980 வரைதான் இளநிலை உதவியாளராக பணிபுரிந்துள்ளார். அரசாணை வெளியிட்ட 17.3.1988 அன்று தனியர் பண்டக காப்பாளராக பதவி உயர்வு பெற்று விட்டார். எனவே, இவரது பதவியினை 17.3.1988 அன்று இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்ய இயலாத நிலை உள்ளது.

12.10.2006 நாளிட்ட தணிக்கை துறை இயக்குநர் கடிதத்தில் மேற்காணும் பொருள் குறித்து அரசின் தெளிவுரை பெற்று நடவடிக்கை எடுக்கும்படி தெரிவிக்கப்பட்டுள்ளது. அரசின் தெளிவுரை பெற காலதாமதமாகும் என்பதால் தனியருக்கு தற்காலிக ஓய்வூதியம் பெற்று வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் தனியர் தணிக்கை தடையினை எதிர்த்து, தான் இளநிலை உதவியாளராக பணிபுரிந்த 1½ வருட காலத்தையும் சேர்த்து முழு ஓய்வூதிய பயன்கள் வழங்க கோரி உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளார்.

14.7.2008 நாளிட்ட நீதிப் பேராணையில் தனியரின் மனுவினை தகுதி மற்றும் விதிகளின்படி பரிசீலிக்குமாறு உத்திரவிடப்பட்டுள்ளது.

தனியர் அரசாணை வெளியிட்ட நாளான 17.3.1988க்கு முன்னரே இளநிலை உதவியாளர் பதவியிலிருந்து உதவி பண்டக காப்பாளராகவும், மற்றும் பண்டக காப்பாளராகவும் பதவி உயர்வு பெற்ற நிலையில் 17.3.1988 அன்று இளநிலை உதவியாளர் பதவியில் இல்லாத நிலையில் அதனை வரன்முறைப்படுத்துவது குறித்த அரசின் தெளிவுரை பெறும் பொருட்டு அரசுக்கு கடிதம் அனுப்ப நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:இ.பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**மா.கு.ந. (ம) ம.கு.ந.எண்.எப்1/436/2008**
**ஆணையாளர் அவர்களின் 12.02.2009 நாளிட்ட குறிப்பு**

**28.05.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :99/2009 பொருள் எண்.21

**தமிழ்மொழி தேர்வு தேர்ச்சி பெறுவதிலிருந்து விலக்களித்தல்**

திருமதி.பி.நிர்மலா, ஏ.என்.எம். மாவட்ட குடும்ப நலத்துறை, அவர்கள் 30.06.2008 அன்று பிற்பகல் வயது முதிர்வு ஓய்வு பெற்றுள்ளார். இவர் சென்னை மாநகராட்சியில் மகப்பேறு குழந்தை நல பிரிவில் 28.05.1984ல் ஏ.என்.எம். ஆக பணியமர்ந்துள்ளார். அன்னாரின் தாய் மொழி தெலுங்கு, இவர் பணிக்காலத்தில், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் நடத்தும் தமிழ்மொழி தேர்வில் 5முறை கலந்து கொண்டு தேர்ச்சி பெறவில்லை. தனியரின் பணிப்பதிவேடு தணிக்கையின் முன்தணிக்கை வேண்டி அனுப்பப்பட்டதில், தணிக்கையின் கடிதத்தில் தனியர் தமிழ் தேர்வு தேர்ச்சி பெறுவதிலிருந்து விலக்களித்து அரசின் தளர்வாணை பெறப்பட்ட பின்னரே ஓய்வூதிய பயன்கள் அளிக்கப்பட வேண்டும் என தெரிவித்ததால் அன்னாருக்கு ஓய்வு கால சிரமங்களை தவிர்க்கும் பொருட்டு தற்காலிக ஓய்வூதியம் அனுமதித்து வழங்கப்பட்டது.

மேலும், தனியருக்கு தற்காலிக ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருவதால் தமிழ் மொழி தேர்விலிருந்து விலக்களித்து அரசின் ஆணை வேண்டி அரசுக்கு பிரேரணை அனுப்ப மன்றத்தின் அனுமதி பெறப்பட வேண்டும்.

இது குறித்து சமர்ப்பித்துக் கொள்வது, தனியர் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்பட்ட தமிழ்மொழி தேர்வில் 5 முறை கலந்து கொண்டும் தேர்ச்சியடையவில்லை. தனியர் தமிழ்மொழி தேர்வில் தோல்விஅடைந்ததற்கான அரசிதழ் நகல் சமர்ப்பித்ததின் அடிப்படையிலும் 30.06.2008ல் வயது முதிர்வு ஓய்வடைந்து தற்காலிக ஓய்வூதிய பயன்கள் மட்டுமே பெற்று வருவதாலும், சிறப்பினமாக கருதி தமிழ்மொழி தேர்வில் தேர்ச்சி பெறுவதிலிருந்து விலக்களித்து அரசின் ஆணை பெற்ற பின்னரே முழு ஓய்வூதியம் பணப்பயன்கள் அனுமதிக்க இயலும்.

எனவே, திருமதி.பி.நிர்மலா, ஓய்வு பெற்ற ஏ.என்.எம். மாவட்ட குடும்ப நலத்துறை, அவர்களின் தாய்மொழி தெலுங்கு என்பதாலும், இவர் தனது பணிக்காலத்தில் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் நடத்தும் தமிழ்மொழி தேர்வில் 5 முறை எழுதி தேர்ச்சி பெறவில்லை என்பதாலும், தனியர் 30.06.2008 பிற்பகல் வயது முதிர்வு ஓய்வு பெற்று தற்காலிக ஓய்வூதிய பயன்கள் மட்டுமே அனுமதிக்கப்பட்டுள்ளதாலும், சிறப்பினமாக கொண்டு தமிழ் மொழி தேர்வில் தேர்ச்சி பெறுவதிலிருந்து விலக்களித்து அரசின் ஆணை வேண்டி அரசுக்கு பிரேரணை அனுப்ப மன்றத்தின் அனுமதி நியமனக்குழு மூலமாக வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:மா.கு.ந.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

ம.அ1.ந.க.எண்.அ2/2317/2008
ஆணையாளர் அவர்களின் 24.03.2009 நாளிட்ட குறிப்பு

28.05.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண் :100/2009 பொருள் எண்.22

தமிழ்மொழி தேர்ச்சி பெறுவதிலிருந்து விலக்களித்தல்

சென்னை மாநகராட்சி, மண்டலம்–1ல் துப்புரவு ஆய்வாளராக பணிபுரிந்து கடந்த 30.06.2007 அன்று வயது முதிர்வு காரணமாக ஓய்வுப்பெற்ற திரு.எம்.சீனிவாசலு, அவர்களின் ஓய்வூதியத்திற்கான முன்மொழிவுகளை உள்ளாட்சி நிதித் தணிக்கைத்துறைக்கு அனுப்பப்பட்டதில், 01.08.2007 நாளிட்ட கடிதத்தில் வரிசை எண்.10ல் தனியருக்கு 01.10.2002க்கு பிறகு வருடாந்திர ஊதிய உயர்வு மற்றும் தேர்வுநிலை வழங்கப்படாமைக்குரிய விவரம் தெரிவிக்கப்பட வேண்டுமென சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பாக தெரிவிப்பது யாதெனில் தனியரின் தாய்மொழி தெலுங்கு என்பதால் தமிழ்நாடு அரசு தேர்வாணையத்தால் நடத்தப்படும் தமிழ்மொழி தேர்வில் தேர்ச்சி அல்லது தமிழை ஒருபாடமாக கொண்டு பயிலாமை காரணமாக மண்டல அலுவலர்–1, அவர்களின் 24.04.2003 நாளிட்ட குறிப்பாணை வழங்கப்பட்டு கடந்த 2003ம் ஆண்டு முதல் ஊதிய உயர்வு நிறுத்தம் செய்யப்பட்டுள்ளது.

மேலும், தனியர் 30.06.2007 அன்று வயது முதிர்வு ஓய்வு பெற்றுவிட்ட நிலையில், தமிழ்மொழி தேர்ச்சி பெறாமையின் காரணமாக ஓய்வூதியம் வழங்கப்படாமல் நிலுவையில் உள்ளது. எனவே, தமிழ்மொழியில் தேர்ச்சி பெறாமைக்கு விலக்காணை பெற 06.11.2008 நாளிட்ட ஆணையாளர் அவர்களின் குறிப்பு அனுக்கப்பட்டதில், ஓய்வுபெற்ற துப்புரவு ஆய்வாளர் 26.10.1973 முதல் சுகாதாரத்துறையில் துப்புரவு ப்யூனாக பணியமர்த்தப்பட்டு, 01.12.1992 முதல் துப்புரவு ஆய்வாளராக பணியாற்றி ஓய்வுபெற்றார். அன்னாரின் தாய்மொழி தெலுங்கு என்பதாலும், தனியர் பணியில் இருக்கும் காலத்தில் தமிழ்நாடு தேர்வாணையக் குழுமத்தால் நடத்தப்படும் தமிழ்மொழி தேர்வில் தேர்ச்சி பெறாமலும், தேர்வில் கலந்து கொள்ளாமல் இருந்ததாலும் தனியருக்கு தற்காலிக ஓய்வூதியமும் அளிக்கப்படவில்லை.

இதனடிப்படையில் மன்ற தீர்மானம் எண்.461/2006, நாள்.30.11.2006ன்படி, வெளியிடப்பட்ட சுற்றறிக்கை பொ.து.ந.க.எண்.ஜி4/5173/2004, நாள்.14.12.2006ல் சென்னை மாநகராட்சியில் 05.01.1976க்கு முன்னதாக பணியமர்த்தப்பட்டவர்களை அரசு பொதுவிதி எண்.12(1)ன்படி, தமிழ்மொழியில் தமிழ்நாடு அரசு தேர்வாணையக் குழுமத்தால் நடத்தப்படும் தமிழ்மொழி தேர்வில் தேர்ச்சி பெறாவிடிலும், அத்தகையவர்களுக்கு தமிழ்மொழியில் போதிய அறிவும், படிக்கவும், எழுதவும் மற்றும் பேசவும் தெரியும் என்பதனை மண்டல அலுவலரால் மேற்படி தேர்வினை நடத்தி உறுதி அறிக்கையினை தனியரின் பணிப்பதிவேட்டில் பதிவு செய்திட வேண்டுமென ஆணையாளர் அவர்களின் 29.01.2009 நாளிட்ட குறிப்புரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனைதொடர்ந்து, தனியருக்கு 09.02.2009 அன்று மண்டல அலுவலர்–1, அவர்களின் முன்னிலையில் தமிழ்மொழி தேர்வு நடத்தப்பட்டு, தனியருக்கு தமிழ்மொழியில் போதி அளவு எழுதவும், பேசவும், படிக்கவும் தெரியும் என்ற அறிக்கையினை மண்டல அலுவலர்–1 அவர்களால் தனியரின் பணிப்பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

மேற்கண்ட மன்ற தீர்மானம் மற்றும் பொதுத்துறையின் சுற்றறிக்கையில் தெரிவித்துள்ளவாறு ஓய்வுபெற்ற துப்புரவு ஆய்வாளருக்கு மண்டல அலுவலர்–1 அவர்களால் தமிழ்மொழி தேர்வு நடத்தப்பட்டதன் அடிப்படையில் திரு.எம். சீனிவாசலு, துப்புரவு ஆய்வாளர், மண்டலம்–1 (ஓய்வு) அவர்களின் தாய்மொழி தெலுங்கு என்பதாலும், அன்னார் தமிழ்மொழி தேர்வில் தேர்ச்சி பெறாமையாலும், தனியர் 31.06.2007 அன்று வயது முதிர்வு ஓய்வில் சென்றுவிட்டதாலும் தமிழ்மொழி தேர்வில் தேர்ச்சி பெறுவதிலிருந்து விலக்கு அளிக்க நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:ம.அ.1.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**அ.அ.ந.க.எண்.அ3/1433/2000**
**ஆணையாளர் அவர்களின் 02.03.2009 நாளிட்ட குறிப்பு**

**28.05.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :101/2009 பொருள் எண். 23

**பணிக்கு வராத காலம் வரன்முறைப்படுத்துதல்**

திரு.ஆர்.ஏகநாதன், என்பவர் அலுவலக உதவியாளராக மண்டலம்–10லிருந்து பணி மாற்று அடிப்படையில் அரங்க அலுவலகத்தில் பணியாற்றி வருபவருக்கு 01.01.1996 ஆண்டு முதல் ஆண்டு ஊதிய உயர்வு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளும்போது, தனியர் மண்டலம்–3ல் பணியாற்றிக் கொண்டிருந்த காலத்தில் ஒழுங்கு நடவடிக்கை நிலுவையில் உள்ளதால், தணிக்கைத்தடை எழுப்பப்பட்டு ஆண்டு ஊதிய உயர்வு 01.01.1996 முதல் வழங்கப்படவில்லை என பணிப்பதிவேட்டின் மூலம் தெரிய வந்தது.

எனவே, மண்டலம்–3க்கு தனியரின் ஒழுங்கு நடவடிக்கை நிலுவை குறித்த விவரம் கேட்ட போது, அவர்கள் தனியர் வருவாய்த்துறையில் மண்டலம்–10ல் பணியாற்றியபோது, தற்காலிக பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளதால், இது தொடர்பான ஒழுங்கு நடவடிக்கை கோப்பு மண்டலம்–10ல் கையாளப்பட்டு வந்ததாகவும், தனியர் 13.06.1991 முதல் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராததால் 19.07.1991 முதல் தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்டு குற்றச்சாட்டு நிலுவையில் வைத்து 06.01.1992 முதல் மீண்டும் பணியில் சேர்த்துக் கொள்ளப்பட்டதாகவும், தவிர மண்டல அலுவலகம்–10 மூன்று இடங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டதால், ஒழுங்கு நடவடிக்கை குறித்த கோப்பு கிடைக்கப் பெறவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து கோப்பு அரங்கத்துறையின் மூலம் பொதுத் துறையின் கருத்துருவிற்கு அனுப்பப்பட்டது.

இதில் உதவி ஆணையாளர் (பொ.நி.ம.ப) அவர்களின் 22.01.2009 நாளிட்ட குறிப்பில் தனியரின் பணிக்காலத்தில் பணிக்கு வராத காலமான 29.04.1986 முதல் 13.06.1986 வரை ஈட்டிய விடுப்பு அனுமதித்தும், 14.06.1986 முதல் 30.08.1989வரை மருத்துவ சான்று அல்லாத சம்பளமில்லா விடுப்பாக அனுமதிக்கப்பட்டுள்ளது. இதற்கான குறிப்பாணை தனியரின் பணிப்பதிவேட்டில் ஒட்டப்பட்டுள்ளது.

மேற்கண்ட பணிக்கு வராத காலம் மருத்துவ சான்று அல்லாத சம்பளமில்லா விடுப்பாக அனுமதிக்கப்பட்ட நாட்கள் ஓராண்டை கடந்துள்ளதால், அடிப்படை விதிகளின்படி மன்றத்தின் அனுமதியுடன் அரசின் தளர்வாணை பெறப்பட வேண்டும்.

எனவே, தனியரின் ஒழுங்கு நடவடிக்கை குறித்தான கோப்பு கிடைக்கப் பெறாத நிலையில் தற்போது பணிப்பதிவேட்டில் உள்ள ஆவணங்களின் அடிப்படையில் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராத நாட்களான 14.06.1986 முதல் 30.08.1989 வரை ஓராண்டுக்கு மேல் உள்ள காலத்தை மருத்துவ சான்று அல்லாத சம்பளமில்லா விடுப்பாக அனுமதிக்கப்பட்டமைக்கு அடிப்படை விதி 18(2) மற்றும் 18(3)ன்படி தளர்வாணைக்கு அரசின் பின்னேற்பு அனுமதி பெற அரசுக்கு முன்மொழிவு அனுப்ப நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:அ.அ.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**ம.க.கு.ந.க.எண்.அ1/1095/2005**

**ஆணையாளர் அவர்களின் 02.03.2009 நாளிட்ட குறிப்பு**

**28.05.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :102/2009 பொருள் எண்.24

**பணிக்கு வராத காலம் வரன்முறைப்படுத்துதல்**

திரு.ஜி.மாலக்கொண்டைய்யா, அலுவலக உதவியாளர், பகுதி கணக்கு குழுமம், (கட்டிடம்) அவர்கள் 31.01.2005 முதல் பணிக்கு வராமையால் சென்னை மாநகராட்சி, வகுப்பு மூன்று மற்றும் நான்காம் நிலை பணியாளர்கள் ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு துணை விதி 9(2)ன் கீழ் ஒழுங்கு நடவடிக்கை தொடரப்பட்டு கீழ்கண்ட குற்றச்சாட்டுகளுக்கு குறிப்பாணை வழங்கப்பட்டது.

**குற்றச்சாட்டு–1** தனியர் 31.01.2005 முதல் எவ்வித முன்னறிவிப்புமின்றி தன்னிச்சையாக பணிக்கு வராமல் இருப்பது.

**குற்றச்சாட்டு–2** தனியரின் இத்தகைய செயல் அலுவலக விடுப்பு விதிமுறைகளை மீறியதாகும்.

**குற்றச்சாட்டு–3** தனியரின் இத்தகைய செயலால் பகுதி கணக்கு குழுமம் (கட்டிடம்) பிரிவில் தனியரால் மேற்கொள்ளப்பட்டு வந்த பணிகளுக்கு பாதிப்பு ஏற்படுத்தியது.

**குற்றச்சாட்டு–4** தனியர் முன்னறிவிப்பின்றி விடுப்பு எடுக்கும் பழக்கம் கொண்டவராக இருப்பது.

**தனியரின் விளக்கம்:** மேற்கண்ட குற்றச்சாட்டு குறிப்பாணையை பெற்றுக்கொண்டு தனியர் விளக்கம் ஏதும் அளிக்கவில்லை.

**விசாரணை அலுவலரின் அறிக்கை** தனியரே தன் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் அனைத்தும் உண்மை தான் என்றும், தன் தாய்க்கு கால் உடைந்ததால் தன்னால் பணிக்கு வர இயலவில்லை என்றும் விளக்கமளித்துள்ளார். தன் தாயாருக்கு மருத்துவம் பார்த்ததற்கு உண்டான எந்தவித ஆவணங்களையும் தாக்கல் செய்யவில்லை. இவர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு குறிப்பாணைக்கு எந்தவித பதிலையும் அளிக்கவில்லை. இதன் அடிப்படையில் பரிசீலனை செய்து பார்க்கும்போது இவர் மீது சுமத்தப்பட்ட நான்கு குற்றச்சாட்டுகளும் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணமாகிறது என்று தெரிவித்துள்ளார். விசாரணை அறிக்கையின் நகல் தனியருக்கு சார்பு செய்யப்பட்டு மேல் விளக்கம் பெறப்பட்டது.

**தனியரின் மேல் விளக்கம்** தன் மீது சுமத்தப்பட்ட நான்கு குற்றச்சாட்டுகளும் உண்மையே. முன்கூட்டியே தகவல் கொடுக்காததற்கு தான் மிகவும் வருந்துவதாகவும் தன் தாய் மீது இருந்த பாசத்தினால் தன்னிலை மறந்து இருந்ததாகவும் தெரிவித்துள்ளார். மேற்படி பணிக்கு வராமை குற்றத்திற்காக தன்னை மன்னிக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

இணை ஆணையர் (வ (ம)நிதி) அவர்களின் 11.04.2006 நாளிட்ட ஆணையின்படி தனியர் மீது தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கையை நிலுவையில் வைத்து மீண்டும் பணியில் சேர ஆணை வழங்கப்பட்டது. தனியர் அதனை 17.04.2006 அன்று பெற்றுக்கொண்டு 18.04.2006 முற்பகல் முதல் பகுதி கணக்கு குழுமம் (இயந்திரம்) பிரிவில் பணியில் சேர்ந்துள்ளார்.

தனியர் 31.01.2005 முதல் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராததற்கு தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கையில் குற்றச்சாட்டு குறிப்பாணை, விசாரணை அலுவலரின் அறிக்கை மற்றும் தனியரின் விளக்கம் ஆகியனயாவும் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது. நிரூபிக்கப்பட்ட குற்றச்சாட்டுகள் கடுமையானவை, இருப்பினும் நிகழ்வு கருணையுடன் அணுகப்பட்டும் தனியர் ஒரு 4ம்நிலை ஊழியர் என்பதாலும் இறுதி ஆணையாக மூன்றாண்டு ஊதிய உயர்வு திரண்ட பயனின்றி நிறுத்தம் செய்து உத்தரவிடப்பட்டது.

29.06.2008 நாளிட்ட மேல்முறையீட்டில் தனியர் தமக்கு அளிக்கப்பட்ட தண்டனையை மறுபரிசீலனை செய்ய தலைவர் நியமனக்குழு அவர்களுக்கு அளித்த மனு நியமனக்குழுவால் பரிசீலிக்கப்பட்டது.

29.03.2007 நாளிட்ட நியமனக்குழு தீர்மானத்தில் நிர்வாகம் தனியருக்கு வழங்கப்பட்ட தண்டனையை மாற்றி அமைத்து தனியரது ஊதிய உயர்வினை திரண்ட பயனின்றி ஒரு வருடத்திற்கு நிறுத்தம் செய்ய முடிவெடுத்துள்ளது.

**ம.க.கு.ந.க.எண்.அ1/1095/2005**

நியமனக்குழுவின் முடிவு தனியருக்கு 24.09.2007 அன்று தெரிவிக்கப்பட்டது. அன்னார் 60 நாட்கள் கடந்த நிலையில் அரசிற்கு மேல்முறையீடு ஏதும் செய்யப்படவில்லை. என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

எனவே, தனியர் 31.01.2005 முதல் 17.04.2006 வரை முன்னறிவிப்பின்றி பணிக்கு வராத காலம் ஒரு ஆண்டு கடந்து விட்டதால் அக்காலத்தை அடிப்படை விதி 18(2)ஐ வரன்முறைப்படுத்த மன்றத்தின் பின்னேற்பிற்குட்பட்டு அரசின் தளர்வாணை பெற குறிப்பு அரசிற்கு அனுப்பப்பட்டது.

01.02.2008 நாளிட்ட அரசு கடிதத்தில் தனியர் 31.01.2005 முதல் 17.04.2006 வரை முன்னறிவிப்பின்றி பணிக்கு வராத காலத்தை அடிப்படை விதி 18(2)ஐ தளர்வு செய்ய மன்றத்தின் தீர்மான பெற்று செயற்குறிப்பினை அரசின் பரிசீலனைக்கு அனுப்ப கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

எனவே, திரு.ஜி.மாலக்கொண்டைய்யா, அலுவலக உதவியாளர், மத்திய கணக்கு குழுமம் என்பவர் 31.01.2005 முதல் 17.04.2006 வரை முன்னறிவிப்பின்றி பணிக்கு வராத காலம் ஓராண்டிற்கு மேல் உள்ளதால் வரன்முறைப்படுத்த அடிப்படை விதி 18(2)ஐ தளர்வு செய்ய அரசிற்கு முன்மொழிவு அனுப்ப நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:ம.க.கு.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**ம.க.கு.ந.க.எண்.அ1/1762/1997**
**ஆணையாளர் அவர்களின் 04.02.2009 நாளிட்ட குறிப்பு**

**28.05.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :103/2009 பொருள் எண்.25

**பணிக்கு வராத காலம் வரன்முறைப்படுத்துதல்**

திரு.எஸ். தட்சிணாமூர்த்தி, உதவியாளர், மத்திய கணக்கு குழுமம், அவர்கள் 07.04.1997 முதல் 25.08.2004 வரை முன்னறிவிப்பின்றி பணிக்கு வராமைக்காக சென்னை மாநகராட்சி மூன்றாம் மற்றும் நான்காம் நிலைப்பணி (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) துணை விதி 9(2)ன் கீழ் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. குற்றச்சாட்டுக்களின் தன்மை, தனியரின் விளக்கம் மற்றும் விசாரணை அலுவலரின் அறிக்கையின் அடிப்படையில் இறுதி ஆணையாக 05.07.2003 மற்றும் 26.07.2004 நாளிட்ட ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணையின்படி தனியரை சென்னை மாநகராட்சி பணியிலிருந்து நிரந்தர பணி நீக்கம் (Removal From Service) செய்து உத்தரவிடப்பட்டது.

தனியர் தமக்கு வழங்கப்பட்ட பணி நீக்க உத்தரவை மறு பரிசீலனை செய்யுமாறு தலைவர், நியமனக்குழுவிற்கு மேல்முறையீடு செய்ததில் 30.05.2006 நாளிட்ட நியமனக்குழு தீர்மானத்தில் மேல்முறையீட்டு மனு கவனமாக பரிசீலிக்கப்பட்டு தனியரின் விளக்கம், குடும்ப சூழ்நிலை மற்றும் மருத்துவ சான்று ஆகியவற்றை கருத்தில் கொண்டு மனிதாபிமான அடிப்படையில் நிர்வாகம் தனியருக்கு வழங்கிய நிரந்தர பணிநீக்க தண்டணையை மாற்றியமைத்து மீண்டும் பணியில் சேர அனுமதித்து திரண்ட பயனின்றி மூன்று ஆண்டுகளுக்கு ஊதிய உயர்வு நிறுத்தம் செய்யவும் பணிக்கு வராத காலத்தை விதிகளின்படி வரன்முறைப்படுத்தவும் தீர்மானித்தது.

தனியர் அரசிற்கு சமர்ப்பித்த சீராய்வு மனுவில் தனக்கு வழங்கப்பட்ட தண்டனையான ஊதிய உயர்வினை திரண்ட பயனின்றி மூன்று ஆண்டுகளுக்கு நிறுத்தம் செய்து உத்தரவிடப்பட்டுள்ளதை மனிதாபிமான அடிப்படையிலும் கருணை அடிப்படையிலும் மறு பரிசீலனை செய்து இவ்வாணையை முற்றிலும் ரத்து செய்து உத்தரவிட வேண்டுமென்று கோரியிருந்தார். இந்நிகழ்வு குறித்து அரசிற்கு பிரேரனை அனுப்ப மன்றத் தீர்மான எண்.91/2006 நாள்.30.05.2006ன்படி திரு.எஸ்.தட்சிணாமூர்த்தி, உதவியாளர், மத்திய கணக்கு குழுமம் அவர்களுக்கு 07.04.1997 முதல் 25.08.2004 வரை முன்னறிவிப்பின்றி பணிக்கு வராமைக்காக மூன்று ஆண்டுகள் ஊதிய உயர்வு திரண்ட பயனின்றி நிறுத்தம் செய்ய நியமனக்குழுவால் தீர்மானிக்கப்பட்ட தண்டனையை சீராய்வு செய்வதற்காக குறிப்பு மற்றும் பணிப்பதிவேடு 11.10.2006 அன்று அரசுக்கு அனுப்பப்பட்டது. மேலும் அக்குறிப்பில் தனியர் 07.04.1997 முதல் 25.08.2004 வரை முன்னறிவிப்பின்றி பணிக்கு வராத காலம் ஓராண்டிற்கு மேல் உள்ளதால் அக்காலத்தை வரன்முறைப்படுத்தவும், ஆணை வேண்டப்பட்டது.

25.04.2007 நாளிட்ட அரசாணையில் தனியரின் சீராய்வு மனுவை ஏற்கத்தக்க விவரங்கள் ஏதுமில்லை என முடிவெடுத்து தனியரின் கோரிக்கையினை நிராகரித்து அரசு ஆணையிட்டது.

மேற்படி அரசு எடுத்த முடிவினை 03.10.2008 நாளிட்ட கடிதத்தின் வாயிலாக தனியருக்கு தெரிவிக்கப்பட்டது.

தனியர் 07.04.1997 முதல் 25.08.2004 வரை முன்னறிவிப்பின்றி பணிக்கு வராத காலங்களை வரண்முறைப்படுத்த வேண்டும்.

இதே தனியர் (கோப்பு எண்.ம.க.கு.ந.க.எண்.அ1/947/2005) 14.02.2005 முதல் ஓய்வு பெற வேண்டிய நாளான 31.01.2008 வரை முன்னறிவிப்பின்றி பணிக்கு வராமைக்காக அன்னார் மீது சென்னை மாநகராட்சி, மூன்றாம் மற்றும் நான்காம் நிலைப்பணியாளர் (ஒழுங்கு நடவடிக்கை மற்றும் மேல்முறையீடு) துணைவிதி 9(2)ன் கீழ் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு, விசாரணை அலுவலரை நியமித்து விசாரணை அறிக்கை பெற்று அதன் அடிப்படையில் 31.01.2008 நாளிட்ட ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணையில் தனியர் ஓய்வு பெற வேண்டிய நாளான 31.01.2008 அன்று நிரந்தர பணி நீக்கம் (Removal From Service) செய்து ஆணையிடப்பட்டது. அவ்வாணையை தனியருக்கு சார்பு செய்யப்பட்டது.

தனியர் நியமனக்குழுவிற்கு சமர்ப்பித்துள்ள மேல்முறையீட்டு மனுவில் தான் கடுமையான முடக்குவாத நோயால் பாதிக்கப்பட்டு வலது கை மற்றும் கால்களும் சரிவர அசைக்க முடியாத காரணத்தால் தன்னால் பணிக்கு வரமுடியவில்லை எனவும் தன்னை மன்னித்து ஓய்வு ஊதியம் அளிக்குமாறு கேட்டுக்கொண்டதால் அம்மனுவை பரிசீலிக்கும் பொருட்டு நியமனக்குழுவிற்கு குறிப்பு சமர்ப்பிக்கப்பட்டது.

<u>ம.க.கு.ந.க.எண்.அ1/1762/1997</u>

மேற்படி மேல்முறையீட்டு மனுவை பரிசீலித்து நியமனக்குழுவின் தீர்மானத்தில் தனியருக்கு நிர்வாகம் வழங்கிய பணிநீக்க (Removal From Service) தண்டனையை மாற்றியமைத்து அன்னாருக்கு “ கட்டாய ஓய்வு ” அளிக்க தீர்மானித்துள்ளது என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. நியமனக்குழு அன்னாருக்கு கட்டாய ஓய்வு அளிக்க தீர்மானித்துள்ள முடிவை தனியருக்கு கடிதத்தின் வாயிலாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நியமனக்குழு அன்னாருக்கு கட்டாய ஓய்வு அளிக்க தீர்மானித்துள்ளதால் அன்னார் 14.02.2005 முதல் ஓய்வு பெற வேண்டிய நாளான 31.01.2008 வரை முன்னறிவிப்பின்றி பணிக்கு வராத நாட்களை வரன்முறைப்படுத்தப்பட வேண்டும்.

எனவே, திரு.எஸ். தட்சிணாமூர்த்தி, உதவியாளர், மத்திய கணக்கு குழுமம், அவர்கள் (கோப்பு எண்.ம.க.கு.ந.க.எண்.அ1/1762/1997) 07.04.1997 முதல் 25.08.2004 வரை முன்னறிவிப்பின்றி பணிக்கு வராத நாட்களையும் கோப்பு எண்.(ம.க.கு.ந.க.எண்.அ1/947/2005) இதே தனியரின் மற்றொரு நிகழ்வில் 14.02.2005 முதல் 31.01.2008 வரை முன்னறிவிப்பின்றி பணிக்கு வராத நாட்களையும் வரன்முறைப்படுத்தப்பட வேண்டும்.

எனவே, திரு.எஸ். தட்சிணாமூர்த்தி, உதவியாளர், மத்திய கணக்கு குழுமம், அவர்கள் மேற்படி முன்னறிவிப்பின்றி பணிக்கு வராத நாட்களை வரன்முறைப்படுத்த அரசாணை பெற அரசிற்கு அறிக்கை அனுப்ப மன்றத்தின் அனுமதி நியமனக்குழு மூலமாக வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:ம.க.கு.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**ம.அ7.ந.க.எண்.அ4/0715/2008**

**ஆணையாளர் அவர்களின் 24.03.2009 நாளிட்ட குறிப்பு**

**28.05.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :104/2009 பொருள் எண். 26

**பணிக்கு வராத காலம் வரன்முறைப்படுத்துதல்**

திரு.சோமரப்ப போலைய்யா, நிரந்தர துப்புரவு பணியாளர், இ.எம்.பி.எண்.543883, ரீச்–25, பகுதி–20, மண்டலம்–7, என்பவர் 29.04.2001 முதல் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராதது குறித்து குறிப்பாணை வழங்கப்பட்டது. தனியர் 07.07.2001 அன்று குறிப்பாணையை பெற்றுக்கொண்டு விளக்கம் ஏதும் சமர்ப்பிக்கவில்லை. எனவே, மூன்று மற்றும் நான்காம் நிலைப்பணியாளர்கள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதி 9(2)ன் கீழ் தனியர் மீது கீழ்கண்ட குற்றச்சாட்டுகள் சுமத்தி குற்றச்சாட்டு குறிப்பாணை வழங்கப்பட்டது.

குற்றச்சாட்டு:–1 தாங்கள் 29.04.2001 முதல் முன்னறிவிப்பின்றி பணிக்குவராதது விதிகளை மீறிய செயலாகும்.

குற்றச்சாட்டு:–2 துப்புரவு பணிக்கு குந்தகம் விளைவித்தது.

குற்றச்சாட்டு:–3 அலுவலக ஆணையை உதாசீனப்படுத்தியது.

குற்றச்சாட்டு:–4 சென்னை மாநகராட்சி ஒழுங்கு மற்றும் நடத்தை விதி 20ஐ மீறியது.

மேற்கண்ட குற்றச்சாட்டு குறிப்பாணை 08.04.2002 அன்று பெற்றுக்கொண்டு விளக்கம் ஏதும் சமர்ப்பிக்கவில்லை. இவ்வொழுங்கு நடவடிக்கையின் தொடர்ச்சியாக விசாரணை நடத்த விசாரணை அலுவலர் நியமனம் செய்யப்பட்டது. விசாரணை அலுவலர் அவர்கள் தனியரை நேரில் விசாரணை செய்து தனது 06.09.2002 நாளிட்ட விசாரணை அறிக்கையை 11.09.2002 அன்று சமர்ப்பித்துள்ளார்.

நேர்முக விசாரணையின்போது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கு தனியர் அளித்த விளக்கம் அதற்கு விசாரணை அலுவலர் குற்றச்சாட்டுகள் கீழ்வருமாறு.

**குற்றச்சாட்டு 1க்கு தனியர் விளக்கம்:** தனக்கு மஞ்சள் காமாலை நோய் முற்றி அதிகமானதால் தான் ஆந்திராவிற்கு சென்று நாட்டு மருந்து சாப்பிட்டு வந்தேன் என்றும், தன்னால் பணிக்கு வரஇயலவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

**குற்றச்சாட்டு 1க்கு விசாரணை அலுவலரின் அறிக்கை:** பணியாளரின் விளக்கம் திருப்திகரமாக இல்லாததால் குற்றச்சாட்டு நிரூபணமாகிறது என்று தெரிவித்துள்ளார்.

**குற்றச்சாட்டு 2க்கு தனியர் விளக்கம்:** தனக்கு நோய் அதிகமான காரணத்தால் பணிக்கு வரஇயலவில்லை என்றும் சென்னை மாநகராட்சி பணிக்கு குந்தகம் விளைவிக்க வேண்டிய எண்ணம் இல்லை என்றும் தெரிவித்துள்ளார்.

**குற்றச்சாட்டு 2க்கு விசாரணை அலுவலரின் அறிக்கை:** பணியாளரின் விளக்கம் சார்புடையதாக இல்லை எனவே, குற்றச்சாட்டு நிரூபணமாகிறது என்று தெரிவித்துள்ளார்.

**குற்றச்சாட்டு 3க்கு தனியர் விளக்கம்:** அலுவலக ஆணையை உதாசீனப்படுத்தும் எண்ணம் நோக்கம் இல்லை என்றும் மஞ்சள் காமாலை நோய் காரணமாகத்தான் வரஇயலவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

**குற்றச்சாட்டு 3க்கு விசாரணை அலுவலரின் அறிக்கை:** பணியாளரின் விளக்கம் ஏற்கத்தக்கதாக இல்லாததால் குற்றச்சாட்டு நிரூபணமாகிறது என்று தெரிவித்துள்ளார்.

**குற்றச்சாட்டு 4க்கு தனியர் விளக்கம்:** மஞ்சள் காமாலை நோய் காரணமாகவே வரஇயலவில்லை எனவே, அலுவலக விதிகளை மீற வேண்டும் என்ற எண்ணம் இல்லை என்று தெரிவித்துள்ளார்.

**குற்றச்சாட்டு 4க்கு விசாரணை அலுவலரின் அறிக்கை:** பணியாளரின் விளக்கம் ஏற்புடையதாக இல்லை எனவே, குற்றச்சாட்டு நிரூபணமாகிறது என்று தெரிவித்துள்ளார்.

06.09.2002 நாளிட்ட விசாரணை அலுவலர் அறிக்கையில் தனியர் மீது சுமத்தப்பட்ட 4 குற்றச்சாட்டுகளும் நிரூபணமாகிறது என்று தெரிவித்துள்ளார். விசாரணை அறிக்கையை தனியர் பெற்றுக்கொண்டு கீழ்கண்டவாறு தனது கூடுதல் விளக்கத்தினை சமர்ப்பித்துள்ளார்.

தனக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தால் மஞ்சள் காமாலையினால் மிகவும் அவதிப்பட்டதால் தான் சொந்த ஊருக்கு சென்று சிகிச்சை பெற்று வந்ததால் எந்தவித முன்னறிவிப்பும் அலுவலகத்திற்கு தெரிவிக்க இயலவில்லை என்றும் மாநகராட்சி பணிக்கு குந்தகம் விளைவிக்க வேண்டும் என்ற எண்ணம் தன் மனதில் இல்லை என்றும் அலுவலக ஆணையை உதாசீனப்படுத்த வேண்டும் என்ற தீய எண்ணமும் தனக்கு இல்லை என்றும் சிகிச்சைக்காக ஊரில் இருந்ததால் அவ்வப்போது அலுவலகத்திற்கு வந்து தகவல் தெரிவிக்க இயலாமல் போனது என்றும் படிப்பறிவு இல்லாத என் மனைவி மற்றும் குழந்தைகளால் தகவல் தெரிவிக்கும் அளவிற்கு விவரம் தெரியாதவர்களாக இருந்ததால் இந்த தவறு நடந்துள்ளது என்றும் சென்னை மாநகராட்சி பணியாளர் ஒழுங்கு மற்றும் நடத்தை விதி 20ஐ மீற வேண்டும் என்ற எண்ணமும் தனக்கு இல்லை என்றும்,

ஆகவே இந்த ஒருமுறை மட்டும் தன்னை மன்னித்து மீண்டும் இதுபோன்ற தவறு நடக்காத வண்ணம் நடந்து கொள்வேன் என்றும் கேட்டுக்கொண்டுள்ளார்.

தனியர் மீது தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கை கோப்பினை உதவி ஆணையர் (பொ.நி.ம.ப) அவர்களுக்கு சமர்ப்பிக்கும் தருணத்தில் சென்னை மாநகராட்சி ஆணையர் அவர்களின் 16.07.2003 நாளிட்ட அதிகார பங்களிப்புபடி அந்தந்த மண்டல அலுவலர்களுக்கு அளிக்கப்பட்டது.

இதன் அடிப்படையில் 29.04.2001 முதல் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராத தனியரின் மீது தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கையில் ஒழுங்கு நடவடிக்கைக்கு எவ்வித குந்தகமின்றி மண்டல அலுவலர்–7, அவர்களின் 01.01.2004 நாளிட்ட செயல்முறை ஆணையின்படி தனியர் மீண்டும் 14.01.2004 அன்று பணியில் சேர்ந்தார்.

தனியரின் மீது தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கையின் இறுதி ஆணைபெற தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வந்த நிலையில் தனியர் வயது முதிர்வு அடிப்படையில் ஓய்வு பெற வேண்டிய நாள்.30.06.2004 பிற்பகல் ஆகும். எனவே, தனியரை ஓய்வில் செல்ல அனுமதிக்கலாமா ? என்பது குறித்து ஆணையர் அவர்களின் ஆணை வேண்டி சமர்ப்பிக்கப்பட்டது.

30.06.2004 நாளிட்ட ஆணையர் அவர்களின் ஆணைப்படி தனியர் மீது தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கையில் ஒழுங்கு நடவடிக்கைக்கு எவ்வித குந்தகமின்றி தனியரை ஓய்வில் செல்ல அனுமதிக்கலாம் என்று ஆணை வழங்கப்பட்டது.

இந்நிலையில் ஆணையரின் ஆணையின்படி 30.06.2004 அன்று பிற்பகல் முதல் வயது முதிர்வு அடிப்படையில் பணியில் இருந்து ஓய்வில் செல்ல அனுமதிக்கப்பட்டார். தனியர் மீது தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கையில் விசாரணை அலுவலரின் அறிக்கையில் தனியர் மீது சுமத்தப்பட்டுள்ள நான்கு குற்றச்சாட்டுகளும் நிரூபணமாகிறது என்று தெரிவித்துள்ளதன் அடிப்படையிலும் இவ்வொழுங்கு நடவடிக்கையின் மீது இறுதியாக ஆணையரின் ஆணைப்படி தனியருக்கு மூன்றாண்டுகள் குறைந்த பட்ச ஊதியத்திற்கு சமமான தொகை பிடித்தம் செய்ய உத்தரவிட்டுள்ளார். மேலும் அதனால் ஏற்படும் மிகை ஊதியத் தொகையான ரூ.3121/– (ரூபாய் மூன்றாயிரத்து நூற்று இருபத்தி ஒன்று மட்டும்) அவரது பணிக்கொடையில் பிடித்தம் செய்யப்படும் என திருத்திய ஆணையர் அவர்களின் 09.01.2008 நாளிட்ட செயல்முறை ஆணையினை 16.02.2008ல் தனியர் பெற்றுக்கொண்டார். இந்நிலையில் உள்ளாட்சி நிதி தணிக்கை துறையின் கருத்துரையின்படியும் ஆணையரின் 24.06.2005 நாளிட்ட செயல்முறை ஆணையின்படியும் தற்காலிக ஓய்வூதியம் தீர்வு செய்து வழங்கப்பட்டது.

எனவே, திரு.சோமரப்ப போலைய்யா, துப்புரவு பணியாளர், ரீச்–25, பகுதி–20, மண்டலம்–7, அவர்கள் 30.06.2004 அன்று வயது முதிர்வு அடிப்படையில் ஓய்வில் சென்ற பணியாளர் பணிக்காலத்தில் 29.04.2001 முதல் 13.01.2004 வரை முன்னறிவிப்பின்றி பணிக்கு வராத காலம் ஓராண்டை கடந்துள்ளதால் இக்காலத்தை வரன்முறைப்படுத்த அடிப்படை விதி 18(2)ன் கீழ் அரசின் தளர்வாணை பெற நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:ம.அ.7.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**ம.அ10.சு.து.ந.க.எண்.எ1/288/2007**

**ஆணையாளர் அவர்களின் 05.03.2009 நாளிட்ட குறிப்பு**

**28.05.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :105/2009 பொருள் எண்.27

**கடவுச்சீட்டு பெற தடையில்லா சான்று வழங்க அனுமதி**

சென்னை மாநகராட்சி, சுகாதாரத்துறை, மண்டலம்–10ல் மருத்துவ அலுவலராக பணிபுரியும் டாக்டர். B.சாந்தி அவர்கள், தான் சிங்கப்பூர் மற்றும் மலேசியா ஆகிய வெளிநாடுகளுக்கு சுற்றுலா செல்ல இருப்பதால் கடவுச்சீட்டு பெறுவதற்கு தடையில்லாச் சான்றிதழ் வழங்க கோரியுள்ளார்.

தனியர் சென்னை மாநகராட்சியில் மருத்துவ அலுவலராக பணியமர்த்தப்பட்டு 13.07.1998 முதல் பணிபுரிந்து வருகின்றார். தனியர் 13.07.2000 முதல் தகுதிகாண் பருவம் முடித்தவராக ஆணையிடப்பட்டுள்ளது. விழிப்பு அலுவலர் சென்னை மாநகராட்சி அவர்கள் தனியர் மீது ஒழுங்கு நடவடிக்கையோ, விசாரணையோ ஏதும் நிலுவையில் இல்லையென கருத்துரை வழங்கியுள்ளார். காவல்துறை துணைத் தலைவர், பாதுகாப்புப் பிரிவு, குற்றப் புலனாய்வுத்துறை, சென்னை–600 002. அவர்கள் தனியர் வெளிநாடு செல்வதற்கு மறுப்பின்மை சான்று வழங்க பரிந்துரைத்துள்ளார். விழிப்பு மற்றும் ஊழல் தடுப்புப் பிரிவு இயக்குனரிடமிருந்து விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை எனக்கடிதம் பெறப்பட்டுள்ளது.

மேலும் தனியர் சென்னை மாநகராட்சி அலுவலர்கள் கூட்டுறவு சங்கத்தில் உறுப்பினராக இல்லை எனத் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. அரசாணை எண்.259, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை, நாள்.17.12.2007, குறிப்பிட்டுள்ள நிபந்தனைக்குட்பட்டு தனியரை சிங்கப்பூர் மற்றும் மலேசியா செல்வதற்கு கடவுச்சீட்டு பெற தடையின்மைச் சான்று வழங்கலாம்.

1. தனியர் சென்னை மாநகராட்சியின் முன் அனுமதியின்றி வெளிநாட்டில் தங்கியிருக்கும் சமயத்தில் எந்தவிதமான வேலை வாய்ப்பு பெறுவதோ, பயிற்சியையோ அல்லது மேற்படிப்பு மேற்கொள்ளக்கூடாது.
2. வெளிநாட்டில் தங்கியிருக்கும் சமயத்தில் எந்த வியாபாரம் செய்வதோ அல்லது வேலைவாய்ப்பு பெறுவதோ கூடாது.
3. வெளிநாடு செல்லும் மற்றும் அங்கு தங்கியிருக்கும் நாட்களில் ஏற்படும் செலவிற்கு சென்னை மாநகராட்சி பொறுப்பேற்காது.
4. வெளிநாடு செல்வதற்கு முன், வெளிநாடு செல்வது முதல் வெளிநாட்டில் இருந்து திரும்பி வரும் வரை ஆகும் நாட்களுக்கு உண்டான தகுதியுடைய விடுப்பு கோரி அனுமதி பெற வேண்டும். மொத்த நாட்களும் ஆறு மாதங்களுக்கு மேல் விடுப்பு நீட்டிக்கப்பட மாட்டாது.
5. வெளிநாட்டில் தங்கியிருக்கும் போது தற்பொழுது பொறுப்பில் உள்ள சென்னை மாநகராட்சி பணியினை விட்டு விலகுதல் கூடாது. அவ்வாறு விலகக் கோரும் விண்ணப்பம் பரிசீலனைக்கு ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.
6. இத்தடையின்மைச் சான்று தனியர் குறிப்பிட்ட வெளிநாடு செல்வதற்கு மட்டும் பொருந்தும்.
7. இத்தடையின்மைச் சான்று வழங்கப்பட்ட தினத்திலிருந்து ஆறு மாதங்கள் வரை செல்லத்தக்கது.

டாக்டர் B.சாந்தி, மருத்துவ அலுவலர் என்பவர் சிங்கப்பூர் மற்றும் மலேசியா நாடுகளுக்கு செல்ல கடவுச்சீட்டு பெற தடையின்மைச் சான்று வழங்க நியமனக்குழு மூலம் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:ம.அ.10.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**சு.து.ந.க.எண்சி1/6927/2008**
**ஆணையாளர் அவர்களின் 02.04.2009 நாளிட்ட குறிப்பு**

**28.05.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :106/2009 பொருள் எண். 28

**வெளிநாடு செல்ல தடையின்மை சான்று பின்னேற்பு அனுமதி**

டாக்டர் E. சரஸ்வதி, உதவி சுகாதார அலுவலர், மண்டலம்–6, என்பவர் வெளிநாடு (மலேசியா)வில் உள்ள அவரது சகோதரர் குடும்ப விழாவில் கலந்து கொள்வதற்கு செல்ல தடையின்மை சான்றும் 20.12.2008 முதல் 06.01.2009 வரை ஈட்டிய விடுப்பும் கோரி 17.11.2008 தேதியிட்டு கடிதம் சமர்ப்பித்துள்ளார். இவர் ஏற்கனவே கடவுச்சீட்டு பெற்றுள்ளார்.

தனியர் சென்னை மாநகராட்சியில் 19.04.1995ல் மருத்துவ அலுவலராக பணி நியமனம் செய்யப்பட்டுள்ளார். தனியருக்கு மருத்துவ அலுவலர் பதவியில் 19.04.1995 முதல் பணிவரன்முறைப்படுத்தப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து அவருக்கு 21.09.1997 முதல் தகுதிகாண் பருவம் முடித்தவராக அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் தனியர் 23.06.2006 முதல் உதவி சுகாதார அலுவலராக பதவி உயர்வு பெற்றுள்ளார். இப்பதவியில் இவரது பணிகள் 23.06.2006 முதல் வரன்முறைப்படுத்தப்பட்டுள்ளது. தனியர் வெளிநாடு (மலேசியா) சென்று வர ஆகும் செலவினை மலேசியாவில் வசிக்கும் அவரது சகோதரர் ஏற்றுக் கொள்வதாக இசைவுக் கடிதம் சமர்ப்பித்துள்ளார்.

தனியர் மீது துறை சார்ந்த ஒழுங்கு நடவடிக்கைகள் ஏதும் நிலுவையில் இல்லை. காவல்துறை கண்காணிப்பாளர் மத்திய பாதுகாப்பு பிரிவு மத்திய புலனாய்வு துறை சென்னை–2, அவர்களின் 17.12.2008 நாளிட்ட கடிதத்தில் விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என அறிக்கை வரப்பெற்றது விழிப்பு அலுவலரின் 19.12.2008 நாளிட்ட குறிப்பில் இவர் மீது விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என அறிக்கை வரப்பெற்றது.

இதன் பொருட்டு தெரிவிப்பது உதவி சுகாதார அலுவலர் பதவி சென்னை மாநகராட்சி பணியமைப்பில் வகுப்பு–2ன் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளதால் தனியர் வெளிநாடு (மலேசியா) பயணம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி பெறப்பட வேண்டும். போதிய கால அவகாசம் இல்லாததால் மன்றத்தின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டும் பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டும் தனியர் வெளிநாடு (மலேசியா) பயணம் மேற்கொள்ள சென்னை மாநகராட்சி ஆணையரது 20.12.2008 தேதியிட்டு செயல்முறை ஆணை சு.து.ந.க.எண்.சி1/6927/2008 நாள்.20.12.2008ன்படி தடையின்மை சான்றிதழ் வழங்கப்பட்டது.

1. வெளிநாடு செல்ல நுழைவுச்சீட்டுக்கு பெறும் தடையின்மை சான்றிதழ் கொண்டு இவர் வெளிநாட்டில் தங்கும் போது வேலைவாய்ப்பை ஏற்கவோ அல்லது படிக்கவோ மற்றும் பயிற்சியிலோ கலந்துக் கொள்ளக்கூடாது.
2. வெளிநாட்டில் தங்கும் போது வியாபாரத்திலோ அல்லது பணி நியமனத்திற்காகவோ இது போன்ற சம்பந்தப்பட்ட வேலைகளில் ஈடுபடக்கூடாது.
3. வெளிநாடு செல்லும் பயண செலவு உள்பட எவ்வித தொகைகளையும் சென்னை மாநகராட்சி ஏற்காது.
4. வெளிநாட்டில் இருக்கும்போது இவர் சென்னை மாநகராட்சி பணியினை துறக்க விண்ணபிக்கக்கூடாது மீறி இவர் பணி துறக்க விண்ணப்பித்தால் எக்காரணம் கொண்டும் அக்கோரிக்கையினை ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.
5. வழங்கப்படும் தடையின்மை சான்றிதழை பயன்படுத்தி உரிய முன் அனுமதியின்றி அடுத்த வெளிநாடு பயணம் ஏதுவும் மேற்கொள்ளக்கூடாது.
6. இவ்வாணை வழங்கப்பட்ட நாளிலிருந்து ஆறுமாதத்திற்கு மட்டுமே செல்லத்தக்கது.
7. வெளிநாடு செல்லும் முன் உரிய விடுப்பு அனுமதி பெற்று வெளிநாடு செல்ல வேண்டும் அவ்விடுப்பு ஆறுமாதத்திற்கு மிகையாகக்கூடாது.
8. இத்தடையின்மைச் சான்று மலேசியா செல்ல மட்டுமே செல்லத்தக்கது.

பயணம் மேற்கொள்ள தடையின்மை சான்றிதழ் வழங்கியதற்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி நியமனக்குழு மூலமாக வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

“இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:சு.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**ம.அ7.ந.க.எண்.எச்1/1068/2009**
**ஆணையாளர் அவர்களின் 28.02.2009 நாளிட்ட குறிப்பு**

**28.05.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :107/2009 பொருள் எண். 29

**வெளிநாடு செல்ல கடவுச்சீட்டு பெற அனுமதி**

சென்னை மாநகராட்சி, சுகாதாரத்துறை, 7வது மண்டலத்தில் மருத்துவ அலுவலராக பணிபுரியும் திரு.ஜே.முகம்மது இஸ்மாயில் என்பவர் ( மாற்று பணி தொற்றுநோய் மருத்துவமனை) தனது 23.01.2009 தேதியிட்ட கடிதத்தில் தான் ஏற்கனவே கடவுச்சீட்டு பெற்றிருப்பதாகவும் சென்னை மாநகராட்சி பணியில் சேரும் முன்பே மருத்துவ மேற்படிப்பு MRCPCH (Member of Royal College of Pediatrics & Child Health) யுனைடெட் கிங்டெம்மில் சேர்ந்ததாகவும் தற்போது ஜுன் மாதம் 15 நாட்கள் (15.06.2009 முதல் 30.06.2009 வரை) கடைசி பகுதி தேர்வு எழுத லண்டன் செல்ல அனுமதி கோரியுள்ளார்.

இவர் 26.03.2008 அன்று சென்னை மாநகராட்சி பணியில் சேர்ந்தார் அரசாணை எண்.554, ந.நி.ம.கு.வ. (மாந3) துறை, நாள்.31.12.2008ன்படி இவரது பணிநியமனத்திற்கு அரசு உறுதியாக்கம் வழங்கி ஆணையிட்டுள்ளது. தனியர் மேற்படிப்பில் கடைசி பகுதி எழுதவுள்ளதால் இவரது கோரிக்கை பரிசீலித்து பின்வரும் நிபந்தனைக்களுக்குட்பட்டு அனுமதி வழங்கலாம்.

1. தனியர் படிப்பை முடித்த பின்னர் அதனை காரணம் காட்டி வழக்கமான விதிமுறைகளுக்கு மாறாக எவ்வித சலுகையோ முன்னுரிமையோ பதவி உயர்வோ கோரக்கூடாது.

2. தனியர் மேற்படிப்பை காரணம் காட்டி மாறுதல் கோரகூடாது.

3. இப்படிப்பிற்கான எவ்வித பயண மற்றும் படிப்பிற்கான செலவினை சென்னை மாநகராட்சி ஏற்காது.

தனியர் இந்நிபந்தனைகளை மீறினால் அதனால் அலுவலக பணிகளுக்கு இடையூறு ஏற்படுமானால் இவ்வனுமதியை ரத்து செய்வதுடன் தனியர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க ஏதுவாகும்.

எனவே, மேற்படி நிபந்தனைகளுக்குட்பட்டு தனியருக்கு வெளிநாடு செல்ல அனுமதி வழங்க நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:ம.அ.7.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(சு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**ம.அ6.ந.க.எண்.அ1/1885/2008**
**ஆணையாளர் அவர்களின் 28.02.2009 நாளிட்ட குறிப்பு**

**28.05.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :108/2009 பொருள் எண். 30

**வெளிநாடு செல்ல தடையின்மை சான்று வழங்க அனுமதி**

சென்னை மாநகராட்சி மண்டலம்–6ல் மண்டல அலுவலர் (பொ.) ஆக பணிபுரியும் திரு.ஜெ. வேணுகோபால் அவர்கள் தனது 14.04.2008 நாளிட்ட கடிதத்தில், தனது மைத்துனி மற்றும் மைத்துனியின் கணவரை காண அமெரிக்காவில் உள்ள நியூயார்க் நகரத்திற்கு செல்ல இருப்பதாகவும், இப்பயணத்திற்கான செலவினை அவரது மைத்துனி ஏற்றுக்கொள்ள உள்ளார் என்றும் தெரிவித்து, வெளிநாடு செல்ல கடவுச் சீட்டு பெற தடையின்மைச் சான்று வழங்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

தனியர் சென்னை மாநகராட்சியில் 28.06.1979 முதல் உதவி பொறியாளராக பணியமர்த்தப்பட்டார். 01.05.1993 முதல் உதவி செயற் பொறியாளராகவும், 17.10.2002 முதல் செயற் பொறியாளராகவும் பதவி உயர்வு பெற்று தற்போது மண்டலம்–6ல் மண்டல அலுவலர் (பொறுப்பு) ஆக பணிபுரிந்து வருகிறார். இவரது பணி செயற் பொறியாளர் பதவியில் பணியேற்ற நாளான 17.10.2002 முதல் பணிவரன்முறைப்படுத்தப்பட்டு ஆணை வழங்கப்பட்டுள்ளது. இவர் 30.06.2014 அன்று ஓய்வு பெறவுள்ளார். மேலும், தனியர் மீது சென்னை மாநகராட்சி விழிப்புக் குழுமத்தில் விசாரணை ஏதும் இல்லை என விழிப்பு அலுவலர் அவர்களது 28.11.2008 நாளிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், காவல் துறை பாதுகாப்பு பிரிவு (SB-CID), மற்றும் விழிப்பு மற்றும் லஞ்ச ஒழிப்புத் துறை இயக்குநரகக் கடிதத்திலும் தனியருக்கு கடவுச் சீட்டு பெறுவதற்கு தடை ஏதுமில்லை என முறையே 01.01.2009 மற்றும் 12.02.2009 நாளிட்ட கடிதங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது. தனியர் மீது துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கைகள் ஏதும் நிலுவையில் இல்லை.

இவர் வகிக்கும் பதவி சென்னை மாநகராட்சி பணியமைப்பில் வகுப்பு–2ன் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளதால் அயல்நாடு பயணம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி பெற வேண்டும்.

சென்னை மாநகராட்சியில் பணிபுரியும் அலுவலர்கள் வெளிநாடு செல்வதற்கு அரசாணை எண்.259, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை, நாள் 17.12.2007ல் குறிப்பிடப்பட்டுள்ள பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு அன்னார் கடவுச்சீட்டு பெற தடையின்மைச் சான்றிதழ் வழங்கலாம்.

01. வெளிநாடு செல்லவிருக்கும் இவர் வெளிநாட்டில் தங்கும் போது வேலைவாய்ப்பை ஏற்கவோ அல்லது பயிற்சியிலோ மற்றும் படிப்பிலோ கலந்து கொள்ளக் கூடாது.
02. வெளிநாடு செல்லும் பயணச் செலவு உட்பட எந்தவிதமான செலவுகளையும் சென்னை மாநகராட்சி ஏற்காது.
03. இவர் வெளிநாட்டில் இருக்கும் போது சென்னை மாநகராட்சி பணியைத் துறக்க விண்ணப்பிக்க கூடாது. மீறி இவர் பணி துறக்க விண்ணப்பித்தால் எக்காரணம் கொண்டும் அக்கோரிக்கை ஏற்கப்படமாட்டாது.
04. வெளிநாட்டில் தங்கும் போது வியாபாரத்திலோ அல்லது பணி நியமனத்திற்காகவோ இதுபோன்ற சம்பந்தப்பட்ட வேலைகளில் ஈடுபடக்கூடாது.
05. தடையின்மை சான்றிதழ் வழங்கப்படும் நாளிலிருந்து ஆறு மாதங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும்.
06. வழங்கப்படும் தடையின்மை சான்றிதழ் மூலம் பெற்ற கடவுச் சீட்டை பயன்படுத்தி ஆணையர் அவர்களின் முன்னனுமதி மற்றும் முறையான விடுப்பு அனுமதி பெறாமல் வெளிநாட்டு பயணம் மேற்கொள்ளக்கூடாது.

மேற்கண்டுள்ள நிபந்தனைகளுடன் திரு. ஜெ. வேணுகோபால், மண்டல அலுவலர் (பொறுப்பு) அவர்கள் அயல்நாடு செல்ல கடவுச் சீட்டு பெறுவதற்கு தடையின்மை சான்று வழங்க மன்றத்தின் அனுமதி நியமனக் குழு மூலமாக வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:ம.அ.6.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**<u>ம.அ6.ந.க.எண்.எச்1/1216/2007</u>**
**<u>ஆணையாளர் அவர்களின் 12.03.2009 நாளிட்ட குறிப்பு</u>**

**<u>28.05.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்</u>**

தீர்மான எண் :109/2009 பொருள் எண்.31

<u>வயது தளர்வாணை</u>

சென்னை மாநகராட்சி, மண்டலம்–6, சுகாதாரத்துறையில் மருத்துவ அலுவலராக பணியாற்றி வந்த டாக்டர் திரு.வெ.தங்கசாமி, அவர்கள் மீது நிதி சம்பந்தப்பட்ட தணிக்கைத் தடைகளால் சென்னை மாநகராட்சிக்கு நிதி இழப்பீடு ஏற்பட்டிருப்பது மற்றும் நீண்டகால முன்பணம் ஈடுசெய்யப்படாமல் நிலுவையில் இருப்பது பின்னர் தெரியவரின், அவைகளுக்கு தனியரை பொறுப்பாக்கி, இவ்விழுப்பீடுகளை இவரது ஓய்வூதியப்பயன்களிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்கிற நிபந்தனைகளுக்குட்பட்டும், மற்றும் நியமனக்குழு மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டும், அன்னாரை 30.06.2008 பிற்பகல் முதல் வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதித்து ஆணையாளர் அவர்களின் 27.06.2008 நாளிட்ட செயல்முறை ஆணையின்படி ஆணையிடப்பட்டது. பிறகு மன்ற தீர்மான எண்.426/2008, நாள்.27.08.2008ன்படி அன்னாரை 30.06.2008 பிற்பகல் முதல் நிபந்தனைகளுக்குட்பட்டு வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதித்தமைக்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி பெறப்பட்டது.

06.06.2008 நாளிட்ட துணை இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கை அவர்களின் கடிதத்தில் தனியரை 30.06.2008 முதல் வயது முதிர்வு ஓய்வு பெற்றவருக்கு ஓய்வூதியப் பயன்கள் அனுமதிக்க, இவர் பணியமர்த்தப்பட்ட போது 35 வயதைக் கடந்துள்ளார் எனவும், 35 வயதிற்கு மேல் பணியமர்த்தப்பட்டமைக்கு வயது தளர்ச்சி அனுமதி அரசிடமிருந்து பெற்ற விவரம் தாக்கல் செய்யப்பட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

06.02.2009 நாளிட்ட தனியரின் கடித்தில் தான் சென்னை மாநகராட்சியில் 07.03.1986 முதல் மருத்துவ அலுவலராக பணிபுரிந்து வந்து 30.06.2008 அன்று வயது முதிர்வு ஓய்வு பெற்றதாகவும், தான் பணியில் சேரும் போது 35 வயதை கடந்துள்ளதால், தணிக்கையில் அரசிடமிருந்து வயது தளர்வாணை பெற்ற பின்னர் குடும்ப ஓய்வூதியம் ஒப்பளிக்கப்பட வேண்டும் என்பதால், தனக்கு அரசிடமிருந்து வயது தளர்வாணை பெற்றுத் தருமாறு கேட்டுக்கொண்டுள்ளார். மேலும் தனக்கு தற்காலிக ஓய்வூதியம் வேண்டாம் எனவும், அரசிடமிருந்து வயது தளர்வாணை பெற்ற பின்னர் முழுமையாக ஓய்வூதியப் பயன்கள் பெற்றுத் தருமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

இதன் தொடர்பாக தெரிவிக்கப்படுவது என்னவெனில், தனியரை சென்னை மாநகராட்சி ஆணையாளர் அவர்களின் செயல்முறை ஆணை சு.து.ந.க.எண்.சி1/19070/84, நாள்.20.02.1986ன்படி மருத்துவ அலுவலராக 07.03.1986 முதல் சென்னை மாநகராட்சிப் பணியில் சேர்ந்தார். அன்னாரது பிறந்த தேதி 15.06.1950 ஆகும். அன்னாரது பணி நியமனம் அரசாணை எண்.937, சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை, நாள்.01.06.1989ன்படி உறுதியாக்கம் செய்யப்பட்டும், பிறகு ஆணையாளர் அவர்களின் செயல்முறை ஆணை. சு.து.ந.க.எண்.சி1/19070/89, நாள்.20.10.1989ன்படி 07.03.1988 முதல் அன்னார் தகுதிகாண் பருவம் முடித்தவராக அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் ஓய்வு பெற்ற மருத்துவ அலுவலர் திரு.வெ. தங்கசாமி, அவர்களுக்கு அரசிடமிருந்து வயது தளர்வாணை பெறப்பட்ட பின்னரே, தனியருக்கு ஓய்வூதியப் பயன்கள் அனுமதிக்க இயலும்.

எனவே, திரு.வெ.தங்கசாமி, மருத்துவ அலுவலர், சுகாதாரத்துறை, மண்டலம்–6, 30.06.2008 அன்று வயது முதிர்வு ஓய்வு பெற்றவருக்கு, ஓய்வூதிய பயன்கள் அனுமதிக்கும் பொருட்டு, தனியர் பணியில் அமர்த்தப்பட்ட போது 35 வயது கடந்துவிட்டபடியால், வயது தளர்வாணை பெற வேண்டி அரசுக்கு செயற்குறிப்பு அனுப்ப மன்றத்தின் அனுமதி நியமனக்குழு மூலமாக வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:ம.அ.6.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

சு.து.ந.க.எண்.சி1/001948/2009

ஆணையாளர் அவர்களின் 20.04.2009 நாளிட்ட குறிப்பு

28.05.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண் :110/2009 பொருள் எண். 32

பட்ட மேற்படிப்பு – பின்னேற்பு அனுமதி

சென்னை மாநகராட்சி, சுகாதாரத்துறை, மண்டலம்–4, நம்மாழ்வார் பேட்டை மருந்தகத்தில் மருத்துவ அலுவலராக பணிபுரியும் டாக்டர் வி.ஸ்ரீதேவி, என்பவர் ஸ்ரீராமசந்திரா பல்கலைகழகத்திலிருந்து பட்ட மேற்படிப்பு (M.D.Pathology) படிப்பினை 2009–10ம் ஆண்டு முதல் 3 ஆண்டுகள் பயிலுவதற்கு இடஒதுக்கீடு ஆணை பெற்று மேற்கண்ட பட்ட மேற்படிப்பினை பயிலுவதற்கு அவரை 06.04.2009 அன்று சென்னை மாநகராட்சியிலிருந்து விடுவிக்குமாறு 26.03.2009 நாளிட்ட கடிதம் வாயிலாக கோரியுள்ளார். மேலும் மேற்கண்ட பட்ட மேற்படிப்பு முடிவடைந்து மீண்டும் சென்னை மாநகராட்சியில் பணியில் சேருவதாக தெரிவித்துள்ளார்.

இதன்பொருட்டு தெரிவிப்பது டாக்டர் வி.ஸ்ரீதேவி, என்பவர் அரசின் உறுதியாக்கத்திற்குட்பட்டு சென்னை மாநகராட்சி ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை சு.து.ந.க.எண்.சி1/00354/2008, நாள். 20.03.2008ன்படி பணி நியமனம் செய்யப்பட்டு தனியர் 06.06.2008 முதல் மருத்துவ அலுவலராக பணியில் சேர்ந்தார். தனியரது பணி நியமனம் குறித்து அரசின் உறுதியாக்கம் பெற அரசிற்கு செயற்குறிப்புகள் அனுப்பப்பட்டு அரசாணையை எதிர்பார்க்கப்படுகிறது.

மருத்துவ அலுவலர் பதவி சென்னை மாநகராட்சி பணியமைப்பில் வகுப்பு–2ன் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளதால் தனியர் பட்ட மேற்படிப்பு பயில மன்றத்தின் அனுமதி பெறப்பட வேண்டும். ஆனால் போதிய கால அவகாசம் இல்லாததாலும் தனியரை 06.04.2009 அன்றே விடுவிக்க வேண்டியுள்ளதாலும், தனியரை ஸ்ரீராமசந்திரா பல்கலை கழகத்தில் 2009–10ம் ஆண்டு முதல் 2012ம் ஆண்டு வரை 3 ஆண்டுகள் பட்ட மேற்படிப்பு (M.D.Pathology) பயில மன்றத்தின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டும் பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டும் தனியரை செயல்முறை ஆணை சு.து.ந.க.எண்.சி1/001948/2009, நாள்.03.04.2009ன்படி 06.04.2009 அன்று சென்னை மாநகராட்சி பணியிலிருந்து விடுவிக்கப்பட்டார்.

1. தனியர் மருத்துவ மேற்படிப்பு முடித்து சென்னை மாநகராட்சியில் மீண்டும் பணியில் சேர வேண்டும்.
2. அரசாணை எண்.31 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.24.02.2005ன்படி தனியர் மேற்படி பயில செல்லும் கால ஊதியம் தவிர்த்து தகுதிகாண் பருவம் ஊதிய உயர்வு ஓய்வூதியம் போன்றவைகளுக்கு மட்டும் எடுத்துக்கொள்ளப்படும்.
3. தனியர் மேற்படிப்பு பயிலுவதற்கு ஆகும் எந்த செலவினங்களையும் சென்னை மாநகராட்சி ஏற்காது.
4. தனியர் மேற்படிப்பு பயிலும் காலத்தில் பணிதுறப்பு கோரி விண்ணப்பிக்கக்கூடாது. மீறி விண்ணப்பித்தால் எக்காரணம் கொண்டும் அக்கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.
5. தனியர் இப்படிப்பை காரணம் காட்டி பதவி உயர்வு ஏதும் கோரக்கூடாது.

தனியரை மன்றத்தின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டும் மேற்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டும் ஸ்ரீராமசந்திரா பல்கலை கழகத்தில் 2009–10 முதல் 2011–12ம் கல்வி ஆண்டில் 3 ஆண்டுகள் பட்ட மேற்படிப்பு (M.D.Pathology) பயில அனுமதி அளித்து 06.04.2009 அன்று சென்னை மாநகராட்சியிலிருந்து விடுவித்ததற்கு நியமனக்குழு மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:சு.து.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(சு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**இ.பொ.து.ந.க.எண்.எம்4/4896/2008**
**ஆணையாளர் அவர்களின் 19.02.2009 நாளிட்ட குறிப்பு**

**28.05.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :111/2009 பொருள் எண். 33

**பெயர் மாற்றம் செய்ய அனுமதி**

திரு.எச்.கலைவண்ணன், நேரக் காப்பாளர், தான் மண்டலம்–9 லாரி நிலையத்தில் பத்து ஆண்டுகளுக்கு மேல் தினக்கூலி நேரக் காப்பாளராக பணிபுரிந்து வந்ததாகவும், தனக்கு வழங்கப்பட்ட நிரந்தர பணிநியமன உத்திரவில், எச்.கலைவண்ணன், என்பதற்கு பதிலாக எச்.கலைவாணன் என்று உள்ளதாகவும், தன் பெயரை எச்.கலைவண்ணன் என திருத்தம் செய்யுமாறு கோரி உள்ளார். எஸ்.எஸ்.எல்.சி. மதிப்பெண் பட்டியல் மற்றும் வேலை வாய்ப்பு அட்டையையும் இணைத்துள்ளார். உதவி செயற் பொறியாளர்(இ)–3 அவர்களும், தகுந்த பெயர் திருத்தம் மேற்கொள்ளும்படி 19.12.08 நாளிட்ட குறிப்பில் கோரியுள்ளார்.

தனியரது எஸ்.எஸ்.எல்.சி. மதிப்பெண் அட்டை மற்றும் வேலை வாய்ப்பு அட்டையிலும் எச்.கலைவண்ணன் என தனியரது பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. தற்காலிக நேரக் காப்பாளர்களை பணி நிரந்தரம் செய்யும்பொருட்டு கோப்பினை கையாளும் போது ஆரம்பத்திலிருந்து திரு.எச்.கலைவாணன் என்ற பெயர் உபயோகப்படுத்தப்பட்டு வந்துள்ளது. அதனடிப்படையிலேயே அரசுக்கு கருத்துரு அனுப்பப்பட்டது.

இதனடிப்படையில் வெளியிடப்பட்ட அரசாணையில் நிலை எண்.124, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர்வடிகால் துறை (மாந–1) துறை 30.6.08லும் ‘‘கலைவாணன் என்றே இடம் பெற்றுள்ளது. அரசாணையை தொடர்ந்து 08.07.2008 நாளிட்ட ஆணையரின் செயல் முறை ஆணையிலும் எச்.கலைவாணன் என நிரந்தர பணிநியமன உத்திரவு வழங்கப்பட்டது.

தனியர் தற்போது தனது பெயரை எச்.கலைவண்ணன், என பணிநியமன உத்திரவில் திருத்தம் செய்து தரும்படி கோரியுள்ளதாலும், தகுந்த ஆவணங்களை சமர்ப்பித்துள்ளதாலும் திருத்திய அரசாணை பெற வேண்டியுள்ளது.

எனவே, தனியரது பெயரை எச்.கலைவாணன் என்பதற்கு பதிலாக எச்.கலைவண்ணன் என திருத்தம் செய்யும்பொருட்டு அரசுக்கு முன்மொழிவுகள் அனுப்ப நியமனக்குழு மூலமாக மன்ற அனுமதி வேண்டி கோப்பு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:இ.பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

மா.கு.ந. (ம) ம.கு.ந.எண்.எப்5/2801/2008
ஆணையாளர் அவர்களின் 12.02.2009 நாளிட்ட குறிப்பு

28.05.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண் :112/2009 பொருள் எண். 34

ஒருவழி பணியிட மாறுதல் அனுமதி

சென்னை மாநகராட்சி, மாவட்ட குடும்ப நலத்துறையில் ஐந்தாவது இந்திய மக்கள் தொகை திட்டத்தின் கீழ் பலநோக்கு சுகாதார பணியாளர் பணியிடம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இப்பதவியில் உள்ள காலி பணியிடத்திற்கு ஒருவழி பணி இட மாறுதல் கோரி திருப்பூர், திருச்சிராப்பள்ளி மாநகராட்சி மற்றும் தாம்பரம் நகராட்சியில் பணி செய்து வரும் பலநோக்கு சுகாதார பணியாளர்களிடமிருந்து கடிதங்கள் பெறப்பட்டுள்ளது.

இது தொடர்பாக தெரிவித்துக் கொள்வது யாதெனில், சென்னை மாநகராட்சி, மாவட்ட குடும்ப நலத்துறையில் பலநோக்கு சுகாதார பணியாளர் பதவியில் 11 பணியிடங்கள் காலியாக உள்ளன. இதில் 6 பணியிடங்கள் ஒருவழி பணியிட மாறுதல் மூலம் நிரப்ப மன்றத்தீர்மானங்களுடன் அரசின் ஆணை வேண்டி அரசுக்கு 31.10.2008 அன்று கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. இந்நிலையில் மீதம் உள்ள 5 காலி பணியிடங்களில் பிற மாநகராட்சியிலிருந்து பணிமாறுதல் கோரும் 4 பலநோக்கு சுகாதார பணியாளர்களை கொண்டு நிரப்பலாம்.

மாநகராட்சியில் பணி செய்து வரும் பணியாளர்களை மற்றொரு மாநகராட்சிக்கு மாறுதல் செய்வதற்கான உத்தரவு அரசிடமிருந்து பெறப்பட வேண்டும். இதற்கான அறிவுரைகள் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, கடித எண்.27274/மாந–5/96–1, நாள்.08.07.96–ல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் திருப்பூர், திருச்சி மாநகராட்சி மற்றும் தாம்பரம் நகராட்சியிலிருந்து குடும்ப சூழ்நிலை காரணமாக சென்னை மாநகராட்சிக்கு ஒருவழி பணிஇட மாறுதல் கோரும் பலநோக்கு சுகாதார பணியாளர்களுக்கு பணிமாறுதலில் வர அனுமதிக்கலாம். பணிஇட மாறுதல் கோரும் பணியாளர்கள் பெயர் பின்வருமாறு:–

| வ. எண். | பணியாளர் பெயர் திருமதி. | பதவி | தற்போது பணிபுரியும் இடம் | இடம் மாறுதல் கோரும் இடம் | மன்ற தீர்மான எண். |
|---|---|---|---|---|---|
| 01 | சி.எஸ்.சாரதா | ப.நோ.சு.ப. | திருப்பூர் மாநகராட்சி | சென்னை மாநகராட்சி | 335/08, நாள்.29.05.08 |
| 02 | நெ.உ.ஏகேஸ்வரி | ப.நோ.சு.ப. | திருப்பூர் மாநகராட்சி | சென்னை மாநகராட்சி | 612/08 நாள்.28.08.08 |
| 03 | ஜோ. ரஜினி | ப.நோ.சு.ப. | திருச்சிராப்பள்ளி மாநகராட்சி | சென்னை மாநகராட்சி | 174/08 நாள்.30.06.08 |
| 04 | ஆர்.சாமுண்டிஸ்வரி | ப.நோ.சு.ப. | தாம்பரம் நகராட்சி | சென்னை மாநகராட்சி | 1743/08 நாள்.18.09.08 |

பலநோக்கு சுகாதார பணியாளர் பதவி மாவட்ட குடும்ப நலத்துறையில் ஐந்தாவது இந்திய மக்கள் தொகை திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இவர்களது பணி மாநகராட்சியின் மருத்துவ பணிகளில் முக்கிய பங்கு வகிக்கிறது. சென்னை மாவட்டத்தின் மக்கள் தொகையை கட்டுப்படுத்த தேவையான மருத்துவ பணிகளில் ஈடுபடுதல், குழந்தைகளுக்கும் மற்றும் பிரசவ கால தாய்மார்களுக்கும் நோய் தடுப்பு ஊசி போடுதல் குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து வழங்குவது மற்றும் பல்வேறு மருத்துவ முகாம்களை நடத்துவது போன்ற மருத்துவ பணிகளில் பலநோக்கு சுகாதார பணியாளர் பங்கு மிகவும் அவசியமாக உள்ளது. இப்பதவிக்கு 2:1 என்கிற விகிதத்தில் அரசின் மானியம் பெறப்பட்டு ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது. இப்பதவியில் காலியாக உள்ள பணியிடத்தில் ஒருவழி பணிஇட மாறுதல் மூலம் மேற்தெரிவிக்கப்பட்டுள்ள 4 பலநோக்கு சுகாதார பணியாளர் பதவிகள் நிரப்புவதால் சென்னை மாநகராட்சியில் மருத்துவ பணி மேம்படும்.

சென்னை மாநகராட்சியில் காலியாக உள்ள பலநோக்கு சுகாதார பணியாளர் பதவிக்கு திருப்பூர், திருச்சிராப்பள்ளி மாநகராட்சி மற்றும் தாம்பரம் நகராட்சியிலிருந்து ஒருவழி பணிஇட மாறுதலில் வர அனுமதித்து சம்பந்தப்பட்ட மாநகராட்சியில் மன்றத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதால் மேற்தெரிவிக்கப்பட்டுள்ள 4 பலநோக்கு சுகாதார பணியாளர்கள் கீழ்கண்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு மன்றத்தின் ஒப்புதலுடன் அரசின் ஆணை பெற்று நிரப்பலாம்.

பணிமாறுதலுக்கான நிபந்தனைகள் பின்வருமாறு:

01. இப்பணியாளர் மாறுதலுக்கு பிறகு சென்னை மாநகராட்சியில் தனது பதவிக்கான முன்னுரிமை பணி மூப்பு பட்டியலில் கடைசியில் இடம் பெறுவார்.

02. பணி செய்து வரும் மாநகராட்சியில் கடைசியாக பெற்று வந்த ஊதியத்துடன் நடைமுறையில் அவ்வப்போது வழங்கப்படும் படிகளையும் பெற அனுமதிக்கப்படுவார்.

03. பணியாளர் தனது சம்பளத்துடன் சென்னை மாநகராட்சி பணியாளர்களின் சம்பளத்தை ஒப்பிட்டு ஊதிய முரண்பாடு கோர இயலாது.

04. இப்பணியாளரின் பொது வைப்பு நிதி, குடும்ப நல சிறப்பு வைப்பு நிதி மற்றும் கூட்டு ஆயுள் காப்பீட்டு திட்டம் போன்றவைகள் முடிக்கப்பட்டு சென்னை மாநகராட்சி கணக்கிற்கு மாற்றப்பட வேண்டும்.

05. பணியாளர் பணி செய்து வரும் மாநகராட்சியில் பணிபுரிந்த நாட்களுக்கான ஓய்வூதியம் மற்றும் விடுப்பு கால சந்தா தொகை ஆகியவை கணக்கிட்டு சென்னை மாநகராட்சிக்கு மாற்றப்பட வேண்டும்.

06. பணியாளர் தனது வேண்டுகோளின் அடிப்படையில் மாறுதல் கோருவதால் பயணப்படி மற்றும் பணியில் சேருவதற்கான பணியேற்பிடைக் காலம் ஏதும் வழங்கப்பட மாட்டாது.

மேற்தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுடன் திருப்பூர், திருச்சிராப்பள்ளி மாநகராட்சி மற்றும் தாம்பரம் நகராட்சியில் பணிபுரிந்து வரும் அட்டவணையில் தெரிவித்துள்ள 4 பலநோக்கு சுகாதார பணியாளர்களுக்கு சென்னை மாநகராட்சிக்கு ஒருவழி பணிஇட மாறுதலில் வர நியமனக்குழு மூலம் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:மா.கு.ந.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18.　　　　மன்றச் செயலாளர்

**<u>பொ.து.ந.க.எண்.ஈ3/42884/08</u>**
**<u>ஆணையாளர் அவர்களின் 24.04.2009 நாளிட்ட குறிப்பு</u>**

## <u>28.05.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்</u>

தீர்மான எண் :113/2009 பொருள் எண்.35

### <u>துணை ஆணையர்(சுகாதாரம்) பொறுப்பேற்ற விவரம்</u>

அரசாணை (நிலை) எண்.4445, பொது (சிறப்பு—அ) துறை, நாள்.04.11.2008ன்படி திருமதி.பி.ஜோதி நிர்மலா, இ.ஆ.ப., அவர்கள் சென்னை மாநகராட்சியில் துணை ஆணையர் (சுகாதாரம்) ஆக 19.11.2008 முற்பகல் பொறுப்பேற்ற விவரம் மன்றத்தின் தகவலுக்கும் மற்றும் பதிவுக்கும் நியமனக்குழு மூலமாக சமர்ப்பிக்கப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பதிவு செய்து மன்றத்தின்
தகவலுக்காகவும், பதிவிற்காகவும் சமர்ப்பிக்கின்றது"

"இதனை மன்றம் பதிவு செய்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ—18. மன்றச் செயலாளர்

**பொ.து.ந.க.எண்.ஈ3/1563/09**
**ஆணையாளர் அவர்களின் 20.02.2009 நாளிட்ட குறிப்பு**

**28.05.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :114/2009 பொருள் எண். 36

**துணை ஆணையர்(கல்வி) பொறுப்பேற்ற விவரம்**

அரசாணை (நிலை) எண்.5236, பொது (சிறப்பு–அ) துறை, நாள்.23.12.2008ன்படி திரு.எம்.பாலாஜி, இ.ஆ.ப., அவர்கள் சென்னை மாநகராட்சியில் துணை ஆணையர் (கல்வி) ஆக 07.01.2009 முற்பகல் பணியேற்ற விவரம் மன்றத்தின் தகவலுக்கும் மற்றும் பதிவுக்கும் நியமனக்குழு மூலமாக சமர்ப்பிக்கப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பதிவு செய்து மன்றத்தின்
தகவலுக்காகவும், பதிவிற்காகவும் சமர்ப்பிக்கின்றது"

"இதனை மன்றம் பதிவு செய்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**<u>பொ.து.ந.க.எண்.ஈ3/7101/2009</u>**
**<u>ஆணையாளர் அவர்களின் 04.05.2009 நாளிட்ட குறிப்பு</u>**

**<u>28.05.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்</u>**

தீர்மான எண் :115/2009 பொருள் எண். 37

**<u>துணை ஆணையர்(வருவாய் மற்றும் நிதி) பொறுப்பேற்ற விவரம்</u>**

அரசாணை (நிலை) எண்.835, பொது (சிறப்பு—அ) துறை, நாள்.28.02.2009ன்படி திரு.எம்.வல்லளார், இ.ஆ.ப., அவர்கள் சென்னை மாநகராட்சியில் துணை ஆணையர் (வருவாய் மற்றும் நிதி) ஆக 02.03.2009 முற்பகல் பணியேற்ற விவரம் மன்றத்தின் தகவலுக்கும் மற்றும் பதிவுக்கும் நியமனக்குழு மூலமாக சமர்ப்பிக்கப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பதிவு செய்து மன்றத்தின்
தகவலுக்காகவும், பதிவிற்காகவும் சமர்ப்பிக்கின்றது"

''இதனை மன்றம் பதிவு செய்கின்றது''
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(து.1) அ.,செ—18. மன்றச் செயலாளர்

சு.து.ந.க.எண்சி1/5020/2008

ஆணையாளர் அவர்களின் 28.02.2009 நாளிட்ட குறிப்பு

28.05.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண் :116/2009 பொருள் எண். 38

மருத்துவ அலுவலர் பணி நியமனம் பின்னேற்பு அனுமதி

சென்னை மாநகராட்சி சுகாதாரத்துறையில் ஒப்பளிக்கப்பட்ட மருத்துவ அலுவலர் பணியிடம் 94 ஆகும். 2006–07ம் ஆண்டில் 31 பணியிடங்கள் காலியாக இருந்தன. இதன் பின்னர் 3 பணியிடங்கள் வயது முதிர்வு ஓய்வு காரணமாக காலியானதால் மொத்த காலிப்பணியிடங்கள் 34 ஆக இருந்தன. அரசாணை (ப) எண்.57 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.13.02.2007ன்படி சுகாதாரத் துறையில் காலியாக இருந்த மருத்துவ அலுவலர் பணியிடங்களை 2006–07ம் ஆண்டு 50 விழுக்காடு பணியிடங்களையும் 2007–08ம் ஆண்டில் மீதமுள்ள 50 விழுக்காடு பணியிடங்களையும் நிரப்பிக் கொள்ள அரச ஆணை பிறப்பித்தது. அரசாணையின்படி மருத்துவ அலுவலர் காலிப்பணியிடங்களை நிரப்ப மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகத்திலிருந்து நபர் பட்டியல் பெறப்பட்டு இதுவரை 27 மருத்துவ அலுவலர் பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன. இதில் 31.12.2007 முடிய 7 மருத்துவ அலுவலர் பணியிடங்கள் காலியாக இருந்தன.

மருத்துவ அலுவலர் பதவி சென்னை மாநகராட்சி பணியமைப்பில் வகுப்பு–2ன் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளதால் இப்பதவி சென்னை மாநகராட்சி சட்ட விதி 1919 துணை விதி 85(3)(பி)ன்படி அரசின் உறுதியாக்கத்திற்குட்பட்டு மன்றம் பணி நியமனம் செய்ய அதிகாரம் பெற்றுள்ளது.

சென்னை மாநகராட்சி பொது சுகாதாரம் மற்றும் மருத்துவ பணி விதிகள் 1998ன்படி மருத்துவ அலுவலர் (அலோபதி) பதவியினை நேரடி நியமனம் மூலம் நிரப்பப்பட வேண்டும். இப்பதவிக்கான காலமுறை ஊதிய விகிதம் ரூ.8000–275–13500 கல்வித்தகுதி அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தினால் வழங்கப்பட்ட M.B.B.S. பட்டம் மற்றும் தமிழ்நாடு மருத்துவ அவையில் பதிவு செய்திருக்க வேண்டும்.

31.12.2007க்கு முன்னர் 7 பின்னடைவு பணியிடங்களை நிரப்ப வேலை வாய்ப்பு அலுவலகத்திலிருந்து நபர் பட்டியல் கோரப்பட்டது. அரசாணை எண்.18 தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பு (N2) துறை நாள்.25.02.2008ன்படி ஒரு காலிப்பணியிடத்திற்கு 5 நபர்கள் என்ற விகிதம் அடிப்படையில் 35 நபர்கள் அடங்கிய பெயர் பட்டியலும், இதற்கு முன்னர் மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகத்திலிருந்து பதிவு மூப்பில் உள்ள ஒரு நபர் பட்டியலும் பெறப்பட்டது. ஆக மொத்தம் 36 நபர்கள் பட்டியல் பெறப்பட்டது. இப்பட்டியல்களில் உள்ள 36 நபர்களையும் 15.10.2008 அன்று சான்றிதழ் சரிபார்ப்பிற்கு ஆஜராகும்படி அழைப்புக் கடிதங்கள் அனுப்பப்பட்டது. இவர்களில் 15.10.2008 அன்று கீழ்கண்ட 10 நபர்கள் மட்டுமே சான்றிதழ் சரிபார்ப்பிற்கு ஆஜரானார்கள் அதன்விவரம் பின்வருமாறு.

| வ. எண் | பதிவு எண் | பெயர் மற்றும் விலாசம் | பிறந்த தேதி மற்றும் வயது | இனம் |
|---|---|---|---|---|
| 1 | 2000 MO 02344 02.03.2000 | டாக்டர்.V.C. பூர்ண சந்திரன் 16/9 வீரபாண்டி நகர் முதல் தெரு, சூளைமேடு, சென்னை–94 | 27.08.1977 31 Years | B.C. NP |
| 2 | 2002 M 22538 S.F 05.12.2002 | டாக்டர்.J.சுகிர்தராஜ் சாமுவேல் 3, ஜனகராஜ் தெரு, நேருநகர், சாலிகிராமம், சென்னை–93 | 16.07.1968 41 Years | G.L. B.C. Others NP |
| 3 | 2001 M 12599 S.F 28.08.2001 | டாக்டர்.S.குருபிரசாத் 50/16C-1அக்ஷய பிளாட், விருகம்பாக்கம், சென்னை–92 | 20.02.1976 32 Years | G.L. O.C. NP |
| 4 | 2003 M.O. 1925 S.F 19.02.2003 | டாக்டர்.M.மோகன் ராம்குமார் 313 5வது தெற்கு குறுக்குத் தெரு, கபாலிஸ்வரர் நகர், நீலாங்கரை, சென்னை–41 | 20.02.1976 32 Years | G.L. O.C. NP |

| | | | | |
|---|---|---|---|---|
| 5 | 2002 F.O.<br>1797 S.F<br>18.01.2002 | டாக்டர்.S.P.K.சௌபாக்கியலட்சுமி<br>79/264 டாக்டர் லட்சுமண சாமி சாலை, கே.கே.நகர், சென்னை–78 | 03.01.1976<br>32 Years | S.C.<br>NP (W) |
| 6 | 2005 F.O.<br>3683 S.F<br>16.03.2005 | டாக்டர்.சு. ஏஞ்சலோ மரியம்<br>5/3 மாதா சர்ச் ரோடு, இராயபுரம், சென்னை–13 | 16.09.1980<br>28 Years | S.C.<br>NP (W) |
| 7 | 2005 F.O.<br>4236 S.F<br>31.03.2005 | டாக்டர்.S. யுவராணி<br>Y5 PM Nagar பல்லக்குமா நகர், மைலாப்பூர், சென்னை–4 | 23.09.1982<br>26 Years | S.C.<br>NP (W) |
| 8 | 2007 F. 19344 S.F<br>12.06.2007 | டாக்டர்.L. கோமதி,<br>4 AKR நகர், ஸ்ரீதேவி கார்டன்ஸ் முதல் குறுக்குத் தெரு, வளசரவாக்கம்,<br>சென்னை–87 | 26.04.1982<br>26 Years | MBC.<br>NP (W) |
| 9 | 2007 F. 19898 S.F<br>15.06.2007 | டாக்டர். யசோதா,<br>69 MTH ரோடு, ஸ்ரீ அன்னை காம்ப்ளக்ஸ், திருமுல்லைவாயல்,<br>சென்னை–62 | 17.08.1983<br>25 Years | MBC.<br>NP (W) |
| 10 | 2005 F. 06003 S.F<br>05.05.2005 | டாக்டர்.C. கோமதி,<br>18 சத்யமூர்த்தி தெரு, ப.எண்.16, சூளைமேடு,<br>சென்னை–94 | 04.06.1981<br>27 Years | OC. NP (W) |

15.10.2008 அன்று நடைபெற்ற சான்றிதழ் சரிபார்ப்பிற்கு கலந்து கொண்ட மேற்படி 10 மருத்துவர்களில் 7 காலிப்பணியிடங்களில் 6 பணியிடங்களுக்கு கீழ்கண்ட வகையில் இன சுழற்சி முறையில் பணி நியமனம் செய்யப்பட வேண்டும்.

| நியமனம் செய்ய வேண்டிய இனசுழற்சி | கலந்து கொண்டவர் இனசுழற்சி | தேர்ந்தெடுக்க வேண்டிய இனசுழற்சி |
|---|---|---|
| BC(P) 01 | 01 (Already List received from Employment Exchange) | 01 |
| B.C NP 02 | 01 | 01 |
| OC. NP 01 | 02 | 01 |
| SC. NP (W) 01 | 03 | 01 |
| MBC (P) 01 list of NP Candidate from Employment Exchange) | 02 | 01 |
| OC. NP (W) 01 | ---- | 01 |

சான்றிதழ் சரிபார்ப்பிற்கு கலந்து கொண்ட 10 நபர்களில் ஏற்கனவே பெறப்பட்ட பட்டியலின்படி B.C priority இனசுழற்சியில் 1 நபருக்கு 1 நபரும் B.C (NP) 02 நபருக்கு ஒரு நபரும் O.C (NP) இனசுழற்சியில் 1 நபருக்கு இரண்டு நபர்களும் S.C (NP) பிரிவில் 1 நபருக்கு 03 நபர்களும் MBC (NP) பிரிவில் 1 நபருக்கு 02 நபர்களும் மற்றும் O.C (NP) (W) பிரிவில் 1 நபருக்கு 01 நபரும் கலந்து கொண்டனர். இவர்களில் இனசுழற்சி பதிவு மூப்பு மற்றும் அவர்கள் பெற்றுள்ள மதிப்பெண்களில் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய நபர்களின் பட்டியல் பின்வருமாறு அமைகிறது.

**சு.து.ந.க.எண்சி1/5020/2008**

| வ. எண் | போட்டி இனம் | பெயர் ம இனம் திரு/ திருமதி/ செல்வி | பிறந்த தேதி மற்றும் வயது | மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலக பிரிவு / தேதி |
|---|---|---|---|---|
| 1 | BC(P) இப்பிரிவின் நபர்கள் இல்லாததால் B.C (NP) நபர் பட்டியல் மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகத்தில் இருந்து பெறப்பட்டுள்ளது. | டாக்டர்.V.C. பூர்ண சந்திரன் B.C (NP) | 27.08.1977 31 | 2000 MO 02344 02.03.2000 |
| 2 | B.C (NP) | டாக்டர்.J.சுகிர்தராஜ் சாமுவேல் B.C (NP) (Other than) | 16.07.1968 41 | 2002 M 22538 S.F 05.12.2002 |
| 3 | O.C (NP) | டாக்டர்.S.குருபிரசாத் O.C (NP) | 20.02.1976 32 | 2001 M 12599 S.F 28.08.2001 |
| 4 | S.C (NP) | டாக்டர்.SPK.சௌபாக்கிய லட்சுமி S.C (NP) (W) | 03.01.1976 32 | 2002 F.O. 1797 S.F 18.01.2002 |
| 5 | MBC இப்பிரிவின் நபர்கள் இல்லாததால் MBC (NP) நபர் பட்டியல் மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகத்தில் இருந்து பெறப்பட்டுள்ளது. | டாக்டர்.L.கோமதி MBC (NP) (W) | 26.04.1982 26 | 2007 F. 19344 S.F 12.06.2007 |
| 6 | O.C (NP) (W) | டாக்டர்.C.கோமதி O.C (NP) (W) | 04.06.1981 27 | 2005 F. 06003 S.F 05.05.2005 |

மேற்கண்ட பட்டியலில் வரிசை எண்.2ல் கண்டுள்ள நபரான டாக்டர்.J.சுகிர்தராஜ் சாமுவேல் என்பவர் வரையறுக்கப்பட்டுள்ள பணிவிதிகளின்படி 35 வயதை கடந்துள்ள போதிலும் அரசாணை எண்.98, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்துறை நாள்.17.07.2006ல் அரசு பணிகளுக்கு வயது வரம்பினை மேலும் 5 ஆண்டுகளுக்கு தளர்வு செய்து ஆணை வழங்கியுள்ளதாலும் தமிழ்நாடு சார்நிலை பணியாளர் பணி விதிகள் ( Tamil Nadu State and Subordinate Service Rules 12 d(ii))ன்படி வரையறுக்கப்பட்டுள்ள விதிகளில் குறிப்பிட்டுள்ள வயதினை தளர்வு செய்து அரசாணையை எதிர்நோக்கி பணி நியமனம் வழங்கலாம் என்பதாலும் மேற்படி பட்டியலில் உள்ள 6 நபர்களை சென்னை மாநகராட்சி சட்ட விதி 1919 துணை விதி 85(3)(பி)ன்படி அவசரம் மற்றும் அவசியத்தினை கருத்தில் கொண்டு அரசின் உறுதியாக்கத்திற்குட்பட்டும் மன்றத்தின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டும் தற்காலிகமாக ரூ.8000–275–13500 என்ற காலமுறை ஊதியத்தில் மருத்துவ அலுவலராக பணி நியமனம் செய்யப்பட்டு பணி நியமன ஆணை வழங்கப்பட்டது.

வரிசை எண்.1,2, மற்றும் 4ல் கண்டுள்ள நபர்கள் 03.12.2008 அன்று மருத்துவ அலுவலர்களாக பணியில் சேர்ந்துள்ளனர். வரிசை எண்.3,5, மற்றும் 6ல் கண்டுள்ள நபர்கள் பணியில் சேரவில்லை. வரிசை எண்.3ல் கண்டுள்ள டாக்டர். எஸ்.குருபிரசாத், என்பவர் தனது 10.12.2008 நாளிட்ட கடிதத்தில் தனது தந்தை புற்று நோயால் பாதிக்கப்பட்டு உள்ளதாலும் அருகில் இருந்து கவனிக்க வேண்டிய சூழ்நிலையில் உள்ளதாலும் பணியில் சேர இரண்டு மாத கால அவகாசம் கோரியிருந்தார். 2 மாத கால அவகாசம் முடிவடைந்தும் இந்நாள்வரை பணியில் சேரவில்லை. மருத்துவ சேவையின் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு தனியருக்கு வழங்கப்பட்ட பணிநியமன ஆணையை இரத்து செய்யலாம் என கருதப்படுகிறது.

<u>சு.து.ந.க.எண்சி1/5020/2008</u>

எனவே போதிய கால அவகாசம் அளித்தும் பணியில் சேராத காரணத்தினால் டாக்டர் எஸ்.குருபிரசாத், (டாக்டர்.L.கோமதி மற்றும் டாக்டர்.C.கோமதி) ஆகிய மூன்று மருத்துவ அலுவலர்களது பணி நியமன ஆணையை இரத்து செய்யவும் மேலும் பணியில் சேர்ந்த 3 மருத்துவ அலுவலர்களது பணி நியமனத்திற்கு அரசின் உறுதியாக்கம் பெறலாம்.

எனவே, டாக்டர்.வி.சி.பூர்ணசந்திரன், டாக்டர்.ஜே.சுகிர்தராஜ் சாமுவேல், மற்றும் டாக்டர்.எஸ்பி.கே. சௌபாக்கியலட்சுமி ஆகியோரை ரூ.8000–275–13500 என்ற ஊதிய விகிதத்தில் அரசின் உறுதியாக்கத்திற்குட்பட்டு 03.12.2008 முதல் மருத்துவ அலுவலர்களாக பணி நியமனம் செய்யப்பட்டதற்கும், டாக்டர். ஜே.சுகிர்தராஜ் சாமுவேல், என்பவர் வயது வரம்பு கடந்து பணி நியமனம் செய்யப்பட்டுள்ளதால் இவர் பொருட்டு அரசிடம் வயது தளர்வாணை பெறுவதற்கும் மன்றத்தின் பின்னேற்பு அனுமதியும் அரசின் உறுதியாக்கம் பெற அரசுக்கு செயற்குறிப்பு அனுப்ப நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:சு.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(து.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**மா.கு.ந.(ம)ம.கு.ந.எண்.எப்4/1643/2009**

**ஆணையாளர் அவர்களின் 18.05.2009 நாளிட்ட குறிப்பு**

**28.05.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :117/2009 பொருள் எண்.39

**துணை திட்ட ஓங்கிணைப்பாளர் பதவி உயர்வு**

சென்னை மாநகராட்சி, மாவட்ட குடும்ப நலத்துறையில் அரசாணை எண். 79 சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை நாள் 09.03.2001 ன் படி ஒரு துணை திட்ட ஒருங்கிணைப்பாளர் பதவியினை, (DEPUTY PROJECT CO-ORDINATOR) தொடர அரசு அனுமதி வழங்கியுள்ளது.

அரசாணை எண். 161 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மா.ந.3/ நாள் 28.08.98 ன் படி மேற்படி பதவிக்கான வரையறுக்கப்பட்டுள்ள பணி விதிகள் மற்றும் காலமுறை ஊதியம் பின்வருமாறு சமர்ப்பிக்கப்படுகிறது.

| பதவியின் பெயர்(ம) ஊதிய விகிதம் | நியமன முறை | தகுதி |
|---|---|---|
| துணை திட்ட ஒருங்கிணைப்பாளர் 14300–400–18300 | மாவட்ட குடும்ப நலத்துறையில் மாவட்ட குடும்ப நல மருத்துவ அலுவலர் பதிவியிலிருந்து பதவி உயர்வு மூலம் | மாவட்ட குடும்ப நலத்துறையில் மாவட்ட குடும்ப நல மருத்துவ அலுவலராக இரண்டு வருடங்கள் தொடர்ந்து பணியாற்றி இருக்க வேண்டும் |
| | 2) மாநில அரசு கட்டுப்பாட்டில் இயங்கும் எந்த ஒரு துறை அல்லது நிறுவனத்திடமிருந்து அயற்பணி அடிப்படையில் நியமித்தல் | தமிழ் நாடு அரசின் கட்டுப்பாட்டில் உள்ள துறையிலோ அல்லது ஒரு நிறுவனத்திலோ துணை திட்ட ஒருங்கிணைப்பாளர் அலுவலருக்கு இணையான பதவியில், பொறுப்பில் இரண்டு ஆண்டுக்கு குறையாது பணிபுரிந்திருத்தல் வேண்டும் |

துணை திட்ட ஒருங்கிணைப்பாளர் பதவி சென்னை மாநகராட்சி பணியமைப்பில் வகுப்பு 1–B யின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளதால் சென்னை மாநகராட்சி சட்ட விதி 1919, 85(3) (b) யின் படி இப்பதவியினை அரசின் உறுதியாக்கத்திற்குட்பட்டு பணிநியமனம் செய்திட மன்றம் அதிகாரம் பெற்றுள்ளது.

மேற்படி பதவிக்கு தெரிவுப்பட்டியல் தயாரிக்க மைய நாள் ஒவ்வொரு ஆண்டு பிப்ரவரி முதல் நாள் ஆகும். கடைசியாக டாக்டர். திருமதி. கே.திவ்யசுந்தரி, மாவட்ட குடும்ப நல மருத்துவ அலுவலர் என்பவருக்கு 13.11.08 நாளிட்ட ஆணையின் படி (மா.கு.ந.(ம) ம.கு.ந.எண்.எப்4/2026/07) துணை திட்ட ஒருங்கிணைப்பாளராக பதவி உயர்வு வழங்கப்பட்டது. அரசின் உறுதியாக்கம் எதிர்பார்க்கப்படுகிறது. டாக்டர். திருமதி. கே.திவ்யசுந்தரி என்பவர் வயது முதிர்வு காரணமாக 31.05.09 அன்று ஓய்வு பெறவுள்ளார்.

துணை திட்ட ஒருங்கிணைப்பாளர் பதவியினை மேற்படி அலுவலர் ஓய்வு பெறுவதை முன்னிட்டு இப்பதவியினை நிரப்ப 01.02.09ஐ மைய நாளாகக் கொண்டு தெரிவுப்பட்டியல் தயாரிக்க வேண்டியுள்ளது, மேலும், இப்பதவியின் அவசியத்தினை கருத்தில் கொண்டு பின் வரும் காரணங்களுக்காக நிரப்ப வேண்டியுள்ளது .

1) சென்னை மாநகராட்சி, மாவட்ட குடும்ப நலத்துறையின் மூலம் சென்னை மாநகரில் வாழும் சுமார் 50 இலட்சம் மக்களில் 50 விழுக்காடு தாய்சேய் நல மருத்துவ சேவை அளிக்கப்படுகிறது.
2) 93 நகர நலவாழ்வு மையங்கள் 11 மகப்பேறு மருத்துவமனை, இரண்டு 24 மணி நேர அவசர மருத்துவமனை மூலம் மேற்கூறப்பட்ட சென்னை நகர் மக்களுக்கு மருத்துவ சேவை அளிக்கப்படுகிறது.
3) மேலும், 8 மண்டலங்களில் குறுகிய காலத்தில் 24 மணி நேர அவசர மருத்துவ மனை ஏற்படுத்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.
4) டாக்டர். முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு திட்டத்தின் கீழ் ஆண்டுதோறும் சுமார் 21,984 கர்ப்பிணி தாய்மார்களுக்கு தலா ரூ. 6000/– வீதம் நிதி வழங்கும் திட்டம் செயல்படுத்தபட்டுவருகிறது.
5) மூவலூர் இராமமிர்தம் அம்மையார் நினைவு திட்டத்தின் கீழ் ஆண்டுதோறும் சுமார் 1140 பயனாளிகளுக்கு திருமண நிதி உதவி ரூ. 20000/– வழங்கும் திட்டம் செயல்படுத்ததப்படுகிறது.
6) மத்திய அரசு திட்டமான ஜனனி சுராக்ஷா யோஜானா திட்டத்தின் கீழ் (கர்ப்பிணி பெண்களுக்கு) தலா ரூ. 600/– வீதம் சுமார் 7000 பயனாளிக்கு உதவி வழங்கு திட்டம் செயல்படுத்தப்படுகிறது.
7) ஆண்டு தோறும் சுமார் 14,000 தாய்மார்களுக்கு கருத்தடை அறுவை சிகிச்சை நடைபெறுகிறது.
8) 2004 ம் ஆண்டு முதல் சென்னை மாநகராட்சியில் சிக்கலான பிரசவம் (சிசேரியன் மூலம்) நடைபெறுகின்றன.

| வரிசை எண் | நிகழ்வுகள் | 2006–07 | 2007–08 | 2008–09 |
|---|---|---|---|---|
| 01. | பிரசவம் மற்றும் சிக்கலான பிரசவம் | 13629 | 14300 | 14,359 |
| 02. | குடும்ப நல கருத்தடை சிகிச்சை | 11732 | 12433 | 12,121 |
| 03. | காப்பர் டி | 21444 | 21944 | 21,775 |
| 04. | ஒரு வயது குழந்தைகளுக்கு போலியோ தடுப்பூசி | 78921 | 79054 | 68,568 |
| 05. | கருச்சிதைவு | | | 3,587 |

சென்னை மாநகரில் பெருகி வரும் மக்கள் தொகையில் பொருளாதார மற்றும் நலிவுற்ற மக்களுக்கு குறிப்பாக தாய்சேய் நலப்பணியினை விரிவுப்படுத்தி அன்றாட மருத்துவ சேவைகளை நிறைவேற்றிட துணை திட்ட ஒருங்கிணைப்பாளர் பதவியினை உடனடியாக நிரப்பலாம்.

சென்னை மாநகராட்சி, மாவட்ட குடும்ப நலத்துறையில் வரையறுக்கப்பட்ட பணி விதிகளின் படி துணை திட்ட ஒருங்கிணைப்பாளர் பதவியினை ஊட்ட பதவியான மாவட்ட குடும்ப நல மருத்துவ அலுவலர் பதவி மூலம் நிரப்பட வேண்டும். தற்போது மாவட்ட குடும்ப நல மருத்துவ அலுவலர் பதவியில் பின்வரும் அலுவலர் அவரது பெயருக்கெதிரே குறிப்பிட்டுள்ள தேதி முதல் சிறந்த முறையில் பணியாற்றி வருகிறார்.

| *வ. எண்* | *பெயர்* | *மாவட்ட குடும்ப நல மருத்துவ அலுவலர் பணியில் சேர்ந்த நாள்* |
|---|---|---|
| 01 | டாக்டர். திருமதி. கே. விஜயா | 05.12.2007 |

வரையறுக்கப்பட்டுள்ள பணி விதிகளின்படி மேற்படி அலுவலர் அனைத்து தகுதிகள் பெற்றுள்ள போதிலும் ஊட்டப்பதவியான மாவட்ட குடும்ப நல மருத்துவ அலுவலர் பதவியில் இரண்டு ஆண்டுகாலம் பணி நிறைவு செய்யவில்லை. பின்வரும் காரணங்களுக்காக இவரது பெயர்களை துணை திட்ட ஒருங்கிணைப்பாளர் பதவிக்காக பரிசீலிக்க வேண்டியுள்ளது.

டாக்டர் திருமதி.கே.விஜயா என்பவர் மாவட்ட குடும்ப நலத்துறையில் மண்டல அலுவலர் பதவியில் முறையாக 3 ஆண்டுகாலம் பணி நிறைவு செய்துள்ளதாலும், மேலும் ஏற்கனவே மண்டல அலுவலர் பதவியில் 4 வருடங்களாக கூடுதல் பொறுப்பாக கவனித்து வந்ததாலும் அத்துடன் மருத்துவ அலுவலர் பதவியில் 20 ஆண்டுகாலம் பணி நிறைவு செய்து அனுபவம் மிக்க அலுவலராக ஆனதால் இவரது பெயரினைக் கொண்டு துணை திட்ட ஒருங்கிணைப்பாளர் பதவிக்கான தெரிவுப்பட்டியலில் பரிசீலிக்கலாம்.

(அ) 01.02.2009 ஐ மைய நாளைக் கொண்டு மாவட்ட குடும்ப நலத்துறையில் துணை திட்ட ஒருங்கிணைப்பாளர் பதவிக்கான தெரிவுப்பட்டியலில் டாக்டர். திருமதி. கே. விஜயா என்பவரது பெயரினை கொண்டு தெரிவுப்பட்டியல் தயாரிக்கவும்,

(ஆ) துணை திட்ட ஒருங்கிணைப்பாளர் பதவியில் வரையறுக்கப்பட்ட பணி விதிகளின் படி ஊட்ட பதவியில் 2 ஆண்டுகாலம் பணி நிறைவு செய்திருக்க வேண்டும் என்பதிலிருந்து தளர்வு செய்து இதர தகுதிகள் பூர்த்தி செய்துள்ள டாக்டர் திருமதி. கே. விஜயா என்பவரது பெயரைக் கொண்டு தயாரிக்கப்பட்ட தெரிவுப்பட்டியலுக்கு ஒப்புதல் வேண்டியும்,

(இ) துணை திட்ட ஒருங்கிணைப்பாளர் பதவிக்கு பணி விதிகளின் படி மாவட்ட குடும்ப நல மருத்துவ அலுவலர் பதவியில் 2 ஆண்டுகாலம் பணிபுரிந்திருக்க வேண்டும் என்ற விதிமுறையிலிருந்து டாக்டர். திருமதி. கே. விஜயா என்பவருக்கு தளர்வு செய்து இவரை துணை திட்ட ஒருங்கிணைப்பாளர் பதவியில் ரூ. 14300–400–18300 என்ற கால முறை ஊதிய விகிதம் மற்ற இதர படிகளுடன் தற்காலிகமாக அரசாணையை எதிர்நோக்கி இவருக்கு பதவி உயர்வு வழங்குவதற்கும் மற்றும் அரசுக்கு செயற்குறிப்பு அனுப்பவும் மன்றத்தின் அனுமதி நியமனக்குழு மூலம் வேண்டப்படுகிறது,

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:மா.கு.ந.து.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**பொ.து.ந.க.எண்.ஈ2/37131/2008**
**ஆணையாளர் அவர்களின் 28.02.2009 நாளிட்ட குறிப்பு**

**28.05.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :118/2009 பொருள் எண். 40

**பணிவிதி திருத்தம்**

சென்னை மாநகராட்சி பொதுப்பணி விதிகளின் கீழ் பின்வரும் பதவிகள் அடங்கியுள்ளன:–

| வ.எண். | பதவியின் பெயர் |
|---|---|
| 1 | மண்டல அலுவலர் |
| 2 | கூடுதல் வருவாய் அலுவலர் |
| 3 | உதவி வருவாய் அலுவலர் |

மேற்படி பதவியினை நியமனம் செய்யும் அதிகாரம் மற்றும் ஊட்ட பதவியில் உள்ள தகுதி பணிக்காலம் பின்வருமாறு பட்டியலிடப்படுகிறது.

| வ எண் | பதவியின் பெயர் | வகைப்பாடு / நியமனம் செய்யும் அதிகாரம் | ஊட்ட பதவியில் உள்ள தகுதி பணிக்காலத்தின் விவரம் |
|---|---|---|---|
| 1 | மண்டல அலுவலர் | வகுப்பு – 1 ஏ அரசு | வரையறுக்கப்பட்டுள்ள பணிவிதிகளின்படி பொதுப்பணி / பொறியாளர் பணி / சுகாதாரப்பணி விதிகளிலிருந்து பதவி உயர்வு மூலம் மண்டல அலுவலர் பதவியினை நிரப்ப ஊட்ட பதவியில் மூன்றாண்டு காலம் பணி நிறைவு செய்திருக்க வேண்டும். |
| 2 | கூடுதல் வருவாய் அலுவலர் | வகுப்பு – 1 பி மன்றம் | வரையறுக்கப்பட்டுள்ள பணிவிதிகளின்படி ஊட்ட பதவியான உதவி வருவாய் அலுவலர் பதவியில் மூன்றாண்டு காலம் பணி நிறைவு செய்திருக்க வேண்டும். |
| 3 | உதவி வருவாய் அலுவலர் | வகுப்பு – 2 மன்றம் | வரையறுக்கப்பட்டுள்ள பணிவிதிகளின்படி ஊட்ட பதவியான வரிமதிப்பீட்டாளர் பதவியில் ஐந்தாண்டு காலம் பணி நிறைவு செய்திருக்க வேண்டும். |

சென்னை மாநகராட்சியில் மேற்படி பதவியில் உள்ள அலுவலர்களின் பணி முக்கியத்துவம் வாய்ந்த பதவியாகும். சென்னை மாநகரில் பெருகி வரும் மக்கள் தொகை / வளர்ந்து வரும் கட்டுமானங்கள் / வணிக வளர்ச்சிகளுக்கு சொத்து வரி நிர்ணயிப்பது, தொழில் வரி நிர்ணயிப்பது மற்றும் சென்னை மாநகராட்சி வருவாயை உயர்த்தும் வகையில் களப்பணிகள் செய்ய வேண்டிய அத்தியாவசிய பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

வரையறுக்கப்பட்ட பணிவிதிகளில் ஊட்ட பதவியில் முறையே மூன்றாண்டு / ஐந்தாண்டு என்று பணிக்காலம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதால் மேற்படி முக்கிய பதவிகளில் பணிநியமனம் செய்ய நிர்வாக ரீதியாக சிக்கல்கள் ஏற்படுகிறது. எனவே மேற்படி பணிகாலத்தினை குறைத்து பணிவிதிகளில் சில திருத்தங்கள் செய்து அரசுக்கு செயற்குறிப்பு அனுப்ப முடிவெடுக்கப்பட்டுள்ளது.

அரசாணை எண்.291, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந3) துறை, நாள் 12.11.1996ல் மண்டல அலுவலர் பதவிக்கான பணிவிதிகள் பின்வருமாறு :–

<u>பொ.து.ந.க.எண்.ஈ2/37131/2008</u>

| Name of the post / Scale of Pay | Method of Appointment | Qualification |
|---|---|---|
| Zonal Officer<br>Scale of pay (12000-375-16500) | (i) By appointment of Junior I.A.S., Officers or District Revenue Officers on deputation; or<br>(ii) By appointment of Municipal Commissioners of Special Grade and above from Tamil Nadu Municipal Commissioner Service on deputation; or<br>(iii) By appointment of officers from any other State Service on deputation; or<br>**(iv) By transfer from the holders of the post of Additional Revenue Officers and by promotion from the holders of the post of Chief Accounts Officer and Personal Assistant to Commissioner, or**<br>**(v) By promotion from the holders of the post of Additional Health Officer; or**<br>**(vi) By promotion from the holders of the post of Executive Engineer and Divisional Electrical Engineer; and the ratio between the officers in item Nos. (iv), (v) and (vi) shall be 3 : 2 : 5.**<br>*EXPLANATION* : Promotion to the post shall be made on the grounds of merit and ability, seniority being considered where merit and ability are approximately equal. | 1) Graduate of any recognized University.<br>**<u>2) Must have worked atleast for period of 3 years in the category from which they are selected by promotion</u>**<br>3) Must have passed Account Test for Subordinate Officers Part I or Account Test for Executive Officers. |

குறிப்பு – பணிக்காலத்திற்கு மட்டுமே மாற்றம் தேவைப்படுகிறது.

**NOTE :- Except for the service qualification the method of appointment may not be changed.**

<u>பணிவிதிகளுக்கு தேவைப்படும் திருத்தம்</u>

## <u>PROPOSED SERVICE RULES FOR AMENDMENT</u>

| Name of the post / Scale of Pay | Method of Appointment | Qualification |
|---|---|---|
| Zonal Officer<br>Scale of pay (12000-375-16500) | (i) By appointment of Junior I.A.S., Officers or District Revenue Officers on deputation; or<br>(ii) By appointment of Municipal Commissioners of Special Grade and above from Tamil Nadu Municipal Commissioner Service on deputation; or<br>(iii) By appointment of officers from any other State Service on deputation; or<br>(iv) By transfer from the holders of the post of Additional Revenue Officers / Chief Accounts Officer ; or<br>(v) By transfer from the holders of the post of Additional Health Officer; or<br>(vi) By transfer from the holders of the post of Executive Engineer and Divisional Electrical Engineer ; and the ratio between the officers in item Nos. (iv), (v) and (vi) shall be 3 : 2 : 5.<br>*EXPLANATION* : Transfer to the post shall be made on the grounds of merit and ability, seniority being considered where merit and ability are approximately equal. | 1) Graduate of any recognized University.<br>2) Must have passed Account Test for Subordinate Officers Part I or Account Test for Executive Officers.<br>**<u>3) Must have worked atleast for a period of 2 years in the category from which they are selected by transfer</u>.** |

அரசாணை எண்.152, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந3) துறை, நாள் 16.06.1999ல் கூடுதல் வருவாய் அலுவலர் பதவிக்கான பணிவிதிகள் பின்வருமாறு :–

| | Class/ Category and Name of the post / Scale of pay | Method of Appointment | Qualification |
|---|---|---|---|
| **1.** | **CLASS-I-B**<br>Additional Revenue Officer<br>Rs.12000-375-16500 | By promotion from Assistant Revenue Officer | (i) A Graduate of a Recognised University.<br>(ii) A pass in the Account Test for subordinate Officers Parts I and II or any other Accounts Test prescribed by the Government or equivalent thereto<br>(iii) A pass in the Revenue Test Parts I to III prescribed for the Tamil Nadu Revenue Subordinate Service or any other Revenue Test prescribed by the Government or equivalent thereto; and.<br>**(iv) A minimum experience of three years as Assistant Revenue Officer.** |

**பணிவிதிகளுக்கு தேவைப்படும் திருத்தம்**

## PROPOSED SERVICE RULES FOR AMENDMENT

| | Class/ Category and Name of the post / Scale of pay | Method of Appointment | Qualification |
|---|---|---|---|
| **1.** | **CLASS-I-B**<br>Additional Revenue Officer<br>Rs.12000-375-16500 | By promotion from Assistant Revenue Officer | (i) A Graduate of a Recognised University.<br>(ii) A pass in the Account Test for subordinate Officers Parts I and II or any other Accounts Test prescribed by the Government or equivalent thereto<br>(iii) A pass in the Revenue Test Parts I to III prescribed for the Tamil Nadu Revenue Subordinate Service or any other Revenue Test prescribed by the Government or equivalent thereto; and.<br>**(iv) Must be an approved probationer in the feeder post i.e. A.R.O.** |

அரசாணை எண்.701, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி துறை, நாள் 20.04.1970ல் உதவி வருவாய் அலுவலர் பதவிக்கான பணிவிதிகள் பின்வருமாறு :–

| | Class/ Category and Name of the post / Scale of pay | Method of Appointment | Qualification |
|---|---|---|---|
| 1. | **CLASS-II**<br>Asst. Revenue Officer<br>Rs.8000-275-13500 | (a) By promotion from the post of Assessor. | (i) A Graduate of a Recognised University.<br>**<u>(ii) Must be an approved probationer in the category of Superintendent of Taxes or must have served as Assessor for a period of not less than five years;</u>**<br>(iii) A pass in the Account Test for subordinate Officers Parts I and II or any other Accounts Test prescribed by the Government or equivalent thereto;<br>(iv) A pass in the Revenue Test Parts I to II prescribed for the Tamil Nadu Revenue Subordinate Service or any other Revenue Test prescribed by the Government or equivalent thereto. |
| | | (b) By appointment on deputation. | (i) A Graduate of a Recognised University; and<br>(ii) Must have served as Municipal Commissioner, Second Grade or Third Grade for a period of not less than five years. |

## பணிவிதிகளுக்கு தேவைப்படும் திருத்தம்

## PROPOSED SERVICE RULES FOR AMENDMENT

| | Class/ Category and Name of the post / Scale of pay | Method of Appointment | Qualification |
|---|---|---|---|
| 1. | **CLASS-II**<br>Asst. Revenue Officer<br>Rs.8000-275-13500 | (a) By promotion from the post of Assessor. | (i) A Graduate of a Recognised University.<br>**<u>(ii) Must have served as Assessor for a period of not less than two years;</u>**<br>(iii) A pass in the Account Test for subordinate Officers Parts I and II or any other Accounts Test prescribed by the Government or equivalent thereto;<br>(iv) A pass in the Revenue Test Parts I to II prescribed for the Tamil Nadu Revenue Subordinate Service or any other Revenue Test prescribed by the Government or equivalent thereto. |
| | | (b) By appointment on deputation by Government of Tamil Nadu. | (i) A Graduate of a Recognised University; and<br>(ii) Must have served as Municipal Commissioner, Second Grade or Third Grade for a period of not less than five years. |

எனவே, மேற்படி வரையறுக்கப்பட்டுள்ள பணிவிதிகளுக்கு தகுதி பணி காலத்திற்கு மட்டும் திருத்தம் செய்து அரசாணை பெற அரசுக்கு செயற்குறிப்பு அனுப்ப மன்றத்தின் அனுமதி நியமனக்குழு மூலமாக வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(த.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**பொ.து.ந.க.எண்.ஈ2/12480/09.**
**ஆணையரின் 18.05.2009 நாளிட்ட குறிப்பு**

**28.05.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :119/2009 பொருள் எண்.41

**பணியமைப்பு – வருவாய் அலுவலர் பதவிக்கான தெரிவுப்பட்டியல்**

சென்னை மாநகராட்சி வருவாய்த் துறையில், வருவாய் அலுவலராக பணிபுரிந்த திரு.எம். நாமதேவ் என்பவர் 31.05.2008 அன்று வயது முதிர்வு ஓய்வு பெற்றதால் வருவாய் அலுவலர் பணியிடம் காலியாகவுள்ளது.

சென்னை மாநகராட்சி பணியமைப்பில் வருவாய் அலுவலர் பதவி வகுப்பு–1ஏ என வகைப்படுத்தப்பட்டுள்ளது. சென்னை மாநகராட்சி சட்ட விதி 1919 துணை விதி 85 (3) (a)ன்படி இப்பதவிக்கான தெரிவுப்பட்டியலுக்கு ஒப்புதல் அளிக்கும் அதிகாரம் மற்றும் பணியமர்வு ஆணை வழங்கும் அதிகாரம் ஆகியவை அரசின் வசம் உள்ளது.

சென்னை மாநகராட்சி வருவாய் அலுவலர் பதவிக்கான தெரிவுப்பட்டியல் தயாரிக்கும் மைய நாள் ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் முதல் நாளாகும். இப்பதவியில் அரசாணை எண்.2(ப) 62, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந3) துறை, நாள் 29.04.2008ன்படி திரு.எம். நாமதேவ் என்பவர் பதவி உயர்வின் மூலம் வருவாய் அலுவலராக பணியமர்த்தப்பட்டார். இவர் வயது முதிர்வு காரணமாக 31.05.2008 அன்று ஓய்வு பெற்றுவிட்டதால் வருவாய் அலுவலர் பதவிக்கு தெரிவுப்பட்டியல் தயாரிக்க வேண்டியுள்ளது.

சென்னை மாநகராட்சி பொது பணி விதிகள் 1970ன்படி வருவாய் அலுவலர் பதவிக்கான பணிநியமன விதிகள் பின்வருமாறு :–

| Class/ Category and Name of the post / Scale of pay | | Method of Appointment | Qualification |
|---|---|---|---|
| **CLASS-I-A** | | | |
| 1. | **Revenue Officer**<br><br>(Rs.12000-375-16500) | (a) By appointment on deputation.<br><br>(b) By transfer from Additional Revenue Officer | A Graduate of a recognized University.<br>(i) A pass in the Accounts Test for Subordinate Officers Parts I and II or any other Accounts Test prescribed by the Government as equivalent thereto;<br>(ii) A pass in the Revenue test Parts I to III prescribed for the Madras Revenue Subordinates Service; and<br>(iii) Adequate experience for a period of not less than five years of collection and administration. |

மேற்படி வரையறுக்கப்பட்டுள்ள பணிவிதிகளின்படி 01.04.2008ஐ மைய நாளாக கொண்டு வருவாய் அலுவலர் பதவிக்கான தெரிவுப்பட்டியல் தகுதி வாய்ந்த நபர் இல்லாததால் தயாரிக்கப்படவில்லை.

எனவே, 01.04.2009ஐ மைய நாளாக கொண்டு வருவாய் அலுவலர் பதவிக்கான தெரிவுப்பட்டியலுக்கு பின்வரும் அலுவலரது பெயரினை பரிசீலிக்க வேண்டியுள்ளது .

**பொ.து.ந.க.எண்.ஈ2/12480/09.**

| வ. எண். | பெயர் மற்றும் பதவி | குறிப்புரை |
|---|---|---|
| 1 | திரு.பா. ராமநாதன், கூடுதல் வருவாய் அலுவலர் | இவர் 18.08.2008 அன்று கூடுதல் வருவாய் அலுவலராக பதவி உயர்வு பெற்றுள்ளார். இவரை கூடுதல் வருவாய் அலுவலராக பணியமர்வு செய்ததற்கு அரசாணை (ப) எண்.145, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.3) துறை, நாள் 31.03.2009ல் அரசு உறுதியாக்கம் வழங்கியுள்ளது. இவர் மீது துறை சம்பந்தமாக ஒழுங்கு நடவடிக்கையோ, விசாரணையோ ஏதும் நிலுவையில் இல்லை. இவர் வரையறுக்கப்பட்டுள்ள பணிவிதிகளின்படி அனைத்து தகுதிகள் பெற்றுள்ளதால் வருவாய் அலுவலர் பதவிக்கான தெரிவுப்பட்டியலில் இவரது பெயரினை பரிசீலிக்கலாம். |

1) 01.04.2008ஐ மைய நாளாக கொண்டு வருவாய் அலுவலர் பதவிக்கான தெரிவுப்பட்டியல் தகுதிவாய்ந்த நபர் இல்லாததால் 2008ம் ஆண்டுக்கு தெரிவுப்பட்டியல் இல்லை (Nil panel) என்று தெரிவிக்கலாம்.

2) தற்போது கூடுதல் வருவாய் அலுவலராக பணிபுரிந்துவரும் திரு.பா. ராமநாதன் என்பவரைக் கொண்டு வருவாய் அலுவலர் பதவிக்கு ஒரு நபர் கொண்ட தெரிவுப்பட்டியல் தயாரித்து,

3) வருவாய் அலுவலர் பதவி உயர்வுக்கு கூடுதல் வருவாய் அலுவலர் திரு. பா. ராமநாதன் என்பவருக்கு ரூ.12000–375–16500 என்ற காலமுறை ஊதிய விகிதத்தில் வருவாய் அலுவலராக பதவி மாற்றம் வழங்க அரசுக்கு செயற்குறிப்பு அனுப்ப மன்றத்தின் அனுமதி நியமனக்குழு மூலமாக வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**பொ.து.ந.க.எண்.ஈ2/12481/09**
**ஆணையரின் 18.05.2009 தேதியிட்ட குறிப்பு**

**28.05.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :120/2009 பொருள் எண்.42

**பணியமைப்பு – கூடுதல் வருவாய் அலுவலர் பதவிக்கான தெரிவுப்பட்டியல்**

சென்னை மாநகராட்சி வருவாய்த்துறையில் கூடுதல் வருவாய் அலுவலர் பதவிக்கான அனுமதிக்கப்பட்ட பணியிடம் இரண்டாகும். இப்பதவிக்கான தெரிவுப்பட்டியல் தயாரிக்கும் மைய நாள் ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் முதல் நாளாகும்.

2009ம் ஆண்டு கூடுதல் வருவாய் அலுவலர் பதவிக்கான தெரிவுப்பட்டில் 01.04.2009 என்ற மைய நாளாகக்கொண்டு தயாரிக்கப்படவேண்டியுள்ளது. சென்னை மாநகராட்சி பொதுப்பணி விதிகளின்படி கூடுதல் வருவாய் அலுவலர் பதவிக்கான நியமன முறை மற்றும் தகுதிகள் பின்வருமாறு :

| | Class/ Category and Name of the post / Scale of pay | Method of Appointment | Qualification |
|---|---|---|---|
| **1.** | **CLASS-I-B**<br>Additional Revenue Officer<br>Rs.12000-375-16500 | By promotion from Assistant Revenue Officer | (i) A Graduate of a Recognised University.<br>(ii) A pass in the Account Test for subordinate Officers Parts I and II or any other Accounts Test prescribed by the Government or equivalent thereto<br>(iii) A pass in the Revenue Test Parts I to III prescribed for the Tamil Nadu Revenue Subordinate Service or any other Revenue Test prescribed by the Government or equivalent thereto; and.<br>(iv) A minimum experience of three years as Assistant Revenue Officer. |

சென்னை மாநகராட்சி பணியமைப்பில் கூடுதல் வருவாய் அலுவலர் பதவி வகுப்பு–1(பி)ன் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளது. சென்னை மாநகராட்சி சட்ட விதி 1919 பிரிவு 85 (3) (பி)ன்படி இப்பதவிக்கான தெரிவுப்பட்டியலுக்கு ஒப்புதல் அளிக்கும் அதிகாரம் மற்றும் அரசின் உறுதியாக்கத்திற்குட்பட்டு இப்பதவியினை நிரப்பும் அதிகாரம் ஆகியவற்றை மன்றம் பெற்றுள்ளது.

கூடுதல் வருவாய் அலுவலர் பதவியில் ஏற்படவுள்ள காலிப்பணியிடங்களின் விவரம் பின்வருமாறு :–

| வ.எண். | கூடுதல் வருவாய் அலுவலரின் பெயர் திருவாளர்கள் | கூடுதல் வருவாய் அலுவலர் பதவியில் ஏற்பட்டுள்ள / ஏற்படவுள்ள காலிப்பணியிடங்களுக்கான விவரம் |
|---|---|---|
| 1 | பா. ராமநாதன் | இவரது பெயர் வருவாய் அலுவலர் பதவிக்கு பரிசீலிக்கப்பட்டு வருவதால் கூடுதல் வருவாய் அலுவலர் பதவியில் காலிப்பணியிடம் ஏற்படவுள்ளது. |
| 2 | ப்பி. கருணாகரன் | 31.07.2009 அன்று வயது முதிர்வு அடிப்படையில் ஓய்வு பெறவுள்ளதால் கூடுதல் வருவாய் அலுவலர் பதவியில் காலிப்பணியிடம் ஏற்படவுள்ளது. |

கூடுதல் வருவாய் அலுவலர் பதவிக்கு பின்வரும் அலுவலர்களின் பெயர்களை பரிசீலிக்க வருவாய் துறை குறிப்பு அனுப்பியுள்ளது.

<u>பொ.து.ந.க.எண்.ஈ2/12481/09</u>

1) திரு.எம்.சி. கோபால்ரத்தினம், உதவி வருவாய் அலுவலர்,
2) திரு சி. வெங்கடேசன், உதவி வருவாய் அலுவலர்.

மேற்படி அலுவலர்கள் குறித்த விவரம் பின்வருமாறு :–

| வ.எண். | பெயர் மற்றும் பதவி | குறிப்புரை |
|---|---|---|
| 1 | திரு. எம்.சி. கோபால்ரத்தினம், உதவி வருவாய் அலுவலர் | இவர் வரையறுக்கப்பட்டுள்ள விதிகளின்படி கூடுதல் வருவாய் அலுவலர் பதவிக்கான அனைத்து தகுதிகளையும் பூர்த்தி செய்துள்ளதாலும், இவர் மீது துறை சம்பந்தமாக ஒழுங்கு நடவடிக்கை ஏதும் நிலுவையில் இல்லாததாலும் இவரது பெயரினை கூடுதல் வருவாய் அலுவலர் பதவிக்கான தெரிவுப்பட்டியலில் சேர்க்கலாம். |
| 2 | திரு. சி. வெங்கடேசன், உதவி வருவாய் அலுவலர் | இவர் வரையறுக்கப்பட்டுள்ள விதிகளின்படி கூடுதல் வருவாய் அலுவலர் பதவிக்கான அனைத்து தகுதிகளையும் பூர்த்தி செய்துள்ளதாலும், இவர் மீது துறை சம்பந்தமாக ஒழுங்கு நடவடிக்கை ஏதும் நிலுவையில் இல்லாததாலும் இவரது பெயரினை கூடுதல் வருவாய் அலுவலர் பதவிக்கான தெரிவுப்பட்டியலில் சேர்க்கலாம். |

எனவே,

(அ) 01.04.2009ஐ மைய நாளாகக்கொண்டு கூடுதல் வருவாய் அலுவலர் பதவிக்கு, பின்வரும் உதவி வருவாய் அலுவலர்கள் பெயர்களைக் கொண்ட தெரிவுப்பட்டியலுக்கு ஒப்புதலும்,
1) திரு.எம்.சி. கோபால்ரத்தினம்,
2) திரு சி. வெங்கடேசன்.

(ஆ) 2009ம் ஆண்டு ஏற்பட்டுள்ள / ஏற்படவுள்ள கூடுதல் வருவாய் அலுவலர் பதவிக்கான காலிப்பணியிடங்களை மேற்படி தெரிவுப்பட்டியலில் இடம் பெற்றுள்ள நபர்களைக்கொண்டு அரசின் உறுதியாக்கத்திற்குட்பட்டு தற்காலிகமாக கூடுதல் வருவாய் அலுவலராக பதவி உயர்வு அளித்து ரூ.12000–375–16500 ( இதர படிகளுடன் ) என்ற காலமுறை ஊதிய விகிதத்தில் பணிநியமனம் செய்திடவும்,

(இ) மேற்படி பணிநியமனம் வழங்கப்பட்ட பின்பு அரசின் உறுதியாக்கம் பெற உரிய செயற்குறிப்புகள் அரசுக்கு அனுப்பவும்,

நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**பொ.து.ந.க.எண்.ஈ1/11642/2008**
**ஆணையாளர் அவர்களின்19.05.2009 நாளிட்ட குறிப்பு**

**28.05.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :121/2009 பொருள் எண்.43

**கோட்ட மின் பொறியாளர் தெரிவுப்பட்டியல்**

சென்னை மாநகராட்சி கோட்ட பொறியாளர் (மின்) பதவி வகுப்பு 2ன் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளது. இப்பதவிக்கான தெரிவு பட்டியலுக்கு ஒப்புதல் அளிக்கும் அதிகாரம் மற்றும் அரசின் உறுதியாக்கத்திற்குட்பட்டு பதவி உயர்வு வழங்கும் அதிகாரம் ஆகியன மன்றம் பெற்றுள்ளது. இப்பதவிக்கான மைய நாள் ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் மாதம் முதல் தேதியாகும். இப்பதவிக்கான ஊட்டப்பதவி உதவி கோட்ட மின் பொறியாளர் பதவியாகும்.

கோட்ட பொறியாளர் (மின்சாரம்) பதவியினை பதவி உயர்வின் மூலம் நிரப்பிட வகுக்கப்பட்டுள்ள நியமனவிதிகள் பின்வருமாறு.

| Name of the Post | Method of Appointment | Qualification |
|---|---|---|
| Divisional Engineer (Electrical) Rs.10000-325-15200 (அரசாணை 296 ந.நி.(ம) கு.நீ.வ.துறை நாள் 12.03.87 | By Promotion from the category of Asst. Divisional Engineer (Electrical) of this service) | Must have put in a service of not less then five years in the post of Asst. Divisional Engineer (Electrical) |

01.04.2008 ஐ மைய நாளாகக் கொண்டு கோட்ட பொறியாளர் (மின்சாரம்) பதவிக்கு தெரிவு பட்டியல் தயாரிக்க மேற்பார்வை பொறியாளர் மின்சாரம் அவர்களிடம் விவரம் கோரப்பட்டது. துறைத் தலைவர் தனது 20.06.2008 நாளிட்ட குறிப்பின்படி கீழ்கண்ட நபர்களை பரிந்துரை செய்துள்ளார்.
1) திரு.என். சுப்பிரமணியன்
2) திரு.பி. முரளி
3) திரு.எஸ். அடைக்கல சாமிதாஸ்
4) திரு.என். ஜெயராமன்

இதன் தொடர்பாக சமர்ப்பிப்பது யாதெனில் வரிசை எண் 1ல் இடம் பெற்றுள்ள திரு.என். சுப்பிரமணியன் அவர்கள் 01.07.2007 முதல் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராத காரணத்தினால் தனியர் மீது சென்னை மாநகராட்சி (வகைப்பாடு ஒழுங்கு மற்றும் மேல் முறையீடு) விதி 1970ன்படி பிரிவு 10(பி) கீழ் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டு மைய நாளில் ஒழுங்கு நடவடிக்கை நிலுவையில் இருந்தது. ஆகவே திரு.என். சுப்பிரமணியன் உதவி கோட்ட பொறியாளர் (மின்சாரம்) அவர்களின் பெயரை இத்தெரிவு பட்டியலில் சேர்க்காமல் ஒத்திவைக்கலாம். மேலும் வரிசை எண். 4ல் இடம் பெற்றுள்ள திரு.என். ஜெயராமன் அவர்களுக்கும் மண்டலம்–8ல் தெருவிளக்குகள் சரியாக எரியாதது காரணமாக சென்னை மாநகராட்சி (வகைப்பாடு ஒழுங்கு மற்றும் மேல் முறையீடு) விதி 1970ன்படி பிரிவு 10(பி) கீழ் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டு மைய நாளன்று ஒழுங்கு நடவடிக்கை நிலுவையில் இருந்தது. எனவே இவருடைய பெயரையும் இப்பட்டியலில் சேர்க்காமல் ஒத்திவைக்கலாம்.

மற்ற இரண்டு உதவி கோட்ட பொறியாளர்களுடைய மைய நாளுக்கு முந்தைய ஐந்து ஆண்டு காலத்திற்கான மந்தன அறிக்கை பெறப்பட்டு கோப்பில் இணைக்கப்பட்டுள்ளது.

கோட்ட பொறியாளர் (மின்சாரம்) திரு.கே.பி. அருணகிரி என்பவர் 05.02.2008 அன்று காலமானதால் ஒரு காலி பணியிடமும் 31.03.2008 அன்று கோட்ட பொறியாளர் (மின்சாரம்) நாகநாதன் என்பவர் வயது முதிர்வு காரணமாக பணியிலிருந்து ஒய்வு பெற்றதால் மற்றொரு காலிபணியிடமும் உருவாகியுள்ளது. எனவே கீழே இடம் பெற்றுள்ள இரண்டு உதவி கோட்ட பொறியாளர்களுக்கு காலியாக உள்ள இரண்டு கோட்ட பொறியாளர் பணியிடங்களில் பதவி உயர்வு அளித்து பணி நியமனம் செய்ய தேர்ந்த பட்டியலாக ஒப்புதல் அளிக்க ஆணை வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.
1) திரு.பி. முரளி
2) திரு.எஸ். அடைக்கல சாமிதாஸ்

**பொ.து.ந.க.எண்.ஈ1/11642/2008**

எனவே, கீழ்கண்ட இனங்களின் மீது நியமனக்குழு மூலம் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

1) திரு.என். சுப்பிரமணியன் மற்றும் திரு.என். ஜெயராமன் ஆகிய இரு உதவி கோட்ட பொறியாளர் (மின்சாரம்) மீதும் சென்னை மாநகராட்சி (வகைப்பாடு ஒழுங்கு மற்றும் மேல் முறையீடு) விதி 1970ன்படி பிரிவு 10(பி) கீழ் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டு மைய நாளன்று ஒழுங்கு நடவடிக்கை நிலுவையில் இருந்ததால் இவர்களது பெயரை கோட்ட பொறியாளர் (மின்சாரம்) பதவி உயர்வுக்கான தெரிவுப்பட்டியலில் சேர்க்காமல் தவிர்க்கவும்,

2) மற்ற இரண்டு உதவி கோட்ட பொறியாளர்களின் (மின்சாரம்) பெயர்களை கொண்ட கோட்ட பொறியாளர் (மின்சாரம்) பதவிக்கான தேர்ந்த பட்டியலாக ஒப்புதல் அளித்து காலிபணியிடத்தில் அரசின் உறுதியாக்கத்திற்குட்பட்டு ரூ.10000–325–15200 என்ற ஊதிய விகிதத்தில் தற்காலிகமாக பணி நியமனம் செய்யவும்,

3) அவ்வாறு பணி நியமனம் செய்யப்படும் கோட்ட பொறியாளர்களின் பதவியேற்ற நாளிலிருந்து பணி உறுதியாக்கம் செய்ய அரசுக்கு செயல் குறிப்பு அனுப்பவும்,

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(து.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**மி.து.ந.க.எண்.அ2/826/2009**

**ஆணையாளர் அவர்களின்18.05.2009 நாளிட்ட குறிப்பு**

**28.05.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :122/2009 பொருள் எண்.44

**வயது முதிர்வு ஓய்வு**

சென்னை மாநகராட்சி மின்துறையில் கோட்ட மின் பொறியாளராக பணிபுரியும் திரு.வி. குப்பன் அவர்கள் வரும் 31.05.2009 பிற்பகல் முதல் வயது முதிர்வு ஓய்வு பெற உள்ளார். அன்னாரது பிறந்த தேதி 15.05.1951 ஆகும்.

திரு. வி. குப்பன் அவர்கள் 01.06.1974 அன்று சென்னை மாநகராட்சி பணியில் ஓவர்சீர் (Overseer) ஆக சேர்ந்துள்ளார். அப்பதவியில் 01.06.1974 முதல் தகுதிகாண் பருவம் துவக்கப்பட்டு 31.05.1976 முதல் தகுதி காண் பருவத்தினராக அறிவிக்கப்பட்டுள்ளார். பின்னர் 08.06.1982 முதல் இளநிலை பொறியாளராக பதவி உயர்வு பெற்றுள்ளார்.

தனியர் 11.08.1993 அன்று உதவி கோட்ட பொறியாளராக பணியில் சேர்ந்துள்ளார். அரசாணை (ப) எண்.621 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை / நாள் 26.11.98ன் படி அரசினால் உறுதியாக்கம் செய்யப்பட்டு பொ.து.ந.க.எண்.ஈ1/51379/2004, நாள் 09.02.2004ன் படி உதவி கோட்ட மின் பொறியாளர் பதவியில் 11.08.93 முதல் பணி வரன்முறை செய்யப்பட்டுள்ளது. இவ்வாணையின் விவரம் தனியரது பணிப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

மேலும் சென்னை மாநகராட்சி ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை பொ.து.ந.க.எண்.ஈ1/20947/2006, நாள் 15.10.2007 ன் படி கோட்ட மின் பொறியாளராக (தெற்கு) 14.10.2007 பிற்பகல் பதவி உயர்வு பெற்றுள்ளார். இப்பணியில் பணி வரன்முறைப்படுத்த அரசின் உறுதியாக்கம் பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

சென்னை மாநகராட்சியில் அன்னார் மீது ஒழுங்கு நடவடிக்கை மற்றும் விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை. மேலும் விழிப்பு குழுமத்தில் இவர் மீது விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என்றும் அறிக்கை பெறப்பட்டுள்ளது. இவர் சென்னை மாநகராட்சி அலுவலர் கூட்டுறவு சங்கத்தில் உறுப்பினராக இல்லை என்றும் சான்றிதழ் பெறப்பட்டுள்ளது. இவரது ஓய்விற்கு பின்னர் இவரை பொறுப்பாக்கி தணிக்கை தடை மற்றும் நிதி இழப்பீடு இருப்பது பின்னர் தெரியவரின் இவரது பணிக்கொடை மற்றும் ஓய்வூதிய அகவிலைப்படிகளில் இருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனை உறுதி மொழிக்கடிதம் பெறப்பட்டுள்ளது.

சென்னை மாநகராட்சி பணியமைப்பில் கோட்ட மின் பொறியாளர் பதவி–2ன் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளது என்பதால், வயது முதிர்வு காரணமாக ஓய்வு பெறவதற்கு மன்றத்தின் அனுமதி பெறப்படல் வேண்டும்.

திரு. வி. குப்பன், கோட்ட மின் பொறியாளர் அவர்களை 31.05.2009 பிற்பகல் முதல் வயது முதிர்வு காரணமாக ஓய்வு பெற அனுமதிக்கும் பொருட்டு தணிக்கைத் தடை மற்றும் நிதி இழப்பீடுகளுக்கு இவர் பொறுப்பாகிறார் என்பது பின்னர் தெரியவரின் இவரது பணிக்கொடை மற்றும் ஓய்வூதியத்திலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்பட்டு அன்னாரை 31.05.2009 பிற்பகல் வயது முதிர்வு காரணமாக ஓய்வு பெற அனுமதிக்க நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:மி.து.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்